ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமானுஜாய நம:

ஸ்ரீரங்கநாயகி ஸமேத ஸ்ரீரங்கநாத பரப்ரஹ்மணே நம:

ஸ்ரீரங்கநாத திவ்யமணி பாதுகாப்யாம் நம:

ப்ரஹ்மாண்ட புராணத்தில் உள்ள

ஸ்ரீரங்க மாஹாத்ம்யம்

(மூலமும், உரையும்)

(ஆளை மயக்கி அழகாலே வெல்லவல்ல நம்பெருமாள்)

நம்பெருமாள், எம்பெருமானார் அருளால் முயன்றவன்

ஸ்ரீ அஹோபில தாஸன் க. ஸ்ரீதரன்

(Email: sridharan_book@yahoo.co.in)

அத்யாயம் – 1 – ஸ்ரீரங்கக்ஷேத்ர வைபவம்

ஸ்ரீநாரத முனிவர் உரைப்பது:

1. தேவதேவ விரூபாக்ஷ, ச்ருதம் ஸர்வம் மயாதுநா
   த்ரைலோக்ய அந்தர்கதம் வ்ருத்தம் த்வந்முகாம்போஜ நிஸ்ஸ்ருதம்

பொருள் – ஸ்ரீநாரத மஹரிஷி சிவபெருமானிடம், "விரூபாக்ஷனே! தேவர்களின் தலைவனே! இதுவரை தாமரை போன்ற உனது திருமுகம் மூலமாக, மூன்று உலகங்களைப் பற்றிய அனைத்து உண்மைகளையும் நன்றாக அறிந்தேன்", என்று கூறத் தொடங்கினார்.

2. ததா புண்யாநி தீர்த்தாநி புண்யாந்யாய ததாநி ச
   கங்காத்யாஸ்ஸரித: ஸர்வா ஸேதிஹாஸாச்ச சங்கர

பொருள் – சங்கரனே! உன் மூலமாக புண்ய தீர்த்தங்கள் குறித்தும், புண்ணிய ஸ்தலங்கள் குறித்தும் நான் அறிந்தேன். கங்கை உள்ளிட்ட அனைத்து புண்ணிய நதிகளின் சரிதங்களையும் நான் தெரிந்து கொண்டேன்.

3. காவேர்யாஸ்து ப்ரஸங்கேந தஸ்யா: தீரே த்வயா புரா
   ப்ரஸ்துதம் ரங்கம் இதி உக்தம் விஷ்ணோராயதநம் மஹத்

பொருள் – அப்போது நீவிர், காவேரி நதியின் மேன்மைகள் குறித்து உரைத்தபோது, ஸ்ரீமஹாவிஷ்ணுவுக்கு இருப்பிடமாக உள்ள "ரங்கம்" என்பதைக் குறித்து சிறிது உரைத்தீர்.

4. தஸ்யாஹம் ச்ரோதும் இச்சாமி விஸ்தரேண மஹேச்வர
   மாஹாத்ம்யம் அதநாசாய புண்யஸ்ய வ விவ்ருத்தயே

பொருள் – மஹேச்வரா! அந்த இடத்தைப் பற்றி நான் இப்போது தங்களிடமிருந்து கேட்டு அறிவதற்கு மிகவும் ஆவலாக உள்ளேன். அந்த க்ஷேத்ரம் குறித்துக் கேட்பதன் மூலம் பாவங்கள் அனைத்தும் அழிந்து, புண்ணியங்கள் வளரும் என்பதால், அதனைப் பற்றி விரிவாக உரைக்கவேண்டும்.

Email:sridharan_book@yahoo.co.in

ஸ்ரீமஹேச்வரன் உரைப்பது

5. ஏதத் குஹ்யதமம் லோகே ஸ்வகாலே அபி மயா தவ
ந ப்ரகாசிதமேவாத்ய மயா ஸம்யக் ப்ரகாச்ய தே

பொருள் – இதனைக் கேட்ட மஹேச்வரன் நாரதரிடம் உரைக்கத் தொடங்கினான்: அந்த ஸ்ரீரங்க க்ஷேத்ரத்தின் மாஹாத்ம்யம் என்பது பரம இரகசியமானதாகும். அதனால்தான் நான் அப்போது உனக்கு அதனைப் பற்றி விரிவாக உரைக்காமல், ஒரு குறிப்பு போன்று உரைத்து நிறுத்திவிட்டேன். இப்போது உனக்கு விரிவாக உரைக்கிறேன்.

6. மாஹாத்ம்யம் விஸ்தரேணேஹ வக்தும் வர்ஷ சதைரபி
ந சக்யம் ச்ரோதுமபி வா தஸ்மாத் ஸம்க்ஷேபத: ச்ருணு

பொருள் – ஸ்ரீரங்க மாஹாத்ம்யம் குறித்து உரைக்க வேண்டுமானால், நூறு தேவ ஆண்டுகள் தொடர்ந்து உரைத்தாலும், இயலாத செயலாகும். அதே போன்று அதனை முழுமையாகக் கேட்பதும் இயலாத செயலாகும். ஆகவே நான் உனக்குச் சற்றே விரிவாகவும், சற்றே சுருக்கமாகவும் உரைக்கிறேன், கேட்பாயாக.

7. மருத்ருதாயா மத்யஸ்தே சந்த்ரபுஷ்கரிணீதடே
ஸ்ரீரங்கமதுலம் க்ஷேத்ரே ச்ரியா ஜுஷ்டம் சுபாஸ்பதம்

பொருள் – காவேரி நதியின் கரையில் சந்த்ரபுஷ்கரிணீ என்னும் புண்ணிய தடாகம் ஒன்று உள்ளது. அந்தக் குளத்தின் கரையில் ஸ்ரீரங்க்க்ஷேத்ரம் அமைந்துள்ளது. அது எப்போதும் மங்களங்கள் நிறைந்தும், ஒளி வீசியபடியும் உள்ளது.

8. யத்கத்வா ந நரோ யாதி நரகம் நாப்யதோகதிம்
ந ச ஜ்ஞாநஸ்ய ஸங்கோச ந சைச யமகோசரம்

பொருள் – அப்படிப்பட்ட ஸ்ரீரங்கத்தை அடைந்தவர்கள் மிகவும் தாழ்வான நரகத்தையோ அல்லது மற்ற நரகங்களையோ அடையமாட்டனர். அவர்களுக்கு ஞானச்சுருக்கம் என்பதே உண்டாவதில்லை. அவர்களுக்கு யமலோக வாசம் என்பதும் இல்லை.

Email:sridharan_book@yahoo.co.in

9. தஸ்மாத் ரங்கம் மஹத்புண்யம் கோ ந ஸேவேத புத்திமாந்
ரங்கம் ரங்கம் இதி ப்ரூயாத் க்ஷுதப்ரஸ்கலநாதிஷு
ப்ரஹ்மலோகம் அவாப்நோதி ஸத்ய: பாபக்ஷயாந்நர:

பொருள் – சிறந்த புத்தி கொண்டவர்களால், மிகுந்த புண்ணியத்தை அளிப்பதான அந்த ஸ்ரீரங்கம் எப்போதும் வழிபடப்படுகிறது. தாழ்ந்த நரகங்களில் ஒருவன் விழ நேர்ந்தாலும், அவன் "ரங்கம், ரங்கம்" என்று உச்சரித்தால் போதுமானது; அவனுடைய பாவங்கள் அனைத்தும் நீங்கப் பெற்று, அவன் ப்ரஹ்மலோகம் அடைவது சத்தியமே ஆகும்.

10. க்ஷுதே நிஷ்டீவ்ருதே சைவ ஜ்ரும்பிகாயாம் ததாந்ருதே
பதிதாநாம் து ஸம்பாஷே ரங்கம் இதி உச்யதே புதை:

பொருள் – புத்திமான்கள் தங்களுக்கு இருமல் உண்டாகும்போதும், வாயில் உள்ள கோழையை உமிழும்போதும், கொட்டாவி விடும்போதும், "ரங்கம்" என்று கூறுவர். அவர்கள் ஏதேனும் சூழ்நிலை காரணமாகப் பொய் உரைக்க நேர்ந்தாலும், பாவிகளுடன் பேச நேர்ந்தாலும் "ரங்கம்" என்று கூறிக்கொள்வர்.

11. யோஜநாநாம் ஸஹஸ்ரேஷு யட்ர க்வசந ஸம்ஸ்தித:
ஸ்ரீரங்கமிதி யோ ப்ரூயாத் ஸ யாதி பரமாம் கதிம்

பொருள் – ஒருவன் ஸ்ரீரங்கத்திலிருந்து ஓராயிரம் யோஜனை தூரத்திற்கு அப்பால் வசித்து வரக்கூடும். அப்படிப்பட்டவனும், "ஸ்ரீரங்கம்" என்று எண்ணினாலே போதுமானது; அவன் மிகவும் உயர்ந்த கதியை அடைவான்.

12. தேசாந்தரகதோ வாபி த்வீபாந்தரகதோபி
ஸ்ரீரங்காபிமுகே பூத்வா ப்ரணிபத்ய ந ஸீததி

பொருள் – ஒருவன் வேறு நாட்டில் வசித்து வரக்கூடும், வேறு தீபகற்பத்தில் வசிக்கக் கூடும். அப்படிப்பட்டவனும், "ஸ்ரீரங்கம்" உள்ள திசையை நோக்கி வணங்கினால், அவன் எந்தவிதமான துன்பமும் அடைவதில்லை.

13. சந்த்ரபுஷ்கரிணீ ஸ்நாநம் ரங்கமந்திர தர்சனம்
ஏகாதசி உபவாஸச்ச துளஸீதள பக்ஷணம்
14. கீதாபாடச்ச நியதமேகஸ்மிந்யாதி ஜன்மாநி
கிம் தஸ்ய துர்லபம் லோகே ஸ து நாராயண: ஸ்ம்ருத:

Email:sridharan_book@yahoo.co.in

பொருள் – சந்த்ரபுஷ்கரிணியில் நீராடுதல், ஸ்ரீரங்க விமானத்தைத் தரிசனம் செய்தல், ஏகாதசி உபவாசம் இருத்தல், துளசி இலையை உண்ணுதல், ஸ்ரீமத் பகவத்கீதையை அன்றாடம் பாராயணம் செய்தல் – இவை அனைத்தையும் ஒரு பிறவியில் ஒருவன் செய்தான் என்றால், அந்தப் பிறவியில் அவனுக்குக் கிட்டாதது என்ன உள்ளது? அவன் ஸ்ரீமந்நாராயணனை ஒத்த நிலையை அடைகிறான்.

15. கீயதே பித்ருபிர்கீதா ஸ்வர்க்கலோகே க்ஷயபிரூபி:
அபி ந ஸ்வகுலே ஜாதோ யோ கத்வா ரங்கமந்திரம்

பொருள் – ஒருவனுடைய பித்ருக்கள் தங்களுடைய ஸ்வர்க்கலோக வாசம் முடிந்த பின்னர், நரகில் விழும் காலம் ஏற்படலாம் என்று அச்சம் கொண்டவர்களாக, "நம்முடைய குலத்தில் ஒருவனாவது ஸ்ரீரங்கம் செல்வானாக" என்று வேண்டிக் கொள்வர்.

16. காவேரீஜல ஆப்லுப்ய போஜயித த்விஜோத்தமாந்
தத்யாத்வா தக்ஷிணாம் ஸ்வல்பாம் ஜலம் வ்வா திலமிச்ரிதம்
அஸ்மாநுத்திச்ய கோக்ராஸம் ஸந்நிதௌ வா ஹரேரிதி

பொருள் – பித்ருக்கள் தொடர்ந்து, "அவ்விதம் செல்பவர்கள், காவேரியில் நீராடுவர்; அங்குள்ள சிறந்த அந்தணர்களுக்கு அன்னதானம் செய்வர்; தங்களால் இயன்ற அளவு தக்ஷிணை அளிப்பர்; எள் சேர்ந்த தண்ணீரைக் கொண்டு அர்க்யம் விடுவர்; ஸ்ரீரங்கநாதனின் பெரியகோயிலில் உள்ள பசுக்களுக்கு உணவு அளிப்பர்", என்பர்.

17. கீயதே யமகீதா ச ரஹஸ்யா முநிஸத்தம
யே ரங்கமந்திரம் த்ரஷ்டும் வாஞ்சத்யாபி ச கேசவம்
ந தே மத்விஷயம் யாந்தி ஹி அஹோதிங்மாமஹோ இதி

பொருள் – முனிவர்களில் உயர்ந்த நாரதா! யமன் கூட, மற்றவர்கள் அறியாதபடி, பின்வருமாறு உரைப்பான் – அங்கு ஸ்ரீரங்க விமானத்தையும், அதில் உள்ள கேசவனையும் தரிசிப்பதில் சிலர் ஆவலாக இருப்பர். அவர்கள் திருவரங்கத்தில் இருப்பர். அப்படிப்பட்டவர்கள் மீண்டும் என் விஷயமான யமலோகத்தை அடையமாட்டார்கள்.

18. தேவா அபி ச வை நித்யம் ஸ்வாஸ்பத க்ஷயபீரவ:
ஆசம்ஸந்தே ரங்கதாம்நி முக்திக்ஷேத்ரே மநுஷ்யதாம்

பொருள் – பல தேவர்களும் இந்தத் திருவரங்கத்தில் அன்றாடம் பிறவி எடுத்தபடி உள்ளனர்; இதன் காரணம் அவர்கள் தங்களது தேவலோகப் பதவி மீது உள்ள பயமே ஆகும். இங்கு பிறவி எடுக்கும் மனிதர்கள் முக்தி பெறுகின்றனர்.

19. கந்யாகதே ரவௌ மாஸே க்ருஷ்ணபக்ஷ த்ரயோதசீம்
பித்ர்யம் கர்ம ப்ரசம்ஸந்தி பிதரோ ரங்கதாமநி

பொருள் – சூரியன் கன்னிராசிக்கு வரும்போது, க்ருஷ்ணபக்ஷ த்ரயோதசி நாளில், ஸ்ரீரங்கத்தில், பித்ருக்களுக்குச் செய்யப்படும் ச்ரார்த்தம் போன்றவற்றை பித்ருக்கள் ஏற்கிறார்கள். இதனால் அவர்களுடைய வம்சம் தழைக்கிறது.

20. சந்த்ரபுஷ்கரிணீ தீர்த்தே மாஹஸ்நாநமகாபஹம்
காவேரீஸலீலே ஸ்நாநம் க்ஷேத்ரவாஸச்ச துர்லப:
ஸ்ரீரங்கதர்சனம் மாகே ஸர்வபாபஹரா இமே

பொருள் – சந்த்ரபுஷ்கரிணியில் நீராடுதல், காவேரி நதியில் நீராடுதல், ஸ்ரீரங்கத்தில் வசித்தல், ஸ்ரீரங்கநாதனையும் ஸ்ரீரங்கவிமானத்தையும் தரிசனம் செய்தல் ஆகியவை அனைத்து பாவங்களையும் நீக்கவல்லதாகும். இவை கிட்டுவது மிகவும் அரிதாகும்.

21. சாதுர்மாஸ்ய நிவாஸநே யத்பலம் ரங்கதாமநி
ந தத்குத்ராபி தேவர்ஷே ஸாத்யதே பஹுவத்ஸரை:

பொருள் – தேவரிஷியான நாரதா! ஒருவர் ஸ்ரீரங்கத்தில் சாதுர்மாஸ்ய விரதம் மேற்கொள்ளக்கூடும். அவருக்கு அதன் மூலம் கிட்டும் பலன் என்பது, மற்ற க்ஷேத்ரங்களில் அவர் பல வருடங்கள் அந்த விரதத்தைக் கைக்கொண்டாலும் ஈடாகாது (அல்லது பல வருடங்கள் மற்ற க்ஷேத்ரங்களில் சாதுர்மாஸ்ய விரதம் கைக்கொண்டாலும், இப்படிப்பட்ட பலன் கிட்டாது).

22. ஏகராத்ரோஷிதோ மர்த்யோ ரங்கநாதஸ்ய மந்திர
மஹாபாதக லக்ஷத்வா முச்யதே நாத்ர ஸம்சய:

Email:sridharan_book@yahoo.co.in

பொருள் – ஒருவன் ஸ்ரீரங்கநாதனின் பெரியகோயில் உள்ள ஸ்ரீரங்கத்தில் ஒருநாள் இரவு தங்கினால் போதுமானது. அப்படிப்பட்டவன் லக்ஷக்கணக்கான பாதகங்களைச் செய்தவன் என்றாலும், அதனைப் போக்கிக் கொள்கிறான் என்பதில் ஐயம் இல்லை.

23. ப்ராயச்சித்த ஸஹஸ்ராணி மரணாந்தாநி யாநி வை
தாநி தத்ர ந வித்யந்தே ரங்கநாதஸ்ய மந்திரே

பொருள் – ஒருவன் ஸ்ரீரங்கநாதனின் பெரியகோயில் உள்ள ஸ்ரீரங்கத்தில் வசித்தால் போதுமானது. அப்படிப்பட்டவன் தன்னுடைய மரணகாலம் முடிய எந்தவிதமான பிராயச்சித்தமும் செய்யவேண்டியதில்லை. ஸ்ரீரங்கவாசம் என்பதே பிராயச்சித்தங்களுக்கு ஈடாகிறது.

24. ஸ்ரீரங்கம் யாதி யோ மர்த்ய: தஸ்மா அந்நம் ததாதி ய:
தாவுபௌ புண்யகர்மாணௌ பேத்தரௌ ஸூர்யமண்டலம்

பொருள் – ஒருவர் ஸ்ரீரங்கத்திற்கு யாத்திரையாகச் செல்லக்கூடும். அவருக்க யார் ஒருவஅன்னதானம் செய்கிறாரோ, அவர் சூர்யமண்டலத்திற்குச் செல்லாமலேயே மோக்ஷம் அடைவார் (ஒருவன் தன்னுடைய மரணத்திற்குப் பின்னர், எஞ்சிய புண்ணிய கர்மங்களின் பலன் கழியும்வரை சந்த்ரமண்டலத்தில் இருந்த பின்னரே மோக்ஷம் செல்வர் என்று ப்ரஹ்மஸூத்ரம் கூறுகிறது).

25. திலபாத்ர த்ரயம் யஸ்து தத்யாதந்வஹமாத்யத:
தத்பலம் ஸமவாப்நோதி ய: குர்யாத் ரங்க தர்சநம்

பொருள் – ஒருவர் அன்றாடம் ஒரு பாத்திரம் நிரம்ப எள்ளைத் தானம் செய்யக்கூடும். இவ்விதமாக அவருக்குப் புண்ணியம் ஏற்படலாம். ஆனால் இந்தப் புண்ணியத்தைக் காட்டிலும் ஸ்ரீரங்கநாதனின் தரிசனம் என்பது அதிக புண்ணியம் அளிப்பதாகும்.

26. ஹேமதானம் ப்ரசஸ்தம் ஸ்யாத் பூதானம் ச ததோதிகம்
கோதானம் வஸ்த்ரதானம் ச ஸர்வேஷாம் அதிகம் ச்ருணு

பொருள் – ஸ்ரீரங்கத்தில் ஒருவர் தங்கத்தை தானமாக வழங்கலாம். அதனைக் காட்டிலும் அங்கு பூமிதானம் செய்வது உயர்ந்தது. அதனைக் காட்டிலும் பசுக்களைத் தானம் செய்வது உயர்ந்தது. அதனைக் காட்டிலும் துணிகளைத் தானம் செய்வது உயர்ந்தது.

27. உபாஸ்ருத்ய ஸ்வயம் தாந்தம் ரங்க்க்ஷேத்ராணி வாஸிநம்
க்ஷேத்ரியம் பகவத் பக்தம் குண்டிகா பூர்வாரிணா
28. தோஷயித்வா ததாப்நோதி ஸர்வதான பலம் முநே
சந்த்ரபுஷ்கரிணீ ஸ்நாநம் ஸர்வபாப ப்ரணாசநம்

பொருள் – ஸ்ரீரங்கத்தில் வசிக்கின்றவனும், தனது இந்த்ரியங்களை வசப்படுத்தியவனும், ஸ்ரீரங்கநாதனின் பக்தனும் ஆகிய ஒருவனுக்கு வெறும் தண்ணீரை அளித்தாலே போதுமானது; அப்படித் தண்ணீர் அளித்தவன், அந்தப் பக்தனை மகிழ்வித்த காரணத்தால், அனைத்து தானங்களையும் அளித்த பலன் பெறுகிறான். நாரத முனிவனே! அவன் சந்த்ரபுஷ்கரிணியில் நீராடிய பின்னர், தனது பாவங்களையும் தொலைக்கிறான்.

29. நத்யாம் ஸ்நாத்வா நதீமந்யாம் ந ப்ரசம்ஸேத கர்ஹிசித்
ஸ்ரீரங்கதீர்த்தம் இதி ஏதத் வாச்யம் ஸர்வத்ர நாரத

பொருள் – நாரதா! ஒரு நதியில் நீராடிவிட்டு எழும்போது, மற்றொரு நதியைப் புகழ்ந்து உரைப்பது கூடாது. ஆனால் சந்த்ரபுஷ்கரிணியின் மேன்மை குறித்து எந்த நதியில் நீராடி எழுந்தாலும் பேசுவதில் எந்தவிதமான தோஷமும் இல்லை.

30. சந்த்ரபுஷ்கரிணீம் கங்காம் ஸர்வத்ர பரிகீர்த்தயேத்
ந தேந தோஷம் ஆப்நோதி மஹத்புண்யம் அவாப்நுயாத்

பொருள் – சந்த்ரபுஷ்கரிணீ மற்றும் கங்கை ஆகியவற்றின் மேன்மை குறித்து எப்போதும் பேசியபடி இருக்கலாம். இதனால் எந்தவிதமான தோஷமும் உண்டாகாது, மிகுந்த புண்ணியமே வந்து சேரும்.

31. நமஸ்யேத் ரங்கராஜாநாம் சிந்தயேத் த்வாதசாக்ஷரம்
காவேரீஸலிலே ஸ்நாயாதத் த்யாத்தோயம் த்விஜாயதே

பொருள் – ஸ்ரீரங்கராஜனை வழிபட வேண்டும். எப்போது பன்னிரண்டு அக்ஷரம் கொண்ட "ஓம் நமோ பகவதே வாஸுதேவாய" என்னும் மந்த்ரத்தைக் கூறியபடி இருக்கவேண்டும். காவேரியில் நீராட வேண்டும். அந்தணர்களுக்கு நல்ல நீர் அளிக்க வேண்டும் (நல்ல நீர் அளித்தல் என்றால் தானம் அளித்தல் என்று கொள்க).

32. இதி ஸம்ஸார பீதாநாம் ஏதத் வாக்யம் புரா ஹரி:
ஆதிதேச க்ருபாவிஷ்ட: தத் ஏதத் கதிதம் தவ

பொருள் – இந்த வாக்கியமானது ஸம்ஸார பயம் ஏற்பட்டவர்களுக்காக, கருணையுடன் முன்பு ஸ்ரீஹரியால் உரைக்கப்பட்டது. இதனை உனக்கு இப்போது நான் உரைத்தேன்.

33. ரங்கம் ரங்கம் இதி ப்ரூயாத் க்ஷுதப்ரஸ்கலநாதிஷு
விஷ்ணோ: ஸாயுஜ்யம் ஆப்நோதி ந சேஹா ஜாயதே புந:

பொருள் – இருமல் உண்டாகும்போதோ, வாய் முதலான உறுப்புகளில் சங்கடங்கள் உண்டாகும்போதோ "ரங்கம், ரங்கம்" என்று கூறியபடி இருக்கவேண்டும். இப்படியாகச் செய்யும் ஒருவன் மஹாவிஷ்ணுவை ஒத்த நிலையை பரமபதத்தில் அடைந்து, மீண்டும் ஸம்ஸாரத்திற்குத் திரும்பாமல் இருந்துவிடுகிறான்.

34. சந்த்ரபுஷ்கரிணீ தீர்த்தே ரங்க்க்ஷேத்ர விமாநயோ:
ரங்கதேவே ச சங்கா ஸ்யாத் த்வேஷா வா யஸ்ய நாரத
35. தம் தர்மநிரதோ ராஜா சண்டாளைஸ்ஸஹ வாஸயேத்
ய: பஞ்சாக்ஷர நிஷ்ட: அபி த்வேஷ்டி ரங்கம் ஸநாதநம்
36. ந மே பக்தஸ்ய பாபாத்மா மத்புத்தி ப்ரதிலோமக்ருத்
யதா ஸரித்வரா கங்காம் வைஷ்ணவாநாமஹம் யதா

பொருள் – ஒருவன் சந்த்ரபுஷ்கரிணீ, ஸ்ரீரங்கக்ஷேத்ரம், ஸ்ரீரங்கவிமாநம், ஸ்ரீரங்கநாதன் ஆகியவை குறித்து சந்தேகமோ, வெறுப்போ, பொறாமையோ கொள்ளக்கூடும். அப்படிப்பட்டவன் தர்மநெறியில் வாழ்கின்ற அரசனால் சண்டாளர்களின் நடுவில் வாழும்படியாகச் செய்யப்படுவான் (அல்லது அவன் தர்மநெறியில் வாழ்கின்ற அரசனாக இருந்தாலும் சண்டாளர்களின் மத்தியில் வாழக்கடவன் என்றும் கொள்ளலாம்). ஒருவன் பஞ்சாக்ஷர மந்த்ரமான "ஓம் நமசிவாய" என்பதை உரைத்தபடி இருந்தாலும், அவன் ஸ்ரீரங்க்க்ஷேத்ரத்தை அவமதித்தான் என்றால், அவனும் சண்டாளர்களின் நடுவில் வாழும்படியாகச் செய்யப்படுவான். அப்படிப்பட்டவன் பஞ்சாக்ஷர மந்த்ரத்தை உச்சரித்தபோதிலும், அவனை நான் எனது பக்தனாக ஏற்பதில்லை. கங்கை எவ்விதம் நதிகளில் உயர்ந்ததோ, அது போன்று வைஷ்ணவர்களில் நான் உயர்ந்தவன் ஆவேன்.

37. தேவாநாம் ச யதா விஷ்ணுர்தேவாநாம் ப்ரணவோ யதா
க்ஷேத்ராணாம் ச ததா வித்தி ரங்க்க்ஷேத்ரம் மஹாமுநே

பொருள் – மஹாமுனிவனே! நாரதா! தேவதைகளில் விஷ்ணுவே உயர்ந்த தேவதை, மந்த்ரங்களில் "ஓம்" என்னும் ப்ரணவமே உயர்ந்தது, க்ஷேத்ரங்களில் ஸ்ரீரங்கக்ஷேத்ரமே உயர்ந்தது என்று அறிந்து கொள்வாயாக.

38. பாபிநாம் க்ருபாவிஷ்டோ வக்ஷ்யாமி பரமம் வச:
ரங்கம் கச்சத ரங்கம் வா ஜபத ஸ்மரதா தவா

பொருள் – பாவங்களை பலவற்றைச் செய்தவர்களைக் கண்டு இரக்கம் கொள்ளும் நான் அவர்கள் மீது கருணை கொள்கிறேன். ஆகவே அவர்களுக்காக உயர்ந்த ஒன்றை மட்டும் கூறுகிறேன் – ஸ்ரீரங்கத்திற்குச் செல்வீர், "ரங்கம்" என்று எப்போதும் ஜபித்தபடி இருப்பீர், அதே ஸ்மரணையுடன் இருப்பீர்.

39. ப்ராதருத்தாய நியதம் மத்யாஹ்நே அஹ்ந: க்ஷயே அபி ச
நிசாயாம் ச ததா வாச்யம் ரங்கம் ரங்கம் இதி த்விஜை:

பொருள் – காலையில் எழுந்தவுடன், மதிய நேரத்தில், மாலைப் பொழுதில், இரவு நேரத்தில் என்று எப்போதும் "ரங்கம், ரங்கம்" என்றபடியே துதிக்கவேண்டும்.

40. ய ஏதத் ரங்கமாஹாத்ம்யம் ப்ராதருத்தாய ஸம்யத:
அதீயீத ஸ்மரந் விஷ்ணும் ச யாதி பரமாம் கதிம்

பொருள் – யார் காலை நேரங்களில் இந்த ஸ்ரீரங்க மாஹாத்ம்யத்தைப் படிக்கிறார்களோ, எப்போதும் இதனையே எண்ணியபடி உள்ளார்களோ அவர்கள் மஹாவிஷ்ணுவின் உயர்ந்த பரமபதத்தை அடைகிறார்கள்.

41. லிகித்வா ரங்கமாஹாத்ம்யம் வைஷ்ணவேப்யோ ததாதி ய:
வைஷ்ணவாநாம் விசிஷ்டாநாம் ரங்க்க்ஷேத்ர நிவாஸிநாம்

பொருள் – யார் இந்த ஸ்ரீரங்க மாஹாத்ம்யத்தை எழுதி மற்ற வைஷ்ணவர்களுக்கு அளிக்கிறார்களோ, அப்படிப்பட்டவர்கள் ஸ்ரீரங்கத்தில் வசிக்கின்ற உயர்ந்த ஸ்ரீவைஷ்ணவர்களின் இல்லங்களில் பிறவி எடுப்பார்கள்.

42. ஜாயதே ஸ்ரீமதாம் வம்சே ரங்கிணா ஸஹ மோததே
ய: படேச்ச்ருணுயாத்வாபி தர்ம்யம் ஸம்வாதமாவயோ:
43. யம் யம் காமயதே காமம் தம் தமாப்நோத்ய ஸம்சய:
வித்யா: கீர்த்திம் ச்ரிய: காந்திம் பூர்ணமாயு: ப்ரஜா: பசூந்
44. விஷ்ணுபக்திம் ச லபதே மத்ப்ரஸாதாந் ந ஸம்சய:

பொருள் – யார் இந்த ஸ்ரீரங்க மாஹாத்ம்யத்தை எழுதி மற்ற வைஷ்ணவர்களுக்கு அளிக்கிறார்களோ, அப்படிப்பட்டவர்கள் ஸ்ரீரங்கத்தில் வசிக்கின்ற உயர்ந்த ஸ்ரீவைஷ்ணவர்களின் இல்லங்களில் பிறவி எடுப்பார்கள். அவர்கள் ஸ்ரீரங்கத்தில் வசிக்கும் மற்றவர்களுடன் சேர்ந்து மகிழ்வுடன் இருப்பார்கள். நம் இருவருக்கும் இடையே நடைபெற்ற இந்த ஸம்பாஷணையை யார் ஒருவன் படிக்கிறானோ, கேட்கிறானோ அவன் தனக்கு விருப்பமான எதனையும் சண்ட்ஏகம் இன்றி அடையக்கடவன். அவை கல்வி, கீர்த்தி, செல்வம், தேஜஸ், பூர்ணமான ஆயுள், மக்கட்செல்வம், பசுக்கள் போன்ற எதுவாக வேண்டுமானாலும் இருக்கலாம். மேலும் அவன் எனது ப்ரஸாதமாக விஷ்ணுவிடம் மாறாத பக்தியையும் அடைவான். இதில் எந்தவிதமான ஐயமும் வேண்டாம்.

45. இந்துக்ஷய பௌர்ணமாஸ்யாம் த்வாதச்யாம் ச்ரவணோ ததா
ஏகாதச்யாம் ததாஷ்டம்யாம் படந் ச்ருண்வந் விசுத்யதி

பொருள் – இந்த ஸ்ரீரங்க மாஹாத்ம்யத்தையார் ஒருவன் அமாவாசை, பௌர்ணமி, த்வாதசி, ச்ரவணம், ஏகாதசி, அஷ்டமி ஆகிய நாட்களில் படிக்கிறானோ அல்லது கேட்கிறானோ அவன் மிகுந்த தூய்மை அடைகிறான்.

46. ச்ருண்வந் படந் லிகந் பிப்ரத் ரங்கமாஹாத்ம்யம் உத்தமம்
முக்த்வா சுபாசுபே யாதி தத்விஷ்ணோ: பரமம் பதம்

பொருள் – ஒருவன் இந்த உயர்ந்த ஸ்ரீரங்க மாஹாத்ம்யத்தைக் கேட்கவோ, படிக்கவோ, எழுதவோ, தன்னுடன் எப்போதும் வைத்திருக்கவோ செய்யக்கூடும். அப்படிப்பட்டவன் தனது பாவங்கள் அனைத்தையும் தொலைத்து, புண்ணியங்களைத் தேடிக் கொள்கிறான். இறுதியாக மஹாவிஷ்ணுவின் பரமபதம் பெறுகிறான்.

ஸ்ரீமத்ப்ரஹ்மாண்ட புராணத்தில் உள்ள ஸ்ரீரங்கமாஹாத்ம்யத்தின் முதல் அத்யாயம் ஸம்பூர்ணம்

அத்யாயம் – 2 – நான்முகனின் ஸ்ருஷ்டி

ஸ்ரீநாரத முனிவர் உரைப்பது:

1. ப்ரஸீத பகவத்பக்த ப்ரதாந பரமேச்வர
ச்ருதம் ஸ்ரீரங்கமாஹாத்ம்யம் ரஹஸ்யம் பவதோ மயா

பொருள் – ஸ்ரீநாரத மஹரிஷி சிவபெருமானிடம், "மஹாவிஷ்ணுவின் பக்தர்களில் முதன்மையானவன் என்னும் பெயர் பெற்ற பரமேச்வரனே! இதுவரை ஸ்ரீரங்க மாஹாத்ம்யம் என்னும் மிக உயர்ந்த இரகசியத்தின் மேன்மையை நீ எனக்கு உரைத்தாய்", என்று கூறத் தொடங்கினார்.

2. த்வந்முக அம்போஜ நிர்யாதம் திவ்யம் விஷ்ணுகதாம்ருதம்
பிபத: ச்ரோத்ர சுளகை: த்ருப்திர்நாத்யாபி மே பவேத்

பொருள் – உன்னுடைய தாமரை போன்ற திருமுகம் மூலமாக மஹாவிஷ்ணுவின் சரிதம் என்னும் அமிர்தத்தை நான் பருகியபடி இருந்தேன். எனது செவிகள் அந்த அமிர்தத்தை ஏற்கின்ற பாத்திரங்களாத் திகழ்ந்தன. ஆனாலும் நான் த்ருப்தி அடையவில்லை.

3. புநரேவ அஹம் இச்சாமி ச்ரோதும் ஸ்ரீரங்கவைபவம்
உத்பத்திமாகதிம் சைவ தயோரார்ச்சா விமாநயோ
4. க்ஷேத்ரஸ்ய சைவ மாஹாத்ம்யம் தீர்த்தஸ்ய ச விசேஷத:
வக்தும் அர்ஹஸி ஸர்வஜ்ஞ விஸ்தரேண மமாதுநா

பொருள் – நான் ஸ்ரீரங்கவைபவம் பற்றியும், அந்த ஸ்ரீரங்கவிமானம் அங்கு வந்தமை குறித்தும், ஸ்ரீரங்கநாதனின் திருமேனி குறித்தும் மேலும் அறிந்துகொள்ள ஆவலாக உள்ளேன். அந்த ஸ்ரீரங்க க்ஷேத்ரத்தின் மாஹாத்ம்யம், அங்குள்ள பல தீர்த்தங்களின் மேன்மை போன்றவற்றையும் நான் அறிந்துகொள்ள விரும்புகிறேன். அனைத்தும் அறிந்தவனே! இவை குறித்து எனக்கு விரிவாக உரைப்பாயாக – என்று நாரதர் கேட்டார்.

ஸ்ரீமஹேச்வரன் உரைப்பது

5. க்ருத்ஸ்நம் ஸ்ரீரங்கமாஹாத்ம்யம் விஸ்தரேண மஹாமுநே
கோ ப்ரூயாத் ச்ருணு யாத்வாபி ந சக்யம் இதி நிச்சிதம்

பொருள் – ஸ்ரீமஹேச்வரன் நாரதரிடம், “மஹாமுனிவனே! ஸ்ரீரங்க மாஹாத்ம்யம் குறித்து யாரால்தான் முழுமையாக உரைக்க இயலும்? அதற்கான வலிமை யாருக்கு உள்ளது? யாராலும் அதனை விரிவாக உரைக்க இயலாது என்பது நிச்சயம்”, என்று கூறத் தொடங்கினார்.

6. ததாபி ச்ரத்ததாநஸ்ய தவாஹமதுநா முநே
வர்ணயிஷ்யாமி யத் கிஞ்சித் தத் ச்ருணுஷ்வ ஸமாஹித:

பொருள் – நாரத முனிவரே! ஆயினும் மிகுந்த ஆவலாக உள்ள உனக்கு ஸ்ரீரங்க மாஹாத்ம்யம் குறித்து நான் ஓரளவு உரைக்கிறேன். இதனை மிகவும் கவனத்துடன், மனதை ஒருநிலைப்படுத்திக் கேட்பாயாக.

7. ஆஸீத் இதம் தமோபூதம் அப்ரஜ்ஞாதம லக்ஷணம்
அப்ரதர்க்யமவிஜ்ஞேயம் ப்ரஸுப்திம் இவ ஸர்வத:
8. ஏக ஏவாபவத்த தத்ர தேவோ நாரயண: ப்ரபு:

பொருள் – ப்ரளயத்தின்போதும் இதனைப் பற்றி முழுமையாக யாரும் அறிய இயலாது (அதாவது ப்ரளயகாலம் வரை அறிய இயன்றாலும் முடியாது என்று கருத்து). இதனைத் தர்க்கவாதம் மூலமோ அல்லது விஜ்ஞான சாஸ்த்ரங்கள் மூலமோ அறிய இயலாது. எந்த நேரத்தில், எங்கெல்லாம் எந்தவிதமான செயல்பாடுகளுல் நிகழவில்லையோ, அங்கெல்லாம் அந்த வஸ்து இருந்தது (செயல்பாடுகளுடன் இல்லாதபோது என்றால் – ப்ரளத்திற்கும் பின்னர், ஸ்ருஷ்டிக்கு முன்னர் உள்ள அமைதியான நிலை. அப்போது ஸ்ரீரங்க விமானம் மட்டுமே இருந்தது. அதுவே எங்கும் நிறைந்திருந்தது என்று கருத்து).

அந்தக் கட்டத்தில் அந்த விமானத்திற்குள், அனைத்திற்கும் ஸ்வாமியான ஸ்ரீமந்நாராயணன் மட்டுமே இருந்தான்.

9. ஸ ஜகத் ஸ்ருஷ்டி ஸம்ஹாரை: விஹர்த்துமகரோந்மந:
ஸ்வாசாம்ச கலயா ஸ்வயா மூர்த்யா ஜகந்மய:
ஸ்வகலா அநந்தசயந: ஆதிசிச்யே ப்ரளயோதிதம்

பொருள் – அப்போது இந்த உலகத்தைப் படைக்கவேண்டும் என்றும், ப்ரளய காலத்தில் அனைத்தையும் ஸம்ஹாரம் செய்யவேண்டும் என்றும் ஸ்ரீமந் நாராயணன் எண்ணினான். அவன் தன்னுடைய அம்சமான ஆதிசேஷ என்ற படுக்கையில், அந்த ப்ரளய ஸமுத்திரத்தில் மஹாலக்ஷ்மியைத் தரித்தவனாக கண்வளர்ந்தபடி இருந்தான்.

10. தஸ்ய காமஸ்ஸமஜநி மநஸோ வீர்யமாதித:
ததாவிஷ்டஸ்ஸ்வதேஹே து ஸோபச்யத் ஸராசரம்

பொருள் – அப்போது அவனுடைய திருவுள்ளத்தில் இருந்த வீர்யம் என்பது, இந்த உலகைப் படைக்கவேண்டும் என்னும் ஆசையின் வடிவில் செயலாக மாறியது. அந்த ஆசையின் விளைவாக அவன் தன்னில் பலவற்றையும் உள்ளடக்கிய ப்ரபஞ்சத்தைக் கண்டான்.

11. தஸ்ய நாபேரபூந்நாளம் நாநாரத்ன மநோஹரம்
தஸ்மிந் ஹிரண்மயம் பத்மம் ஸர்வகந்தம் அதூத்கடம்

பொருள் – அப்போது அவனுடைய திருநாபியிலிருந்து நீண்ட கொடி போன்ற அமைப்பு இரத்தினமயமாக வெளிப்பட்டது. அந்தக் கொடியின் முடிவில் தங்கமயமான தாமரைமலர் ஒன்று வெளிப்பட்டது.

12. தஸ்மிந் சதுர்முகோ ப்ரஹ்மா ஸங்கல்பாத் பரமாத்மந:
ஸமஷ்டி: ஸர்வஜீவாநாம் ஆஸீத் லோகபிதாமஹ:

பொருள் – அந்தத் தாமரையிலிருந்து, நாராயணனின் ஸங்கல்பம் மூலமாக, சதுர்முக ப்ரஹ்மன் (நான்முகன்) தோன்றினான். அவனிலிருந்து அனைத்தும் தோன்றின. அவனே ஜீவன்களில் முதன்மையானவன், அனைத்திற்கும் பிதாமகன் ஆவான்.

Email:sridharan_book@yahoo.co.in

13. ஸ ஜாதமாத்ர: தத்ரைவ நாந்யத் கிஞ்சித் அவைக்ஷத
ஏகாகீ ஸ பயாவிஷ்டோ ந கிஞ்சித் ப்ரத்யபத்யத

பொருள் – இப்படியாகத் தோன்றிய நான்முகனால் தன்னைச் சுற்றி எதனையும் காண இயலவில்லை. அவன் தனியாக அமர்ந்திருந்தான். சற்றே பயத்துடன் நின்ற அவனால் அந்தச் சூழ்நிலையை எளிதில் புரிந்து கொள்ள இயலவில்லை.

14. சகுநீம் ப்ரஹ்ம நாமாநம் ஸ து ஹம்ஸம் ஹிரண்மயம்
ஆதித்ய தேவதாயாச்ச ப்ரேரகம் பரமாத்புதம்

பொருள் – அப்போது அந்த நான்முகன், ப்ரஹ்மம் எனப்படும் உயர்ந்த பரம்பொருளை ஹம்ஸவடிவில் கண்டான். அந்த ஹம்ஸம் எந்தவிதமான தோஷமும் அற்றதாய், தங்க நிறத்துடன், சூரியனை வழிநடத்துவதாய், அனைவராலும் விரும்பக்கூடியதாய் காணப்பட்டது.

15. வரேண்யம் பர்க்கஸம்ஜ்ஞம் ச தீதத்வஸ்ய ப்ரசோதகம்
அபச்யததிதேஜிஷ்டமாவிபூதம் யத்த்ருச்சயா

பொருள் – பர்க்க என்று போற்றப்படுவதும், மிகவும் உயர்ந்ததும், புத்தி என்னும் தத்துவத்தைத் தூண்டக்கூடியதும், எல்லையற்ற தேஜஸ் கொண்டதும் ஆகிய அந்த ப்ரஹ்மம் நான்முகனுக்கு ஹம்ஸரூபத்துடன் தென்பட்டது.

16. கஸ்த்வமித்யாஹதம் ப்ரஹ்மா கஸ்த்வமித்யாஹதம் ச ஸ:
தேவாநாம் நாமதா விஷ்ணு: பிதா புத்ரஸ்ய நாமக்ருத்

பொருள் – நான்முகன் அந்த ஸ்ரீமந்நாராயணனைப் பார்த்து, “தாங்கள் யார்? நான் யார்?” என்றான். அப்போது நான்முகனைப் பார்த்த ஸ்ரீமந்நாராயணன், “நீ – க: - என்னும் பெயர் கொண்டவன் ஆவாய்”, என்றான். இப்படியாக அனைத்து தேவர்களின் பிதாவாகிய ஸ்ரீமந்நாராயணன், தனது புத்ரனாகிய நான்முகனுக்கு “க:” என்று பெயரிட்டான்.

17. தஸ்மாத் பித்ரு க்ருதம் நாம க இதி ப்ரஹ்மணோ முநே
அஹம் ஹரிரிதி ப்ராஹ ஹம்ஸ: சுசிபதவ்யய:

பொருள் – நாரத முனிவனே! இப்படியாக நான்முகன் தனது தந்தையாகிய ஸ்ரீமந்நாராயணனால் சூட்டப்பட்ட "க" என்னும் பெயர் கொண்டான். அவனிடம் ஸ்ரீமந்நாராயணன், "நான் ஸ்ரீஹரி ஆவேன். எந்தவிதமான தோஷமும் இல்லாத அன்னமாகிய நான், நல்லவர்களின் இதயங்களில் எப்போதும் வசிப்பேன்", என்றான்.

18. உபஸ்தாய ஹரிம் ப்ராஹ ப்ரஹ்மா லோகபிதாமஹ:
கிம் கர்த்தவ்யம் மம ப்ரூஹி ப்ரமாணம் காரணம் ததா
உபாயம் ச ததா யோகம் ஹரே துப்யம் நதோஸ்ம்யஹம்

பொருள் – தொடர்ந்து நான்முகன் ஸ்ரீஹரியைத் துதித்தான். அதன் பின்னர் நான்முகன் ஸ்ரீஹரியிடம், "ஸ்ரீஹரி! உமக்கு எனது நமஸ்காரங்கள்! நாம் இப்போது செய்ய வேண்டியது என்ன? அத்தகைய செயல்கள் நான் செய்வதற்கு என்ன காரணம்? அவற்றை நான் இயற்றுவதற்கான உபாயம் என்ன?", என்று கேட்டான்.

19. ஸ ஹம்ஸரூபீ பகவாந் ஓம் இத்யுக்த்வா திரோததே

பொருள் – இப்படியாக நான்முகனால் கேட்கப்பட்ட ஹம்ஸரூபத்தில் இருந்த ஸ்ரீமந்நாராயணன், "ஓம்" என்று உச்சரித்துவிட்டு அங்கிருந்து மறைந்தான்.

20. ஆதௌ பகவதா ப்ரோக்தம் ஹரி: ஓம் இதி யத்தத:
ஆதித: ஸர்வகார்யாணாம் ப்ரயுஜ்யேதே ஹி தாவுபௌ

பொருள் – ஆக தொடக்கத்தில் ஸ்ரீமந்நாராயணன், "ஹரி: ஓம்" என்று உச்சரித்தான். அதன் பின்னரே நான்முகனின் செயல்கள் தொடங்கின. இதனால்தான் இன்றும் சிறந்த அறிவு கொண்டவர்கள், எதனைத் தொடங்குவதற்கு முன்னரும், "ஹரி: ஓம்" என்று கூறிவிட்டுத் தொடங்குவார்கள்.

21. ஹரி: ஓம் இதி நிர்திச்ய யத்கர்ம க்ரியதே புதை:
அதீயதே வா தேவர்ஷே தத்தி வீர்யோத்தரம் பவேத்

பொருள் – தேவரிஷியே! எந்த ஒரு கர்மத்தை "ஹரி: ஓம்" என்று உச்சரித்துவிட்டுத் தொடங்குகிறார்களோ, அந்தக் கர்மத்திற்கு அதிகமான வீர்யம் வந்து சேர்கிறது. இதனால் அந்தக் கர்மம் சுலபமாக முடிகிறது.

22. தஸ்மாத் து ப்ராதருத்தாய ப்ராங்முகோ நியத: சுசி:
ஹரி: ஹரி: ஹரி: இதி வ்யாஹரேத் தோஷசாந்தயே

பொருள் – ஆகவே ஒருவன் காலையில் எழுந்தவுடன் கிழக்குத்திசையை நோக்கியபடி, "ஹரி: ஹரி: ஹரி:" என்று உச்சரிக்கவேண்டும். இதனை அன்றாடம் செய்தல் வேண்டும். இதன் மூலம் அவனுக்கு இருக்கக்கூடிய தோஷங்கள் அனைத்தும் விலகிவிடும்.

23. ஸாநாநாதிஷு ச கார்யேஷு க்ஷுதப்ரஸ்கலநாதிஷு
ஹரி: இதி உச்சரேத் உச்சை: ஹரத் யஸ்ய அசுபம் ஹரி:

பொருள் – ஒருவன் நீராடும்போதும், எந்தச் செயலைச் செய்யும்போதும், இருமல் போன்றவற்றைச் செய்யும்போதும், கீழ் விழ நேர்ந்தாலும் "ஹரி:" என்று உரக்க அழைப்பானாக. அப்போது அந்த ஸ்ரீஹரி, அந்த மனிதனால் செய்யப்பட்ட பாவங்கள் அனைத்தையும் அகற்றிவிடுகிறான்.

24. ஓம் இதி அக்ஷரம் ப்ரஹ்ம வ்யாஹரந் ஸம்ஸ்மரந் ஹரிம்
பத்மாஸநஸ்தா பகவாந் பரமம் தப ஆஸ்தித:

பொருள் – அதன் பின்னர் நான்முகன் பத்மாஸநத்தில் அமர்ந்தான். ஸ்ரீஹரியால் உரைக்கப்பட்ட "ஓம்" என்னும் அக்ஷரத்தை மட்டுமே த்யானித்தபடி கடுமையான தவன் இயற்றத் தொடங்கினான்.

25. காலேந மஹதா தாதா வ்யாஜஹார ஸ பூரிதி
வ்யாஹ்ருதி: ப்ரதமா ஸ அபூத் ப்ரதமம் வ்யாஜஹர யத்

பொருள் – இப்படியாக நீண்டகாலம் தவம் இயற்றியபடி இருந்த நான்முகன், "பூ:" என்று உச்சரித்தான். இதுவே முதலில் நான்முகனால் உச்சரிக்கப்பட்டதால், இதுவே முதல் வ்யாஹ்ருதி (உச்சரிப்பு) ஆனது.

26. தயா ஸஸர்ஜ வை பூமிம் அக்நிஹோத்ரம் யஜூம்ஷி ச
முகத ஸ்த்ரீவ்ருதம் ஸ்தோமமக்நிம் காயத்ரிம் ஏவ ச

பொருள் – அந்த “பூ:” என்பதன் மூலம் நான்முகன் இந்த உலகம், அக்னிஹோத்ரம் மற்றும் யஜுர்வேதம் ஆகியவற்றை வெளிக்கொணர்ந்தான். அவனது முகத்திலிருந்து அக்னி, காயத்ரி சந்தஸ் போன்றவை வெளிப்பட்டன.

27. ப்ராஹ்மணம் ச மநுஷ்யாணம் பசூநாம் அஜமேவ ச
 த்விதீயாம் தப ஆதிஷ்டத் புவ இதி அப்ரவீத் தத:

பொருள் – மனிதர்களில் அந்தணர்களையும், விலங்குகளில் மான் முதலான பசு இனத்தையும் படைத்தான். மீண்டும் ஒருமுறை கடுமையான தவத்தில் ஆழ்ந்த நான்முகன், விழித்து எழுந்தவுடன் “புவ:” என்றான்.

28. வ்யாஹ்ருதி: ஸ்யாத் த்விதீயாபூத் த்விதீயம் வ்யாஜஹார யத்
 தயா ஸஸர்ஜ அந்தரிக்ஷம் ஸமாந்நி ச ஹவீம்ஷி ச

பொருள் – இரண்டாவது முறையாக “புவ:” என்று நான்முகன் உச்சரித்தவுடன், அதுவே இரண்டாவது உச்சரிப்பு ஆனது. அதன் மூலம் ஸாமவேதம் வெளிப்பட்டது. மேலும் பல யஜ்ஞங்களுக்குத் தேவையான அவிர்பாகங்கள் பலவற்றையும் உண்டாக்கினான்.

29. தோர்ப்யாம் பஞ்சதச ஸ்தோமம் த்ரிஷ்டுபம் சந்த ஏவ ச
 இந்த்ரம் தேவம் ச ராஜந்யம் மநுஷ்யாணாமவிமம் பசும்

பொருள் – அதன் பின்னர் நான்முகன் தனது தோள்களில் இருந்து பதினைந்து ஸ்தோமங்களைப் (சேனைகள்) படைத்தான். அதன் பின்னர் த்ரிஷ்டுப் என்னும் சந்தஸ், தேவர்களில் இந்த்ரன், மனிதர்களில் க்ஷத்ரியர்கள், விலங்குகளில் அவிம் என்னும் ஒருவகை ஆடு ஆகியவற்றைப் படைத்தான்.

30. த்ருதீயாம் தப ஆதிஷ்டத் ஸுவ: இதி அப்ரவீத் தத:
 வ்யாஹ்ருதி: ஸ்யாத் த்ருதீயாபூத் த்ருதீயம் வ்யாஜஹார யத்

Email:sridharan_book@yahoo.co.in

பொருள் – அதன் பின்னர் நான்முகன் மூன்றாவது முறையாகத் தவம் இயற்றினான். அப்போது கண் விழித்த அவன், “ஸுவ:” என்று உச்சரித்தான். இதனை மூன்றாவது முறையாக உச்சரித்த காரணத்தால், இது மூன்றாவது உச்சரிப்பு ஆனது.

31. தயா ஸஸர்ஜ ஸ திவம் ருச ஸ்தோமம் ததாத்வரம்
மத்யாத் ஸப்தச ஸ்தோமம் ஜகதீம் சந்தம் ஏவ ச

பொருள் – அந்த மூன்றாவது வ்யாஹ்ருதி மூலம் ஸ்வர்க்கத்தை உண்டாக்கினான். தொடர்ந்து அதன் மூலம் ருக் வேதத்தையும், அதற்கான யஜ்ஞங்களையும் வெளிப்படுத்தினான். தனது நடுப்பகுதியான வயிற்றில் இருந்து பதினேழு ஸ்தோமங்கள் மற்றும் ஜகதீ என்னும் சந்தஸ் ஆகியவற்றைப் படைத்தான்.

32. மநுஷ்யாணாம் ததா வைச்யம் பசூநாம் காம் பயஸ்விநீம்
விச்வதேவாம்ஸ்ததா தேவாந் பூயிஷ்டாம்ச்ச பிதாமஹ:

பொருள் – அதன் பின்னர் மனிதர்களில் வைச்யர்களையும், விலங்குகளில் பசுவையும் படைத்தான். தேவர்களில் விச்வதேவர்களைப் படைத்தான். மற்ற சில தேவர்களையும் அந்த பிதாமகன் படைத்தான்.

33. துரீயம் தப ஆதிஷ்டந் மஹ இதி அப்ரவீத் தத:
சதுர்த்தீ வ்யாஹ்ருதீ: ஸாபூச்சதுர்த்தம் வ்யாஜஹர யத்

பொருள் - அதன் பின்னர் நான்முகன் நான்காவது முறையாகத் தவம் இயற்றினான். அப்போது கண் விழித்த அவன், “மஹ:” என்று உச்சரித்தான். இதனை நான்காவது முறையாக உச்சரித்த காரணத்தால், இது நான்காவது உச்சரிப்பு ஆனது.

34. தயா சைவம் க்ரமேணைவ ஹி அதர்வாங்கிரஸ: அஸ்ருஜத்
பத்ப்யாம் ஸ்தோமம் சைகவிம்சம் சந்த: அநுஷ்டுபம் ஏவ ச

பொருள் – நான்காவது வ்யாஹ்ருதியைக் கொண்டு நான்முகன் அதர்வண வேதத்தைக் கொணர்ந்தான். தனது கால்களில் இருந்து இருபத்து மூன்று ஸ்தோமங்களையும், அநுஷ்டுப் என்னும் சந்தஸ் ஆகியவற்றையும் படைத்தான்.

35. சூத்ரஜாதிம் மநுஷ்யாணாம் பசூநாம் அச்வமேவ ச
தஸ்மிந் காலே பகவத: கர்ணவிட் ஸம்பவாவுபௌ

பொருள் – அதன் பின்னர் மனிதர்களில் சூத்ரர்களைப் படைத்தான். விலங்குகளில் குதிரையைப் படைத்தான். அதே நேரத்தில் பகவான் ஸ்ரீமந்நாராயணனின் காதுகளில் இருந்து அசுரர்கள் வெளிப்பட்டனர்.

36. ரஜஸ்தம: ப்ரக்ருதிகௌ மதுகைடப ஸம்ஜ்ஞகௌ
அஸுரௌ ப்ரஹ்மண அப்யேத்ய ஸகாசம் லோககண்டகௌ

பொருள் – அந்த அசுரர்கள் ரஜோ மற்றும் தாமஸ குணங்கள் நிறைந்த ஸ்வபாவம் கொண்டவர்களாக இருந்தனர். அவர்களில் மது, கைடபன் என்னும் மிகவும் கொடிய இருவர் இருந்தனர். இவர்கள் நான்முகனின் அருகில் வந்தனர்.

37. வேதாந் க்ருஹீத்வா ஸலிலம் ப்ரவிஷ்டௌ ப்ரளயோததே:
அசக்தோ கதிம் அந்வேஷ்டும் தயோ: கிந்ந: ப்ரஜாபதி:

பொருள் – அந்த இருவரும் நான்முகனிடமிருந்து வேதங்களை அபகரித்துக் கொண்டு, ப்ரளய ஸமுத்திரத்திற்குள் சென்று மறைந்தனர். நான்முகன் அவர்களைத் தேடும் சக்தி அற்றவனாக, செய்வது அறியாமல் திகைத்து அமர்ந்தான்.

38. நாளம் ஆலம்ப்ய ஹஸ்தாப்யாம் அவாதரவதாங்முக:
திவ்யைர் வர்ஷ ஸஹஸ்ரைச்ச யோஜநாநாம் பஹூநி ச

பொருள் – அதன் பின்னர் நான்முகன் தான் அமர்ந்திருந்த தாமரைமலரின் தண்டைப் பிடித்தபடி கீழே இறங்கினான். இது போன்று அவன் ஆயிரம் தேவ வருடங்கள், பல யோஜனை தூரம் இறங்கியபடி இருந்தான்.

39. வ்யதீத்ய விஹ்வலோ ப்ரஹ்மா கண்டகைரபி ஸண்டித:
நாள ஸஞ்சலநாத் பீதஸ்தத்பங்கம் பயவிஹ்வல:

பொருள் – அப்போது நான்முகன் மிகவும் களைப்புற்றான். அந்தத் தாமரைத் தண்டில் காணப்பட்ட பல முள் போன்ற அமைப்புகள் மூலமாகவும் அவன் மிகவும் துன்பமும் அடைந்தான். மேலும் அந்தத் தண்டானது அசைந்தபடி இருந்த காரணத்தால், தான் கீழே விழுந்துவிடுவோமே என்ற அச்சத்தையும் அடைந்தான்.

40. ஸ உத்ததார க்ருச்சரேண புநச்சித்தாபர: அபவத்
ப்ரவிசம்ச்ச புநஸ்தோயம் தாதேத்யாஹ ஸ பாலவத்

பொருள் – மிகுந்த சிரமத்துடன் அவன் கீழே இறங்கி நின்றான். அதன் பின்னர் மீண்டும் த்யானத்தில் ஆழ்ந்தான். அதனைத் தொடர்ந்து அவன் ப்ரளய ஸமுத்திரத்தில் இறங்கினான். அப்போது அவன் சிறு குழந்தை போன்று, "தந்தையே!" என்று அழைத்தான்.

41. மா பைஷீரிதி தம் ப்ராஹ மத்ஸ்ய: கச்சிஜ்ஜ்லேசர:
ஆஹரிஷ்யாமி வேதாம்ஸ்தே தாத: அஹம் தே ப்ரஜாபதே

பொருள் – அப்போது அந்த ப்ரளய நீரில் இருந்த யாரோ ஒருவர் (ஸ்ரீஹரி), "ப்ரஜாபதியே! வருத்தமும் பயமும் அடையாதே! நான் உனக்கு அந்த வேதங்களை அவர்களிடமிருந்து மீட்டுத் தருகிறேன்", என்றார்.

42. உத்திஷ்டோத்திஷ்ட பத்ரம் தே ஸ்வஸ்தாநமிதி ஸ: அகமத்
தௌ ஹத்வா தாநவ ச்ரேஷ்டௌ ஹரிர்ஹயசிரா முநே

பொருள் – "எழுந்திருப்பாயாக! எழுவாயாக!" என்று தொடர்ந்து உரைக்கப்பட்டது. இதனைக் கேட்ட நான்முகன் தனது இருப்பிடத்தை மீண்டும் அடைந்தான். அதன் பின்னர் அந்த மது, கைடபர் ஆகிய இருவரையும் ஹயக்ரீவனாக நின்ற ஸ்ரீஹரி வதம் செய்தான்.

43. ஆதாய வேதாந் ஆகச்சதாந்திகம் பரமேஷ்டிந:
ஆருஹ்ய வைதிகம் யாநம் அஞ்ஜநாசலஸ ஸந்நிப:

பொருள் – அந்த ஹயக்ரீவன் வேதங்களை மீட்டு எடுத்துக்கொண்டு நான்முகன் அருகில் வந்தான். அப்போது அவன் கருடனில் அமர்ந்து வந்தான்.

44. பீதாம்பரதரோ தேவோ ப்ரஹ்மணோ குருர் அச்யுத:
ஸ்ரீவத்ஸாங்க: ஸ்ரீய: காந்தஸ்தஸ்மை வேதாந் உபாதிசத்
உவாச சைநம் பகவாந் உபபந்நம் ப்ரஜாபதி

பொருள் – ஹயக்ரீவனாகிய ஸ்ரீமந்நாராயணன் அழகான பீதாம்பர வஸ்த்ரம் அணிந்தவனால, ஸ்ரீவத்ஸம் என்னும் மச்சம் கொண்டவனாகக் காட்சி அளித்தான். மஹாலக்ஷ்மியின் நாயகனும், அடியார்களை நழுவவிடாத அச்சுதனும் ஆகிய அவன், நான்முகனுக்கு ஆசார்ய ஸ்தானத்தில் இருந்து வேதங்களை உபதேசிக்கத் தொடங்கினான். அவன் நான்முகனிடம் பின்வருமாறு கூறத் தொடங்கினான்.

ஸ்ரீபகவான் உவாச -

45. வேதா ஹி அநுபதிஷ்டாஸ்தே மயா பூர்வம் ப்ரஜாபதே
நஷ்டாஸ்தேந புநர்லப்தோ மத்ப்ரஸாதா: சதுர்முக

பொருள் – ஸர்வேச்வரன் நான்முகனிடம், "ப்ரஜாபதியே! உனக்கு நான் இதற்கு முன்னர் வேதங்களை உபதேசித்தது கிடையாது. இதனால்தான் அவை அசுரர்களால் கவரப்பட்டன. எனது ப்ரஸாதமாக உனக்கு அவற்றை மீட்டுத் தந்துள்ளேன்", என்று கூறத் தொடங்கினான்.

Email:sridharan_book@yahoo.co.in

46. ப்ரணவஸ்ய உபதிஷ்டத்வாந் நாத்யந்தம் நாசமாப்நுவந்
அநாசார்ய: அநுபலப்தா ஹி வித்யேயம் நச்யதி த்ருவம்

பொருள் – உனக்கு "ஓம்" என்னும் ப்ரணவ மந்த்ரத்தை முன்னர் நான் முறைப்படி உபதேசித்த காரணத்தினால்தான், வேதங்கள் முழுமையாகத் தொலையாமல் காப்பாற்றப்பட்டன. ஆகவே ஆசார்யனின் உபதேசம் மூலமாகப் பெறப்படாத எந்த ஒரு வித்யையும் மறைவது நிச்சயம் ஆகும். அப்படிப்பட்ட வித்யை அழிவது உறுதியே ஆகும்.

47. வித்யா: ஸநாதநா வேதா மத் ஆஜ்ஞா பரிபாலகா:
யா நிச்வஸிதா: பூர்வம் மயி ஸந்தி ஸதாநக

பொருள் – இந்த வேதவித்யை என்பது மிகவும் புராதானமானது; எனது ஆணையின் மூலம் எப்போதும் காப்பாற்றப்பட்டு வந்துள்ளது. இவை எனது ஆணைகளை உள்ளடக்கியவை ஆகும். முன்னர் அவை எனது நாசியில் இருந்து மூச்சுக்காற்றின் மூலம் வெளிப்பட்டன. ஆகவே அவை எப்போதும் என்னுள் உள்ளன.

48. ந ஜாயந்தே: ந நச்யந்தி ந தார்யந்தே ச மாநவை:
பஹுஜந்ம க்ருதை: புண்யை: தார்யந்தே ப்ராஹ்மணோத்தமை:

பொருள் – இந்த வேதங்களுக்கு உற்பத்தி என்பதும், அழிவு என்பதும் எப்போதும் கிடையாது. இவற்றை மனிதர்கள் வைத்துக்கொண்டது கிடையாது. ஆனால் பல ஜன்மங்களாக எண்ணற்ற புண்ணியச் செயல்கள் செய்த உயர்ந்த அந்தணர்களால் மட்டுமே இவை பாதுகாக்கப்பட்டு வருகின்றன.

49. ப்ராஹ்மணத்வம் அநுப்ராப்ய யே ந வேதாநதீயதே
ப்ரஹ்மக்நாச்ச ஸுராபாச்ச தே அபி பாதகிந: ஸ்ம்ருதா:

பொருள் – யார் ஒருவன் அந்தணனாகப் பிறந்தபோதிலும், இவ்விதம் வேதங்களைப் பாதுகாக்காமல் உள்ளானோ, அவன் ப்ரஹ்மஹத்தி தோஷத்தை (அந்தணன் ஒருவனைக்

கொன்ற பாவம்) அடைகிறான். அப்படிப்பட்டவர்கள் மதுவைப் பருகியவர்கள் ஆவர். அவர்கள் பாவிகளிலேயே மிகவும் கொடிய பாவம் செய்தவர் ஆவர்.

50. அதீதாநபி யோ வேதாந்நாநுபாலயதே த்விஜ:
ப்ருணஹா ஸ து விஜ்ஞேய: கு(வி)யோநிமதி கச்சதி

பொருள் – ஒரு அந்தணன் வேத அத்யயனம் செய்தபடி இருக்கக்கூடும். ஆனால் அவன் வேதங்களைக் காப்பாற்றுவதற்கு எந்தவிதமான முயற்சியும் செய்யவில்லை என்றால், அவன் குழந்தைகளைக் கொல்லும் சிசுஹத்தி என்னும் தோஷத்தை அடைகிறான். அவன் அடுத்த பிறவியில் தாழ்ந்த குலத்தில் பிறக்கிறான்.

51. ப்ராஹ்மணோ வேதவித்யஜ்வா யோ ந முக்தோ மயீச்வரே
த்விபாத் பசுஸ்ஸ விஜ்ஞேயஸ் ஸம்ஸாரோ நாஸ்ய நச்யந்தி

பொருள் – ஒருவர் வேதங்களில் மிகுந்த ஞானம் கொண்டிருக்கலாம்; அவற்றைப் பொருளுடன் படிக்கவும் தேர்ந்தவனாக இருக்கலாம்; பல யாகங்களை இயற்றியபடி இருக்கலாம். ஆனால் ஈச்வரனாகிய என் மீது அவனுக்குப் பக்தி இல்லையென்றால், அவன் இரண்டு கால்கள் கொண்ட விலங்கே ஆவான். அவனுக்கு ஸம்ஸாரம் அழிவதே இல்லை.

52. அவைஷ்ணவோ வேதவித்யோ வேதஹீநச்ச வைஷ்ணவ:
ஜ்யாயாம் ஸ மநயோர்வித்தி யஸ்ய பக்திஸ்ஸதா மயி

பொருள் – ஒருவன் வேதங்களில் நல்ல ஞானம் கொண்டு, என்னிடம் பக்தி அற்ற காரணத்தினால் வைஷ்ணவன் அல்லன் என்றிருக்கக்கூடும். மற்றொருவன் என்னிடம் பக்தி கொண்டவனாக, ஆனால் வேதங்களை அறியாமல் இருக்கக்கூடும். இந்த இருவரில் என்னிடம் பக்தி கொண்டவனே உயர்ந்தவன் ஆகிறான்.

53. கிம் வேதஹீநச்ச விஷ்ணுபக்தி விவர்ஜித:
சண்டாள பதித வ்ராத்யபுல்கஸேப்யோ நிக்ருஷ்யதே

Email:sridharan_book@yahoo.co.in

பொருள் – வேதங்களை அறியாமல், என்னிடம் பக்தியும் இல்லாமல் உள்ள ஒருவன் சண்டாளனே ஆவான். அவன் மிகுந்த பாவங்கள் பல செய்தவனைக் காட்டிலும் தாழ்ந்தவன் என்பதை மீண்டும் கூறவேண்டுமோ?

54. வேதேஷு யஜ்ஞேஷு தபஸ்ஸு சைவ யஜ்ஞேச்வரே மயி சைவாப்ரியோ ய:
சண்டாள ஜந்மா ஸ ஹி கர்மணைவ புத்யாபி பாஹ்யோ பவநாதிரிக்த:

பொருள் – ஒருவன் வேதங்கள், யஜ்ஞங்கள், தவங்கள், யஜ்ஞேச்வரனாகிய என்னை ஆகிய அனைத்தையும் வெறுக்கக்கூடும். அவன் பிறப்பால் மட்டும் அல்லாமல் கர்மங்களாலும், புத்தியாலும் சண்டாளனே ஆவான்.

55. அதீஷ்வ வேதாந்மத்தஸ்தவம் அங்கோபாங்க சிராம்ஸி ச
அர்த்தசாஸ்த்ரம் காமசாஸ்த்ரம் சில்பசாஸ்த்ரம் சிகித்ஸகம்

பொருள் – வேத அத்யயனம் எனக்காகச் செய்தல் வேண்டும். இது தவிர வேதங்களை அதன் ஆறு அங்கங்களுடன் கற்கவேண்டும். மேலும் அவற்றின் உபஅங்கங்கள், உபநிஷத்துக்கள், அர்த்தசாஸ்த்ரம், காமசாஸ்த்ரம், சில்பசாஸ்த்ரம், வைத்யசாஸ்த்ரம் போன்றவற்றையும் பயிலவேண்டும்.

56. ஸ்ருஜஸ்வ வேத சப்தேப்யோ தேவாதீந்மத் ப்ரஸாத:
வர்ணாச்ரம விபாகம் ச தேஷாம் தர்மாந் ப்ருதக்விதாந்

பொருள் – எனது அனுக்ரஹம் மூலமாகவும், வேதங்களின் சப்தம் மூலமாகவும் நீ மற்ற தேவர்களையும், மற்றவர்களையும் படைப்பாயாக. வர்ணாச்ரம தர்ம பேதங்களையும், அவற்றுக்கான தர்மங்களையும் படைப்பாயாக.

57. லோகாம்ச்ச ஸ்வர்க்க நரகௌ போகாநுச்சாவசாநபி
நாமரூப விபாகம் ச தேஷாம் த்வம் கல்பயிஷ்யஸி

பொருள் – அனைத்து லோகங்கள், ஸ்வர்க்கம், நரகம், தாழ்ந்த லோக, உயர்ந்த லோகம் போன்றவற்றையும் படைப்பாயாக. உன்னால் படைக்கப்பட்ட இவை அனைத்தையும் நீயே பிரித்து அவற்றுக்கான பெயர் மற்றும் வடிவங்களையும் அமைப்பாயாக.

ஸ்ரீமஹேச்வர உவாச –

58. இதி ஏவம் உக்த்வா விஹகாதிரூடோ விதாந்விதாத்ரே விதிவத் ப்ரதாய
ஸம்ஸ்தூயமாநச்ச துராநநேந தத்ர அந்தர் ஆஸீத் ஸஹஸா முகுந்த:

பொருள் – இப்படியாகக் கருடனில் அமர்ந்தபடி முகுந்தன் நான்முகனிடம் உரைத்தான். அதன் பின்னர் வேதங்களை அவனுக்கு உபதேசம் செய்தான். இதனைத் தொடர்ந்து அவன் நான்முகனால் துதிக்கப்பட்டு வணங்கப்பட்டான். தொடர்ந்து ஸர்வேச்வரன் அங்கிருந்து மறைந்தான்.

ஸ்ரீமத்ப்ரஹ்மாண்ட புராணத்தில் உள்ள ஸ்ரீரங்கமாஹாத்ம்யத்தின் இரண்டாம் அத்யாயம் ஸம்பூர்ணம்

அத்யாயம் – 3 – ஸ்ரீரங்கவிமானம் வெளிப்படுதல்

ஸ்ரீமஹேச்வர உவாச –

1. ததா ஸஸர்ஜ பூதாநி லோகாம்ச்சைவ சதுர்தச
ஸத்யலோகம் ஸமாதிஷ்டத் ஸ்வயம்பூர் புவநேச்வர:

பொருள் – அதன் பின்னர் ஸர்வேச்வரனின் ஆணைப்படியே நான்முகன் அனைத்து உயிர்களையும், பதினான்கு லோகங்களையும் படைத்தான். தான் இருப்பதற்காக ஸத்யலோகம் என்பதையும் உண்டாக்கினான்.

2. ஸ த்ருஷ்ட்வா வேதசப்தேஷு தேவாதீநாம் கதாகதம்
கர்மணாமபி போகேந க்ஷயம் ச மஹதாமபி

பொருள் – வேதசப்தங்களின் உதவியுடன் நான்முகன் தேவர்களின் வருகை, செயல்கள் முதலியவற்றை நியமித்தபடி இருந்தான். ஒருவன் எத்தனை நற்கார்யம் செய்து புண்ணியங்களைச் சம்பாதித்தாலும், அவற்றை அனுபவிக்க அனுபவிக்க அவை கழிந்தபடியே இருக்கும் என்பதை உணர்ந்தான்.

3. ஐச்வர்யாணாம் ததாஸ்தைர்யம் அண்டாம் தர்வர்த்திநாமபி
அலக்ஷ்ய ஸ்வபதஸ்யாபி க்ஷயம் காலேந பூயஸா

பொருள் – மேலும் ப்ரம்மாண்டத்தில் உள்ள அனைத்து ஐச்வர்யங்கள் உள்ளிட்ட பலவும் நிலையில்லாதவை என்பதையும் உணர்ந்தான். தன்னுடைய "நான்முகன்" என்னும் பதவியும் கௌரவமும் கூட சில காலம் கழிந்தவுடன் அழியும் என்பதையும் அறிந்தான்.

4. க்ஷீரோதம கமத்தாம விஷ்ணோரத்புத கர்மண:
தப: பரமமாஸ்தாய தோஷயாமாஸ மாதவம்

பொருள் – அதன் பின்னர் நான்முகன் அங்கிருந்து புறப்பட்டு மஹாவிஷ்ணுவின் அற்புதமான இடமாகிய திருப்பாற்கடலுக்குச் சென்றான். அங்கு உயர்ந்த தவம் இயற்றி, மாதவனாகிய ஸர்வேச்வரனுக்கு மகிழ்வை உண்டாக்கினான்.

5. தத: ப்ரஸந்நோ பகவாந் பிப்ராண: கூர்ம விக்ரஹம்
ப்ரஸந்ந: அஹமிதி ப்ராஹ ப்ரஹ்மணாம் ஸலிலே ஸ்தித:

பொருள் – அப்போது ஸர்வேச்வரன் கூர்மாவதாரத்தில் தண்ணீரில் காட்சி அளித்தான். அந்த நீரில் இருந்தபடியே நான்முகனைப் பார்த்து, "இதோ உன் முன்பாக நான் வந்துள்ளேன்", என்றான்.

Email:sridharan_book@yahoo.co.in

6. தம் அத்புத தமம் த்ருஷ்ட்வா வ்யாஜஹர சதுர்முக:
ப்ரஸந்நோ யதி மே தேவ ஸ்வரூபம் தர்சய ஸ்வமே

பொருள் – நான்முகன் அந்த ஸர்வேச்வரனின் அற்புதமான ரூபத்தைக் கண்டு மகிழ்ந்தான். அவன் ஸர்வேச்வரனிடம், "தேவனே! தாங்கள் என்னிடம் மகிழ்வு கொண்டிருந்தீர்கள் என்றால், உங்களுடைய ஸ்வரூபத்தை எனக்குக் காண்பிக்க வேண்டும்", என்றான்.

7. அத்ருஷ்ட பூர்வம் ஹி மயா பரம் ரூபம் கதாசந
மத்ஸ்ய கூர்ம விஹங்காநாம் த்ருஷ்டம் ரூபம் நராச்வயோ:

பொருள் – மேலும் என்னால் இதுவரை காணப்படாத உங்களுடைய உயர்ந்த ரூபத்தை எனக்குக் காண்பிக்கவேண்டும். நான் தங்களது மத்ஸ்யம், கூர்மம், ஹம்ஸம், ஹயக்ரீவன் போன்ற ரூபங்களைக் கண்டு களித்தேன்.

8. த்ரஷ்டும் இச்சாமி தே ரூபம் பரம் குஹ்யம் ஸநாதநம்
ரூபம் அப்ராக்ருதம் திவ்யம் பரமம் வேதவேதிதம்

பொருள் – "ஆகவே நான் தங்களுடைய புராதனமான, மிகவும் இரகசியமான உயர்ந்த ரூபத்தைக் காண ஆவலாக உள்ளேன்", என்றான். இதனைக் கேட்ட ஸர்வேச்வரன், "வேதங்களில் எனது ரூபங்கள் குறித்து விரிவாக உரைக்கப்பட்டுள்ளது. அந்த ரூபங்கள் ப்ரக்ருதியின் தொடர்பற்ற திவ்யமானவை ஆகும்", என்றான்.

9. ந சக்யம் த்வாத்ருசைர் த்ரஷ்டும் அவதாரம் விநா ப்ரபோ
ஸங்கல்பேநைவ ஸம்ஹர்த்தும் சக்த: அஹமபி வைரிண:

பொருள் – என்னுடைய அந்த ரூபங்களை அந்தந்த அவதார காலகட்டங்கள் தவிர மற்ற எந்தக் காலத்திலும் காண இயலாது. எனது ஸங்கல்பம் மூலமாக நான் அனைத்து விரோதிகளையும் அடியுடன் நீக்க இயலும்.

Email:sridharan_book@yahoo.co.in

10. உபாஸநார்த்தம் பக்தாநாம் ஸ்ருஜாம் யாத்மாநம் ஆத்மநா
சக்த: அஹம் அபி தத்காலே ஸம்ஹர்த்தும் ஸர்வ வைரிண:

பொருள் – ஆனால் எனது பக்தர்கள் உபாஸிக்க ஏதுவாக நான் அந்தந்த அவதாரங்களை எடுத்துக் கொள்கிறேன். அந்தந்த நேரங்களில் எனது விரோதிகளை அழிப்பதற்கான அனைத்து சக்திகளையும் கொண்டுள்ளேன்.

11. மத்பக்தாநாம் விநோதார்த்தம் கரோமி விவிதா: க்ரியா:
ஈக்ஷண த்யாந ஸம்ஸ்பர்சை: மத்ஸ்ய கூர்ம விஹங்கமா:
12. புஷ்ணந்தி ஸ்வாந்ய மத்யாநி ததாஹமபி பத்மஜ
இதி தர்சயிதும் ப்ரஹ்மந் தேஷாம் ரூபம் ப்ரதர்சிதம்

பொருள் – என்னுடைய பக்தர்களுக்காக நான் அந்தந்த அவதாரங்களில் பல விநோதமான செயல்களில், பலவிதமான செயல்பாடுகளில் ஈடிபட்டபடி உள்ளேன். மீன்கள் பார்வை மூலமும், ஆமைகள் எண்ணம் மூலமும், பறவைகள் தொடுவதன் மூலமும் தங்களது குழந்தைகளை வளர்க்கின்றன. இது போன்று நானும் எனது பார்வை (கடாக்ஷம்), எண்ணம் (ஸங்கல்பம்), தொடுதல் ஆகியவை மூலம் எனது பக்தர்களைப் பாதுகாத்தபடி உள்ளேன். தாமரையில் அமர்ந்த நான்முகனே! இந்தக் கருத்தை வெளிப்படுத்தவே நான் மத்ஸ்யம், கூர்மம் மற்றும் ஹம்ஸம் ஆகிய அவதாரங்களை எடுத்தேன்.

13. யோகக்ஷேமம் வஹிஷ்யாமி இதி ஏவம் அச்வம் ப்ரதர்சிதம்
பௌருஷஸ்ய ப்ரஸித்த்யர்த்தம் தர்சிதா புருஷாக்ருதி:

பொருள் – நான் அடியார்களின் யோகத்தையும் க்ஷேமத்தையும் மனதில் கொண்டு முன்பு குதிரை ரூபம் எடுத்துள்ளேன். நான் எனது புருஷத்தன்மையை வெளிப்படுத்துவற்காக புருஷனாகவும் அவதரித்துள்ளேன்.

14. யதி மே பரமம் ரூபம் த்ரஷ்டும் இச்சஸி பத்மஜ
பூயஸ்தபஸ்ஸமாதிஷ்ட ஜபந் மந்த்ரமிமம் மம

பொருள் – நீ என்னுடைய உயர்ந்ததான வேறு ஒரு ரூபத்தைக் காண விரும்பினாய் என்றால், மீண்டும் அந்த மந்த்ரத்தையே ஜபம் செய்வாய் அல்லது தவம் இயற்றுவாயாக.

15. நமோ நாராயணாயேதி நித்யம் ஓங்கார பூர்வகம்
ஜபம் அஷ்டாக்ஷரம் மந்த்ரம் ஸத்யஸித்திம் அவாப்ஸ்யஸி

பொருள் – அன்றாடம், "நமோ நாராயணாய" என்னும் மந்த்ரத்தின் முன்பாக "ஓம்" என்பதைச் சேர்த்துக் கொண்டு (அதாவது ஓம் நமோ நாராயணாய) ஜபித்தபடி இருப்பாயாக. இந்த அஷ்டாக்ஷர மந்த்ரத்தின் மூலம் உனது அனைத்து விருப்பங்களும் நிறைவேறப் பெறுவாயாக.

16. நாநேந ஸத்ருசோ மந்த்ரோ வேதமந்த்ரேஷு வித்யதே
ஸார: அயம் ஸர்வமந்த்ராணாம் மூலமந்த்ர: ப்ரகீர்த்தித:

பொருள் – இந்த அஷ்டாக்ஷர மந்த்ரத்தைப் போன்று வேறு எந்த ஒரு மந்த்ரமும் இல்லை (ஈடாக இல்லை). அனைத்து மந்த்ரங்களுக்கும் இதுவே மூலமந்த்ரமாகும். அனைத்து மந்த்ரங்களில் சாறாக இதுவே உள்ளது.

17. ஜகத: காரணத்வம் ச ஸ்ருஷ்டி ஸ்திதி லயேஷு ச
ஹேதுத்வம் மோக்ஷதத்வம் ச மந்த்ரே அஸ்மிந் மம தர்சிதம்

பொருள் – என்னுடைய ஜகத்காரணத்வம் (உலகின் காரணம்), ஸ்ருஷ்டி – இருப்பு – லயித்தல் ஆகியவற்றுக்கு காரணமாக உள்ள தன்மை, மோக்ஷம் அளிக்கக்கூடிய தன்மை ஆகிய பலவும் இந்த அஷ்டாக்ஷர மந்த்ரத்தில் உணர்த்தப்படுகிறது.

18. உபாயத்வம் உபேயத்வம் ஸாத்யத்வம் ஸித்ததாம் அபி
மம சக்தி ஹி மந்த்ர: அயம் தஸ்மாத் ப்ரியதமோ மம

பொருள் – மோக்ஷத்திற்கான உபாயம், உபேயம் (அடையப்படும் இலக்கு), ஸாத்யோபாயம் (ப்ரபத்தி போன்றவை), ஸித்தோபாயம் (நாம் செய்யவேண்டிய அவசியம்

Email:sridharan_book@yahoo.co.in

இன்றி, தானாகவே முன் நிற்கும் உபாயம் – இது எம்பெருமானே ஆவான்) ஆகிய பலவும் நானே என்று இந்த மந்த்ரம் உரைக்கிறது. இந்த மந்த்ரம் எனக்கு மிகவும் ப்ரியமான ஒன்றாகும்.

19. ஸ்ருஜ்யத்வம் சேதநத்வம் ச ஸர்வத்ர பரதந்த்ரதாம்
ஸம்ஸாரம் அபவர்கம் ச சக்தி ஜீவஸ்ய மந்த்ரராட்

பொருள் – மந்த்ரங்களின் சக்ரவர்த்தியான இந்த அஷ்டாக்ஷரம் – ஸ்ருஷ்டி, சேதநத்தன்மை (ஞானமயம்), சேதனர்கள் அனைவரும் மற்றவர் வசப்பட்டவர்கள், சேதனர்கள் ஸம்ஸாரத்தில் இருப்பதற்கும் மோக்ஷம் பெறுவதற்கும் சக்தி பெற்றவர்கள் – போன்ற பலவற்றையும் கூறுவதாகும்.

20. க்ரியதே அநேந மந்த்ரேண ஆத்மந: பரமாத்மநி
நிவேதநம் மயி ப்ரஹ்மந் மத்பக்தேஷு ச சாச்வதம்

பொருள் – இந்த மந்த்ரம் மூலமே எனது பக்தர்கள் தங்களை எனக்கு ஆத்மசமர்ப்பணம் செய்கிறார்கள். இது போன்று எல்லையற்ற காலமாக இருந்து வரும் எனது பக்தர்கள், ப்ரஹ்மமான எனக்குத் தங்களை ஆத்மசமர்ப்பணம் செய்து வருகிறார்கள்.

21. பௌமாந் மநோரதாந் ஸ்வர்க்கயாந் முக்திமப்யாதி துர்லபாம்
ஸாதயிஷ்யந்தி அநேநைவ மூலமந்த்ரேண மாமகா:

பொருள் – மூலமந்த்ரமான இந்த அஷ்டாக்ஷரம் மூலமே எனது அடியார்கள் – தங்களது விருப்பங்கள் அனைத்தும் நிறைவேறப் பெறுகிறார்கள், ஸ்வர்க்கம் போன்றவற்றை அடைகிறார்கள், எளிதில் கிட்டாத முக்தியை அடைகிறார்கள்.

22. அநஷ்டாக்ஷர தத்வஜ்ஞை: அதபஸ்விபி: அவ்ரதை:
துர்தச: அஹம் ஜகத்தாத: மத்பக்தி விமுகைரபி

Email:sridharan_book@yahoo.co.in

பொருள் – யார் ஒருவர் அஷ்டாக்ஷர மந்த்ரத்தின் தத்துவத்தை அறியாதவரோ, யார் தவங்கள் இயற்றவில்லையோ, யார் விரதங்களைக் கைக்கொள்ளவில்லையோ, யார் என்னிடம் பக்தி கொள்ளவில்லையோ – அவர்களுக்கு இந்த உலகில் தந்தையான எனது தரிசனம் கிட்டாது.

ஸ்ரீமஹேச்வர உவாச –

23. இதி உக்த்வா அந்தர்ததே ப்ரஹ்மந் அஸ்மாகம் பச்யத: பிது:
துர்விபாவ்ய கதிர்வேதை: கூர்மரூபீ ஜநார்த்தந:

பொருள் – இப்படியாகக் கூர்மாவதாரம் எடுத்து வந்த ஜநார்த்தனன் விரிவாக உரைத்தான். தொடர்ந்து நான்முகன் அவனைப் பார்த்தபடி இருந்தபோதே அவன் மறைந்தான்.

24. அந்தர்ஹிதே பகவதி ப்ரஹ்மலோக பிதாமஹ:
அஷ்டாக்ஷரேண மந்த்ரேண புநஸ்தேபி மஹத் தப:

பொருள் – அதன் பின்னர் பகவான் கூறியபடி, அனைத்திற்கும் பிதாமகனான நான்முகன், தனது ப்ரஹ்மலோகத்தில் அமர்ந்தபடி, அஷ்டாக்ஷர மந்த்ரத்தை உச்சரித்தபடி மிகவும் கடுமையான தவத்தில் ஆழ்ந்தான்.

25. தஸ்ய வர்ஷ ஸஹஸ்ராந்தே தப்யமாநஸ்ய வேதஸ:
ஆவிர் ஆஸீத் மஹத்தாம ஸ்ரீரங்கம் க்ஷீரஸாகராத்

பொருள் – இப்படியாக நான்முகன் ஆயிரம் வருடங்கள் கடுமையான தவம் இயற்றினான். அவன் தவத்தில் அமர்ந்தபோது, அவன் முன்பாக "ஸ்ரீரங்கம்" என்ற பெயர் கொண்டதான பெரியகோயில் திருப்பாற்கடலில் இருந்து வெளிப்பட்டது.

26. தத்க்ஷணாத் ஸமத்ருச்யந்த வைகுண்டபுர வாஸிந:
ஸுநந்த நந்த ப்ரமுகா: ஸநந்த ஸநகாதய:

Email:sridharan_book@yahoo.co.in

பொருள் – அப்படி வெளிப்பட்ட அதே நொடியில் ஸ்ரீவைகுண்டத்தில் உள்ள அனைவரும் அதில் காணப்பட்டனர். மேலும் ஸுநந்தர், நந்தர், ஸநகர், ஸநந்தர் போன்ற பலரும் அங்கு காணப்பட்டனர்.

27. யுஷ்மதஸ் மத் ப்ரப்ருதயோ யே சாந்யே ஸத்யவாதிந:
தேவகந்தர்வ யக்ஷாச்ச ருஷய: ஸித்தசாரணா:

பொருள் – அதில் நாரதனாகிய நீ, சிவனாகிய நான், மற்றும் பலர், ஸத்யவாதிகள், தேவர்கள், கந்தர்வர்கள், யக்ஷர்கள், ரிஷிகள், ஸித்தர்கள், சாரணர்கள் என்று பலரும் காணப்பட்டோம்.

28. உவாஹ தாம தத் திவ்யம் வேதமூர்த்தி விஹங்கராட்
ச்வேதச்சத்ரம் ததாராஸ்ய மௌக்திகம் புஜகாதிப:

பொருள் – அந்த திவ்யமான ஸ்ரீரங்கத்தை வேதமூர்த்தியான கருடன் தன் மீது எழுந்தருளச் செய்தபடி வந்தான். அதன் மீது முத்துக்கள் பதிக்கப்பட்ட வெண்மையான குடையை ஆதிசேஷன் பிடித்தபடி வந்தான்.

29. விஷ்வக்ஸேநோ வேத்ரபாணி: ப்ருஷ்டதஸ்தத ஸேவத
அபிதச்சந்த்ரஸூர்யௌ ச வீஜாதே சாமர த்வயம்

பொருள் – விஷ்வக்ஸேநர் வேத்ர தண்டத்தை ஏந்தியபடி வந்தார். அந்த விமானத்தின் பின்னே நின்று அவர் ஸேவை செய்தபடி வந்தார். சந்த்ரனும் சூரியனும் இரண்டு பக்கங்களிலும் நின்று சாமரம் வீசியபடி வந்தனர்.

30. தும்புரு: பவதா ஸார்தம் கந்தர்வ: அமர கிந்நரா:
அகாயந்த ஸ்துவந் பேடுரவதந்த ச குஹ்யகா:

பொருள் – தும்புருவும், நாரதனாகிய நீயும் இனிமையாகப் பாடியபடி வந்தீர்கள். கந்தர்வர்கள் இனிமையாக இசைத்தபடி வந்தனர். தேவர்கள், கிந்நரர்கள் போன்ற பலரும் மேலே இருந்தபடி துதித்தனர்.

31. அஹம் இந்த்ரச்ச தேவாச்ச ஸித்தா: ஸாத்யச்ச ஸாதகா:
ஜிதந்த இதி சப்தேந ந பூரயாமாஸி மாம் வரம்

பொருள் – சிவனாகிய நான், இந்த்ரன், தெவர்கள், ஸித்தர்கள், ஸாத்யர்கள், ஸாதகர்கள் போன்ற பலரும், “வெற்றி உண்டாகட்டும்” என்று உரைத்தபடி இருந்தோம். அந்த இடத்தில் இந்த ஓசையைத் தவிர வேறு எதுவும் எங்கும் இல்லை. இந்த ஓசையே எங்கும் பரவி நின்றது.

32. தேவதுந்துபயோ நேதுர்நந்ருதுச்ச அப்ஸரேகணா:
முமுசு: புஷ்பவ்ருஷ்டிச்ச புஷ்கலாவர்த்தகாதிபி:

பொருள் – தேவலோகத்தில் துந்துபி என்னும் வாத்தியம் முழங்கியது. அங்கிருந்த அப்ஸரஸ் பெண்கள் அனைவரும் மிகவும் அழகாக நாட்டியம் ஆடினர். புஷ்கலம், ஆவர்த்தகம் போன்ற பல மேகங்களை மலர்களைத் தூவின.

33. ஆகதம் ரங்கதாம் இதி சுச்ருவேகா ஹலத்வநி:
திவ்யம் விமாநம் தம் த்ருஷ்ட்வா ஸ்வயம் வ்யக்த்தமஹார்த்திமத்

பொருள் – எங்கு பார்த்தாலும் இனிமையான ஓசையாக “ஶ்ரீரங்கம் வந்தது” என்பதே சூழ்ந்தது. திவ்யமான அந்த ஶ்ரீரங்கவிமானத்தைப் பார்த்தவுடன் இந்த ஓசையானது தானாகவே எங்கும் எழுந்தது.

34. தேஜோமயம் ஜகத்வ்யாபி ஶ்ரீரங்கம் ப்ரணவாக்ருதிம்
உத்தாய ஸம்ப்ரமாவிஷ்டோ ஹ்ருஷ்ட: புஷ்ட: ப்ரஜாபதி:

Email:sridharan_book@yahoo.co.in

பொருள் – அந்த ப்ரணவமயமான ஸ்ரீரங்கவிமானம் மிகுந்த தேஜஸ்ஸுடன் விளங்கியது. அந்த ஒளியானது அனைத்து உலகங்களிலும் பரவி நின்றது. இப்படிப்பட்ட ஸ்ரீரங்கவிமானத்தைக் கண்ட நான்முகன், மிகுந்த மகிழ்ச்சி அடைந்தவனாக தனது தவத்தில் இருந்து எழுந்தான். அந்த ப்ரஜாபதி மகிழ்ச்சியில் திளைத்தான்.

35. பபாத சிரஸா பூமௌ சிந்நமூல இவ த்ரும:
துஷ்டாவோத்தாய வதநைர்நமோ நம இதி ப்ருவந்

பொருள் – அந்த நான்முகன் வேரற்ற மரம் போன்று அப்படி கீழே விழுந்து, சாஷ்டாங்கமாக நமஸ்காரம் செய்தான். தன்னுடைய நான்கு முகங்களாலும், "நமோ நம:" என்று உச்சரித்தபடி ஸ்ரீரங்கவிமானத்தைத் துதித்தான்.

36. ந்யபாத யத்புநர்தேஹம் ஹேமதண்டம் இவாவநௌ
சதுர்பிர் வதநைர்வதா: சதுர்வேதைஸ்ஸமம் ஸ்துவந்

பொருள் – பொன்னிறமான தண்டம் ஒன்று கீழே கிடந்தால் எப்படி இருக்குமோ அது போன்று நான்முகன் மீண்டும் தனது சரீரத்தை அப்படியே தரையில் கிடத்தி நமஸ்காரம் செய்தான். தனது நான்கு முகங்களால், நான்கு வேதங்களை சரிசமமாக ஒரே நேரத்தில் ஓதியபடி நின்றான்.

37. பத்தாஞ்ஜலிபுடோ பூத்வா த்ருஷ்டவாந் அச்யுத ஆலயம்
இந்த்ரியாண்யஸ்ய ஸர்வாணி சரிதார்த்தாநி தத்க்ஷணாத்

பொருள் – தனது இரண்டு கரங்களையும் குவித்தபடி அடியார்களை நழுவவிடாத அழகியமணவாளனின் ஸ்ரீரங்கவிமானத்தை வணங்கினான். இப்படியாக அவன் ஸ்ரீரங்கவிமானத்தைக் கண்டவுடன், அந்த நொடியிலேயே அவனுடைய அனைத்து இந்த்ரியங்களும், இந்த்ரியங்கள் என்னும் பயனை அடைந்தன.

38. அபவந் ஸ்வஸ்வ சேஷ்டாபி: அச்யுத ஆலய தர்சநாத்
தத: ஸுநந்தோ பகவத் தாஸவர்ய: சதுர்முகம்

Email:sridharan_book@yahoo.co.in

பொருள் – அங்கிருந்த அனைவரும் அந்த அச்சுதனின் விமானத்தைக் கண்டு தங்கள் தங்கள் நமஸ்காரத்தைச் செய்தனர். அப்போது பகவானின் தாஸர்களில் மிகவும் முதிர்ந்தவரான ஸுநந்தர் என்பவர் நான்முகனைப் பார்த்தார்.

39. உவாச தர்சயந் ரங்கம் வேத்ராணபி: க்ருதாஞ்ஜலி:
தாதராலேகயைதத்த்வம் விஷ்ணோ: ஆயதநம் மஹத்
ஸ்ரீரங்கம் இதி விக்யாதம் பவதஸ்தபஸா: பலம்

பொருள் – அவர் நான்முகனுக்கு ஸ்ரீரங்கவிமானத்தைக் காண்பித்தார். அதன் பின்னர் தனது கரங்களைக் கூப்பியவராக நின்று நான்முகனிடம் கூறத் தொடங்கினார் – உன்னுடைய கடுமையான தவத்தின் பலனாக வந்துள்ள ஸ்ரீரங்கவிமானத்தைக் காண்பாயாக. இது மஹாவிஷ்ணுவின் மிகவும் உயர்ந்த தனமாகும்.

40. த்ரயக்ஷரம் ப்ரஹ்ம பரமம் சப்தாத்மைவ வ்யவஸ்திதம்
தஸ்ய ச ப்ரதிபாத்ய: அயம் சேதேந்த: ஸ்ரீநிகேதந:

பொருள் – இந்த ஸ்ரீரங்கவிமானத்தில் மூன்று அக்ஷரங்களுடன் கூடியதான ப்ரணவ மந்த்ரம் அடங்கி உள்ளது. இந்த ஓங்காரத்தால் (ஓம் என்னும் சப்தம் மூலம்) உணர்த்தப்படுபவனும், மஹாலக்ஷ்மியின் நாதனும் ஆகிய ஸர்வேச்வரன் இந்த விமானத்திற்குள் கண்வளர்கிறான்.

41. சது: ப்ரதக்ஷிணம் க்ருத்வா சதுர்திக்ஷு ப்ரணம்ய ச
ப்ரவிச்யாந்த ரூபாஸ்வைநம் உபாஸ்யம் ஸர்வதேஹிநாம்

பொருள் – இந்த ஸ்ரீரங்கவிமானத்தை நீ நான்குமுறை வலம் வருவாயாக. அதன் பின்னர் நான்கு திசைகளிலும் நமஸ்காரம் செய்வாயாக. அதனைத் தொடர்ந்து இந்த விமானத்திற்குள் சென்று அனைத்து ஜீவர்களாலும் உபாஸிக்கப்படும் ஸர்வேச்வரனை உபாஸிப்பாயாக.

42. யம் உபாஸ்ய விதாதர: பூர்வே அபி பரமாம் கதி
ப்ராப்நுவந் சர்வசக்ராத்ய தேவாச்சாந்யே விபச்சித:

பொருள் – இதற்கு முன்பிருந்த நான்முகன், தேவர்கள், ருத்ரன் போன்ற பலரும் இந்த ஸ்ரீரங்கநாதனை உபாஸனை செய்தபடி இருந்தனர். இதனால்தான் அவர்கள் மிகவும் உயர்ந்த கதியை அடைந்தனர் – என்று கூறி முடித்தார்.

ஸ்ரீமத்ப்ரஹ்மாண்ட புராணத்தில் உள்ள ஸ்ரீரங்கமாஹாத்ம்யத்தின் மூன்றாம் அத்யாயம் ஸம்பூர்ணம்

அத்யாயம் – 4 – ஸ்ரீரங்கவிமானத்தை நான்முகன் துதித்தல்

1. இதிதம் ஆகர்ண்ய ஸுநந்தபாஷிதம் விநீதவேஷோ விதிரேத்ய தாம தத்
தத்ர்ச விச்வம் ஸஸுராஸுரம் முநே சராசரம் தாமநி தத்ர வைஷ்ணவே

பொருள் – இப்படியாக ஸுநந்தரரால் கூறப்பட்ட நான்முகன் மிகவும் பணிவுடன் ஸ்ரீரங்கவிமானத்தின் அருகில் வந்தான். அந்த விமானத்தில் இந்த உலகம், தேவர்கள், அசுரர்கள், முனிவர்கள், அண்டசராசரங்கள் என்று அனைத்தையும் கண்டான்.

2. உபர்யஸ்தாச்ச திவம் மஹீம் ச மத்யே அந்தரிக்ஷம் புஜகேந்த்ரமந்த:
த்வாராந்திகே வை விஜயம் ஜயம் ச பார்ச்வத்வயே விக்நபதிம் ச துர்க்காம்

பொருள் – அந்த ஸ்ரீரங்கவிமானத்தின் மேற்பகுதியில் ஸ்வர்க்கத்தையும், கீழ்ப்பகுதியில் பூலோகத்தையும், நடுவில் அந்தரிக்ஷத்தையும் கண்டான். அதனுள் ஆதிசேஷனைப் பார்த்தான். அந்த விமானத்தின் வாயிலில் ஜயன் மற்றும் விஜயன் ஆகியவர்களியும் கண்டான்,. இரண்டு பக்கங்களிலும் விநாயகரையும் துர்க்கையையும் பார்த்தான்.

Email:sridharan_book@yahoo.co.in

3. ஸரஸ்வதீம் ஸர்வஜகத் ப்ரஸூதிம் ஓங்காரரூபம் சிகரே ததர்ச
த்ரயீம் ச வித்யாம் முகுடேஷு தஸ்ய நாஸாமுகே ஸர்வரஹஸ்ய ஜாதம்

பொருள் – அதன் உச்சியின் மேற்பகுதியில் அனைத்து உலகின் தாயாக உள்ளவளும், ஓங்கார ரூபமாக உள்ளவளும் ஆகிய ஸரஸ்வதியைக் கண்டான். விமானத்தின் க்ரீடம் போன்ற பகுதியில் மூன்று வேதங்களை வித்யாரூபமாகவும், நாசிப்பகுதியில் உபநிஷத்துக்களையும் கண்டான்.

4. பாதேஷு யஜ்ஞாத் பலகேஷு சேஷ்டீச்சதீச்ச சித்தேஷு ஹவீம்ஷி குக்ஷெள
ததந்தராவை மருதோ வஸூம்ச்ச மயா கிரீசாநிதராந்தசாபி

பொருள் – அதன் பாதங்களில் யஜ்ஞங்களைக் கண்டான். அதன் அடிப்பாகத்தில் இஷ்டிகளைக் கண்டான். வயிற்றுப் பகுதியில் அவிர்பாகங்களைக் கண்டான். அந்த ஸ்ரீரங்கவிமானத்தில் மருத்துகள், வஸுக்கள் போன்றவற்றுடன் பத்து ருத்ரர்களையும் பார்த்தான்.

5. த்விஷ்டகமாதித்யகணம் க்ருஹாம்ச்ச நக்ஷத்ரதாராச்ச முநீம்ச்ச ஸப்த
இந்த்ரம் யமம் வருணம் யக்ஷராஜம் ஹிதாசநம் ந்ருதீம் வாயுமீசம்

பொருள் – ஸ்ரீரங்கவிமானத்தில் பன்னிரண்டு ஆதித்யர்கள், நவகிரஹங்கள், நக்ஷத்ரங்கள், ஸப்தரிஷிகள், இந்த்ரன், யமன், வருணன், யக்ஷராஜன், அக்னி, நிவ்ருத்தி, வாயு, ஈசன் ஆகியோரைக் கண்டான்.

6. ஸோமம் ச பர்ஜந்யம் அசோஷமேவ ததர்ச தத்ரைவ யதாவகாசம்
விமாநம் அப்யேத்ய சதுர்ப்ரதக்ஷிணம் சதுர்திசம் தஸ்ய க்ருதப்ரமாண:

பொருள் – மேலும் அந்த விமானத்தில் ஸோமன், பர்ஜன்யன், மீதம் உள்ள பலரையும் கண்டான். மேலும் அந்த விமானத்தின் அருகில் சென்ற நான்முகன், நான்குமுறை வலம் வந்தான். பின்னர் நான்கு திசைகளிலும் நின்று வணங்கினான்.

7. தத் அந்தர் ஆவிச்ய விதிர்த்த தர்ச தம் விபிந்ந நீலாசல ஸந்நிகாசம்
ப்ரஸந்நவக்த்ரம் நளிநாயதேக்ஷணம் க்ருபாமயம் சாந்திநிகேத ரூபிணம்

பொருள் – அதன் பின்னர் நான்முகன் ஸ்ரீரங்கவிமானத்திற்குள் சென்று ஸ்ரீரங்கநாதனை தரிசனம் செய்தான். ஸ்ரீரங்கநாதன் எவ்விதம் காணப்பட்டான் என்றால் – உடைந்த இந்த்ர நீலக்கல் எவ்விதம் ஒளிருமோ அது போன்று ஒளிர்ந்தான்; அழகாகச் சிரித்த முகத்துடன் விளங்கினான்; தாமரை போன்று அழகாகன பரந்த திருக்கண்களைக் கொண்டிருந்தான்; அவனது பரந்த திருமார்பில் கருணையே வடிவான ஸ்ரீரங்கநாச்சியாருக்கான இருப்பிடம் காணப்பட்டது.

8. க்ரீட கேயூரக மகரகுண்டலம் ப்ரலம்ப முக்தாமணி ஹாரபூஷிதம்
விசால வக்ஷஸ்தலசோபி கௌஸ்துபம் ச்ரியா ச தேவ்யாத்யுஷிதோரூவக்ஷஸம்

பொருள் – அவனது திருமேனியில் க்ரீடம், கேயூரகம், மகரகுண்டலம், முத்துக்கள், உயர்ந்த மணிகள் கொண்டு இழைக்கப்பட்ட ஆபரணங்கள் காணப்பட்டன. பரந்த விசாலமான திருமார்பில் கௌஸ்துப மணியைத் தரித்திருந்தான். அந்தத் திருமார்பில் உயர்ந்த முத்துக்களால் ஆன மாலை காணப்பட்டது.

9. ப்ரதப்த சாமீகர சாருவாஸஸம் ஸுமேகலம் நூபுரசோபிதாங்க்ரிகம்
ஸுவர்துநிஜாத ம்ருணாளபாண்டுரம் ததாந மச்சச்வி யஜ்ஞஸூத்ரகம்

பொருள் – அவன் ஒளிவீசும் பட்டாடை அணிந்திருந்தான். அழகாக ஒளிர்கின்ற மேகலை என்னும் ஒட்டியாணம் பூண்டிருந்தான். திருவடிகளில் ஒளிவீசும் சலங்கைகள் அணிந்திருந்தான். கங்கை நதியில் பெருத்து வளர்கின்ற சணல் போன்ற வெண்மையான யஜ்ஞோபவீதம் தரித்திருந்தான்.

10. புஜோபதாநம் ப்ரஸ்ருதாந்ய ஹஸ்தம் நிகுஞ்சிதோத்தாநித பாதயுக்மம்
ஸுதீர்க்கமுர்வம் ஸமுதக்ரவேஷம் புஜங்கதல்பம் புருஷம் புராணம்

Email:sridharan_book@yahoo.co.in

பொருள் – தனது அழகான பருத்த இரண்டு தோள்களையும் தலையணை போன்று வைத்துள்ளான். தன்னுடைய இரண்டு திருவடிகளையும் சற்றே மடித்தவாறு மேற்புறம் நோக்கி, அனைவரையும் வசீகரிக்கும்படி வைத்துள்ளான். கூர்மையான நீண்ட நாசியைக் கொண்ட அவன், நேர்த்தியான வஸ்த்ரம் அணிந்துள்ளான். உயர்ந்த ஆதிசேஷனைப் படுக்கையாகக் கொண்ட அவன் மிகவும் புராதானமானவன் ஆவான்.

11. ஸ்வதேஜஸா பூரித விச்வகோசம் நிஜாஞ்ஞயா ஸ்தாபித விச்வசேஷ்டம்
ப்ரணம்ய துஷ்டாவ விதிர்முகுந்தம் த்ரைய்யர்த்த கர்ப்பைர் விசநைஸ்த்ரயீசம்

பொருள் – தனது தேஜஸ் மூலம் அவன் அனைத்து உலகங்களையும் உருவாக்குகிறான். தனது ஆணை மூலம் அவன் அனைத்து உலகங்களின் செயல்பாடுகளையும் ஒரு நொடியில் நிறுத்த இயலும். இப்படிப்பட்ட ஸர்வேச்வரனான முகுந்தனை நான்முகன் கண்டான். அதன் பின்னர் அந்த வேதங்களின் நாயகனை வேதங்களின் பொருள் முழுவதும் வெளிப்படும்படியான ஸ்தோத்ரங்கள் மூலம் துதிக்கத் தொடங்கினான்.

நான்முகன் ஸ்ரீரங்கநாதனைத் துதித்தல் -

12. நமோ நமஸ்தேஸ்து ஸஹஸ்ரமூர்த்தயே ஸஹஸ்ரபாதாக்ஷி சிரோருபாஹவே
ஸஹஸ்ரநாமந் சதஸப்ததந்தோ ஸஹஸ்ரகோட்யண்ட யுகாதிவாஸிநே

பொருள் – ஸ்ரீரங்கநாதா! எண்ணற்ற ரூபங்கள், பாதங்கள், திருக்கண்கள், திருமுடிகள், திருத்தோள்கள், திருநாமங்கள் கொண்டவனே! அனைத்து ஆயிரம் பிரம்மாண்டங்களிலும் வ்யாபித்து நிற்கும் உனக்கு எனது நமஸ்காரங்கள்.

13. நமஸ்ஸக்ருத்தேஸ்து நமோ த்விரஸ்து நமஸ்த்ரிரஸ்த்வீச நமச்சதுஸ்தே
நமஸ்ததா பும்சக்ருத்வோதசேச நமஸ்ததா ஸஹஸா நித்யமாத்யா

பொருள் – ஸ்ரீரங்கநாதா! உனக்கு மீண்டும் என்னுடைய நமஸ்காரங்கள். இரண்டாவது முறை நமஸ்காரங்கள், மூன்றாவது முறை நமஸ்காரங்கள், நான்காவது முறை, ஐந்தாவது

Email:sridharan_book@yahoo.co.in

முறை என்னுடைய நமஸ்காரங்கள், பத்தாவது முறை என்று எப்போதுமே எனது நமஸ்காரங்கள்.

14. நமோஸ்து நித்யம் சதக்ருத்வ ஈசதே ஸஹஸ்ரக்ருத்வோ பஹுசச்ச பூமந்
நமோஸ்து தாதோஸி ஹி ந: ப்ரஸீத நமோஸ்த்ரிலோகாதிப லோகநாத

பொருள் – ஈசனே! ஸ்ரீரங்கநாதா! என்னுடைய நித்யமான நமஸ்காரங்கள் நூறு தடவை, ஆயிரம் தடவை, பல தடவைகள் உனக்கு உரித்தாகுக. இந்த உலகை வ்யாபித்துள்ளவனே! எங்கள் அனைவருக்கும் தந்தையானவனே! உன்னுடைய க்ருபையை அளிப்பாயாக. மூன்று உலகங்களுக்கும் அதிபதியே! உலகங்களின் நாதனே! உனக்கு என் நமஸ்காரங்கள்.

15. ப்ரஸீத தேவேச ஜகந்நிவாஸ ப்ரஸீத லக்ஷ்மீ நிலயாதிதேவ
ப்ரஸீத நாராயண ரங்கநாத ப்ரஸீத விச்வாதிக விச்வமூர்த்தே

பொருள் – தேவர்கள் அனைவருக்கும் ஈசனே! கருணை பொழிவாயாக. இந்த உலகை வ்யாபித்துள்ளவனே! ஸ்ரீரங்கநாச்சியார் வாசம் செய்யும் இடத்தின் தேவனே! நாராயணா! ஸ்ரீரங்கநாதா! அனைத்து உலகங்களையும் நியமிப்பவனே! அனைத்தூ உலகின் மூர்த்தியே! உனது க்ருபை வேண்டும்.

16. ஜிதந்தே முகுந்த ப்ரபந்நார்த்திஹரிந் ஜிதந்தே ஜகந்நாத கோவிந்தம் தேவ
ஜிதந்தே ஸ்ரீய:காந்தம் ரங்கேச விஷ்ணோ ஜிதந்தே ஹரே வாஸுதேவாதி தேவ

பொருள் - முகுந்தா! உனக்கு வெற்றி உண்டாகட்டும். உன்னிடம்சரணம் புகுந்த ப்ரபந்நர்களின் துயரங்களைப் போக்குபவனே! ஜகந்நாதா! கோவிந்தா! ஸ்ரீரங்கநாச்சியாரின் நாயகனே! ஸ்ரீரங்கநாத! மஹாவிஷ்ணுவே! ஸ்ரீஹரி! வாஸுதேவா! உனக்கு வெற்றிகள் உண்டாகட்டும்.

17. ப்ரஹ்மாநநம் ராஜகமேவ பாஹு ஊரூ ததா விட்சரணௌ ச சூத்ர:
வர்ணாச்ரம ஆசார விதி: த்வமேவ த்வமேவ யஜ்ஞ: பரமம் பதம் ச

பொருள் – உன்னுடைய திருமுகத்திலிருந்து அந்தணர்களும், தோள்களிலிருந்து க்ஷத்ரியர்களும், தொடைகளிலிருந்து வைசியர்களும், திருவடிகளிலிருந்து சூத்ரர்களும் தோன்றினர். அந்தந்த வர்ணங்கள், ஆச்ரமங்கள், அவற்றின் விதிகள் போன்ற பலவும் உன்னிடமிருந்தே தோன்றின. நீயே பலவிதமான யஜ்ஞங்களும் ஆவாய். நீயே பரமபதமும் ஆவாய்.

18. அக்நி: தவாஸ்யம் வதநம் மஹேந்த்ரச்சந்த்ரச்ச ஸூர்யச்ச ததாக்ஷிணீ த்வே
ப்ராணச்ச பாயுச்சரணௌ தரித்ரீ நாபிச்ச கம் த்யௌ: சிரஸி ப்ரதிஷ்டா

பொருள் – உன்னுடைய திருமுகமே அக்னியாக உள்ளது. இந்த்ரன் உனது திருவாய் ஆவான். சந்த்ரனும் சூரியனும் உனது திருக்கண்கள் ஆவர். ப்ராணன் உனது வாயுவாகவும், பூமி உனது திருவடியாகவும், அந்தரிக்ஷம் உனது இடுப்பாகவும், ஸ்வர்க்கம் உனது தலையாகவும் உள்ளன (அதாவது அந்தந்த அவயவங்களில் இருந்து அவை அவை தோன்றின என்று கொள்க).

19. ச்ரோத்ரீ திசாஸ்தே வருணச்ச மேந்க்ரஹ்ரீ: ஸ்ரீச்ச பத்ந்யௌ ஹ்ருதயம் ச காம:
அஹச்ச ராத்ரிச்ச தவைவ பார்ச்வே அங்காநி வேதாஸ் ஸ்வயமந்தராத்மா

பொருள் – உனது செவிகளே திசைகள், வருணனே உனது மர்மக்குறி, ஹ்ரீ மற்றும் ஸ்ரீ ஆகிய இருவரும் உனது பத்னிகள், மன்மதன் உனது இதயம், பகல் மற்றும் இரவு ஆகிய இரண்டும் உனது இரண்டு பக்கங்கள், வேதமே உனது திருமேனி ஆகும். அந்தராத்மாவும் நீயே ஆவாய்.

20. வேதாம் ஸ்ததாங்காநி ச ஸாங்க்ய யோகௌ தர்மாணி சாஸ்த்ராணி ச பஞ்சராத்ரம்
ஆஜ்ஞா தவ ஏவ ஆகமஜாதமந்யோ வேதாந்தவேத்ய: புருஷஸ்த்வமேக:

பொருள் – அனைத்து வேதங்கள், அவற்றின் அங்கங்கள், ஸாங்க்யம், யோகம் போன்றவை, தர்மங்கள், சாஸ்த்ரங்கள், பாஞ்சராத்ரம் போன்ற ஆகமங்கள் முதலான

Email:sridharan_book@yahoo.co.in

அனைத்தும் உன்னுடைய ஆணைகளே ஆகும். அனைத்து வேதவேதாந்தங்களாலும் அறியப்படும் பரமபுருஷன் நீ மட்டுமே ஆவாய்.

21. தவ ப்ரஸாத: அஹம் மஹிந்த்ர தல்பக்ரோதச்ச ருத்ரஸ்தவ விச்வயோந
நாந்யத் த்வதஸ்தீஹ சராசராத்மந் நாராயண த்வம் ந பரம் த்வதஸ்தி

பொருள் – உன்னுடைய க்ருபை மூலம் மட்டுமே நான்முகனாகிய நான், மஹேந்த்ரன், ருத்ரன் போன்ற பலரும் இருக்கிறோம். அனைத்திற்கும் ஆத்மாவாக உள்ள நாராயணனா! ஸ்ரீரங்கநாதா! நீயே பரம்பொருள் ஆவாய். உன்னைக் காட்டிலும் உயர்ந்த வஸ்து வேறு ஏதும் இல்லை.

22. வாயுஸ்ஸூர்யச்சந்த்ரமா: பாவகச்ச பீதாஸ்த்வத்தோ யாந்தி நித்யம் ப்ரஜாஸி
ம்ருத்யுர் மர்த்யேஷ்வந்தகாலே ச விஷ்ணோ பூயிஷ்டந்தே நம உக்திம் விதேம

பொருள் – வாயு, சூரியன், சந்த்ரன் போன்றவர்கள் உன்னிடம் கொள்ளும் பயம் காரணமாகவே அன்றாடம் வெளிப்பட்டு, தங்களுடைய கடமைகளைச் செய்தபடி உள்ளனர். ம்ருத்யு என்னும் மரணம் என்பதும் விஷ்ணுவாகிய உன்னுடைய ஆணைக்கு உட்பட்டே இறுதிகாலத்தில் வருகிறான். இப்படிப்பட்ட உனக்கு எனது நமஸ்காரங்கள்.

23. உதாம்ருதத்வஸ்ய பரிஸ்த்வமேவ த்வமேவ ம்ருத்யுஸ் ஸதஸத்த்வமேவ
தவைவ லீலாவிதத: ப்ரபஞ்ச: ப்ரஸீத பூயோ பகவந் ப்ரஸீத

பொருள் – நீயே அனைத்து முக்தர்களின் எஜமானன் ஆவாய். நீயே ம்ருத்யு, ஸத் (இருப்பு), அஸத் (இல்லாமை), என்பதும் ஆவாய். இந்த ப்ரபஞ்சம் என்பது உன்னுடைய லீலையே ஆகும். பகவானே! ஸ்ரீரங்கநாதா! உனது க்ருபை வேண்டும்.

24. ப்ரணதோஸ்மி ஜகந்நாதம் அஜம் அக்ஷரம் அவ்யயம்
அவ்ருத்தம் அபரீணாஹம் அஸந்தம் ஸந்தம் அச்யுதம்

 Email:sridharan_book@yahoo.co.in

பொருள் – அடியார்களை நழுவவிடாத திருவரங்கனே! உலகின் நாதனே! பிறப்பற்றவனே! அழிவற்றவனே! மாற்றம் அற்றவனே! வளர்தலும் தேய்தலும் இல்லாதவனே! திருக்கல்யாண குணங்களில் எல்லையற்றவனே! அனைத்து செயல்பாடுகள், செயலற்ற தன்மை ஆகியவற்றுக்குக் காரணமாக உள்ளவனே! உன்னை நான் வணங்குகிறேன்.

25. சேதநாநாம் ச நித்யாநாம் பஹூநாம் கர்மவர்த்திநாம்
ஏகோ வசீ சேதநச்ச நித்யஸ்த்வம் ஸர்வகாமத:

பொருள் – அனைத்து சேதனர்களையும் எப்போதும் நியமித்தபடி உள்ளாய். பலவாக உள்ள சேதனர்களை எப்போதும் கர்மங்களில் ஈடுபடுத்தியபடி உள்ளாய். சேதனர்களில் உயர்ந்தவனும், நித்யமாக உள்ளவற்றில் நித்யமானவனும் நீயே ஆவாய். அனைவருக்கும் அவர்கள் விரும்பியதை அளிப்பவனும் நீயே ஆவாய்.

26. நம: ஸ்ரீரங்கநாதாய நம: ஸ்ரீரங்கசாயிநே
நம: ஸ்ரீரங்கதேவாய ஸ்ரீநிவாஸாய தே நம:

பொருள் – ஸ்ரீரங்கநாதனுக்கு எனது நமஸ்காரங்கள்! ஸ்ரீரங்கத்தில் சயனித்தபடி உள்ளவனுக்கு எனது நமஸ்காரங்கள்! ஸ்ரீரங்கத்தின் தேவனாக எப்போதும் உள்ளவனுக்கு எனது நமஸ்காரங்கள்! ஸ்ரீரங்கநாச்சியார் எப்போதும் வசிக்கும் திருமார்பைக் கொண்டவனுக்கு எனது நமஸ்காரங்கள்!

27. ஓம் நமோ பகவதே துப்யம் வாஸுதேவாய தே நம:
ஸங்கர்ஷணாய ப்ரத்யும்நாய அநிருத்தாய தே நம:

பொருள் – பகவானே! நீயே வாஸுதேவன் ஆவாய். உனக்கு எனது நமஸ்காரங்கள். நீயே ஸங்கர்ஷணன், ப்ரத்யும்னன், அநிருத்தன் ஆகியோரும் ஆவாய். உனக்கு நமஸ்காரங்கள்.

28. புருஷாய நமஸ்துப்யம் அச்யுதாய பராய ச
வாஸுதேவாய தாராய நம: ஸ்ரீரங்கசாயிநே

Email:sridharan_book@yahoo.co.in

பொருள் – பரமபுருஷனே! உனக்கு என் நமஸ்காரங்கள். அடியார்களை நழுவ விடாதவனும், உயர்ந்தவனும், வாஸுதேவனும், அனைத்தையும் தாங்குபவனும், ஸ்ரீரங்கத்தில் கண்வளர்பவனும் ஆகிய உனக்கு எனது நமஸ்காரங்கள்.

29. கேசவாய நமஸ்தேஸ்து நமோ நாராயணாய ச
மாதவாய நமஸ்துப்யம் கோவிந்தாய நமோ நம:

பொருள் – நீயே கேசவன், நீயே நாராயணன், நீயே மாதவன், நீயே கோவிந்தன். இப்படிப்பட்ட உனக்கு எனது நமஸ்காரங்கள்.

30. ஓம் நமோ விஷ்ணவே தேவ மதுஸூதந தே நம:
த்ரிவிக்ரம நமஸ்துப்யம் நமஸ்தே வாமநாய ச

பொருள் – விஷ்ணுவாகிய உனக்கு நமஸ்காரங்கள்! நீயே மதுஸூதனனும் ஆவாய். த்ரிவிக்ரமனாக உள்ளவனும், வாமனனாக நின்றவனும் ஆகிய உனக்கு என் நமஸ்காரங்கள்.

31. ஸ்ரீதராய நமோ நித்யம் ஹ்ருஷீகேச நமோஸ்து தே
நமஸ்தே பத்மநாபாய நமோ தாமோதராய ச

பொருள் – ஸ்ரீதரனாகிய உனக்கு எப்போதும் என் நமஸ்காரங்கள்! ஹ்ருஷீகேசனும், பத்மநாபனும், தாமோதரனும் ஆகிய உனக்கு என் நமஸ்காரங்கள்.

32. மத்ஸ்ய கூர்ம வராஹாய ஹம்ஸ அச்வசிரஸே நம:
நமோஸ்து ஜாமதக்நயாய தத்தாய கபிலாய ச

பொருள் – மத்ஸ்யம், கூர்மம், வராஹம், ஹம்ஸம், ஹயக்ரீவன் போன்ற அவதாரங்கள் எடுத்த உனக்கு என் நமஸ்காரங்கள். மேலும் ஜமதக்னி முனிவரின் புத்ரனாகிய பரசுராமன், தத்தர், கபிலர் போன்று வந்த உனக்கு என் நமஸ்காரங்கள்.

33. வேதவ்யாஸாய புத்தாய நாரஸிம்ஹாய தே நம:
ராம லக்ஷ்மண சத்ருக்ந பரதாத்மந் நமோஸ்து தே

பொருள் – வேதவ்யாஸரும், புத்தரும், நரஸிம்ஹனும் நீயே ஆவாய். உனக்கு என் நமஸ்காரங்கள். இராமன், லக்ஷ்மணன், பரதன் மற்றும் சத்ருக்நன் என்று வந்த அந்தராத்மாவான உனக்கு என் நமஸ்காரங்கள்.

34. க்ருஷ்ணாய பலபத்ராய நமஸ்ஸாம்பாய கல்கிநே
அனந்தாநந்த சயந புராண புருஷோத்தம
ரங்கநாத ஜகந்நாத நாத துப்யம் நமோ நம:

பொருள் – க்ருஷ்ணனும், பலராமனும், ஸாம்பனும், கல்கியும் ஆகிய உனக்கு என் நமஸ்காரங்கள். ஆதிசேஷனில் சயனித்துள்ள அனந்தனே! புருஷர்களில் உத்தமனே! ஸ்ரீரங்கநாதனே! ஜகந்நாதனே! உனக்கு என் நமஸ்காரங்கள்.

ஸ்ரீமஹேச்வர உவாச –

35. இதி ஸ்தோத்ர அவஸாநேந ப்ரஹ்மாணாம் ப்ரஹ்மணஸ்பதி:
ஆமந்த்ர்ய மேககம்பீரம் இதம் வசநம் அப்ரவீத்

பொருள் – மஹேச்வரன் நாரதரிடம், “இப்படியாக நான்முகன் தனது பதியாகிய நாராயணனைக் குறித்துத் துதித்து முடித்தான். இதனைக் கேட்டபடி இருந்த மேகம் போன்ற கம்பீரம் கொண்டவனாகிய ஸ்ரீரங்கநாதன் பின்வருமாறு உரைக்கத் தொடங்கினான்”, என்றான்.

ஸ்ரீபகவான் உவாச –

36. தபஸா துஷ்டோஸ்மி ஸ்தோத்ரேண ச விசேஷத:
ப்ரபஞ்ச ஸ்ருஷ்டி வைசித்த்யாத் ப்ரீதோஹம் பூர்வமேவதே

பொருள் – ஸ்ரீரங்கநாதன் நான்முகனிடம், "உன்னுடைய தவம் மற்றும் துதிகள் ஆகியவற்றைக் கண்டு நாம் மிகவும் மகிழ்ச்சி அடைந்தோம். இந்த உலகைப் படைத்தது போன்ற உன்னுடைய செயல்கள் குறித்து நாம் முன்பே உன்னிடம் மிகுந்த ப்ரீதி அடைந்தோம்", என்று கூறத் தொடங்கினான்.

37. யச்சகர்த்தாங்க மத் ஸ்தோத்ரம் மத் கதாப்யுதயாங்கிதம்
யத்வா தபஸி தே நிஷ்டா ஸ ஏவ மத் அநுக்ரஹ:

பொருள் – என்னுடைய சரிதங்கள் பலவற்றையும் உள்ளடக்கிய அருமையான என்னைப் பற்றிய ஸ்தோத்ரத்தை நீ உரைத்தாய். என்னை நினைவில் எப்போதும் நிலைநிறுத்தி, என்னைக் குறித்து மிகவும் கடுமையான தவம் இயற்றினாய். இதன் மூலம் என்னை நீ மகிழ்வித்தாய். இவை அனைத்தும் உனக்கு என்னுடைய அனுக்ரஹம் மூலம் கிட்டியதாகும்.

38. ஸ்தோத்ரேண த்வத் ப்ரணீதேந யோ மாம் ஸ்தௌதி தேந தேந
தஸ்யாஹம் ஸம்ப்ரஸீதாமி ஸர்வகாம பலப்ரத:

பொருள் – நான்முகனே! உன்னால் இதுவரை நான் துதிக்கப்பட்டேன். இந்தத் துதியை யார் ஒருவர் அன்றாடம் பாராயணம் செய்தபடி உள்ளாரோ, அவருக்கும் நான் என்னுடைய முழுமையான கடாக்ஷத்தை அளிப்பேன். அவன் விரும்பும் அனைத்தையும் அவனுக்கு அளிப்பேன்.

Email:sridharan_book@yahoo.co.in

39. தர்சிதம் மே பரம் ரூபம் தவாஸ்ய தபஸ: பலம்
கிம் அந்யத் இச்சஸி ப்ரஹ்மந் தத்ஸர்வம் ச்ருணு ஸாம்ப்ரதம்

பொருள் – உன்னுடைய கடுமையான தவத்தின் பலனாகவே ஸ்ரீரங்கநாதனாகிய நம்முடைய மிகவும் உயர்ந்த இந்த ரூபம் உனக்குக் காண்பிக்கப்பட்டது; நீயும் தரிசனம் செய்தாய். இதனைத் தவிர உனக்கு நம்மிடம் வேறு ஏதாவது கேட்பதற்கு விருப்பம் இருந்தால் கேட்பாயாக – என்று ஸ்ரீரங்கநாதன் நான்முகனிடம் கூறி முடித்தான்.

ஸ்ரீமத்ப்ரஹ்மாண்ட புராணத்தில் உள்ள ஸ்ரீரங்கமாஹாத்ம்யத்தின் நான்காம் அத்யாயம் ஸம்பூர்ணம்

அத்யாயம் – 5 – ஸ்ரீரங்கநாதனின் திருமேனி வைபவம்

ஸ்ரீப்ரஹ்ம உவாச –

1. அநேந விக்ரஹேண த்வாம் அர்ச்சயிஷ்யாமி அஹம் ப்ரபோ
தத்த்வத: த்வாம் ச வேத்ஸ்யாமி ப்ரஸாதம் குரு தத்ததா

பொருள் – நான்முகன் ஸ்ரீரங்கநாதனிடம், "ஸ்ரீரங்கநாதா! உன்னுடைய திருமேனியானது பலவாக உள்ளபோதிலும் இந்த விக்ரஹத்தை அர்ச்சிக்க நான் விரும்புகிறேன். ப்ரபோ! உன்னைப் பற்றி நான் அறிந்துகொள்ளவும் ஆசையாக உள்ளேன். உனது க்ருபையை எனக்கு அருளவேண்டும்", என்றான்.

ஸ்ரீபகவான் உவாச –

2. ஜ்ஞாத்வா தவ ஏவ அபிமதம் விமாநம் மே ஸ விக்ரஹம்
தர்சிதம் தவ தேவேச நித்யம் அத்ர ஸமர்சய

பொருள் – ஸ்ரீரங்கநாதன் நான்முகனிடம் கூறத் தொடங்கினான் – உன்னுடைய ஆர்வத்தை நான் முதலிலேயே புரிந்துகொண்டேன். அதனால்தான் நம்முடைய இந்த விக்ரஹத்துடன் கூடிய ஸ்ரீரங்கவிமானத்தை உனக்குக் காண்பித்தோம். நீ நம்முடைய இந்த விக்ரஹத்தையே அன்றாடம் ஆராதனை செய்து வருவாயாக.

3. யோ நித்யம் பாஞ்சகால்யேந பூஜயேந்மாம் சதம் ஸமா:
தஸ்மை முக்திம் ப்ரதாஸ்யாமி கிம்புநர் போகஸம்பத:

பொருள் – யார் ஒருவன் எனக்கு நூறு வருடங்கள், ஐந்து வேளைகள் பூஜை செய்து வருகிறானோ அவனுக்கு நான் மோக்ஷத்தைப் பலனாக அளிப்பேன். இதனைத் தவிர்த்து அவனுக்குத் தேவையான அனைத்தையும் அளிப்பேன் என்பதைத் தனியாக மீண்டும் கூறவேண்டுமோ?

4. அகண்டகோசாத்ஸாவரணாத் அமுஷ்மாத்பரத: ப்ரபோ
ஸ்திதோஹம் பரமே வ்யோமந் அப்ராக்ருத சரீரவாந்

பொருள் – நம்முடைய அப்ராக்ருதமான திருமேனியுடன் நாம் எங்கும் வ்யாபித்துள்ளோம். இப்படியாக நம்முடைய இருப்பு என்பது ப்ரம்மாண்டத்திற்கும் அப்பாலும் பரவி உள்ளது.

5. அர்ச்சாத்மந அவதீர்ணோஸ்மி பக்த அநுக்ரஹ காம்யயா
ஆத்யம் அர்ச்சாவதாரம் மே நித்யம் அர்ச்சயமுக்தயே

பொருள் – இப்படியாக எங்கும் வ்யாபித்துள்ள நான், என்னுடைய அடியார்களைக் கடாக்ஷிக்கும் ஆசை கொண்டவனாக, இந்த அர்ச்சா விக்ரஹமாக நிற்கிறேன். என்னுடைய இந்த அர்ச்சா விக்ரஹத்தை, முக்தி அடைவதற்காக அன்றாடம் ஆராதனை செய்தல்வேண்டும்.

6. உதாஸீந: அபி அஹம் ப்ரஹ்மம் லீலார்த்தம் ஸ்ருஜம் ஜகத்
அகிஞ்சித்கரம் அந்வீக்ஷ்ய ஜகத் ஏதத் அசேதநம்

Email:sridharan_book@yahoo.co.in

7. ஜீவேந அநுப்ரவிச்ய அஹம் ஆத்மந் அநேந பங்கஜ
ஸ்வகர்ம வச்ய: ஸகலம் சேஷ்டயாமி ப்ருதக் ப்ருதக்

பொருள் – ப்ரஹ்மமாகிய எனக்கு இந்த உலகத்தைப் படைப்பதால் எந்தவிதமான லாபநஷ்டமும் உண்டாவதில்லை. ஆக நான் இந்த விஷயத்தில் உதாஸீனமாகவே உள்ளேன். ஆனால் எனது லீலையின் காரணமாகவே எந்தவிதமான சிரமமும் இன்றி மிகவும் எளிதாக இந்த உலகைப் படைக்கிறேன். அசேதநமாக உள்ள உலகத்தால் எந்தவிதமான பயனும் இல்லை. ஆகவே நான் செய்வது என்னவென்றால் – தாமரையில் அமர்ந்துள்ள நான்முகனே! நான் ஒவ்வொரு ஜீவாத்மாவுக்குள்ளும் அந்தராத்மாவாக நுழைகிறேன். பலவாக உள்ள அந்த ஜீவாத்மாக்கள் அனைவரும், அவரவர்களின் கர்மத்திற்கு வசப்பட்டு உள்ளனர். அவரவர்களுக்கு உரிய புண்ணிய பாவச் செயல்களைச் செய்தபடி உள்ளனர்.

8. தேஷாம் ஏவ அநுகம்பார்த்தம் அஹம் அஜ்ஞாநஜம் தம:
நாசயாம் ஆத்மபாவஸ்தோ ஜ்ஞாநதீபேந பாஸ்வதா

பொருள் – அந்த ஜீவன்கள் மீது நான் மிகுந்த கருணை கொள்கிறேன். அவர்கள் தங்களுடைய அறியாமை என்னும் இருள் மூலம் ஆத்ம ஸ்வரூபத்தை அழித்துக் கொள்வதைக் காண்கிறேன். இதனால் ஞானம் என்னும் தீபத்தை ஏற்றி அவர்களுடைய அறியாமையைப் போக்குகிறேன்.

9. திலே தைலமிவ வ்யாப்தம் மாத்ருவத்திதகாரிணம்
ஸஹைவ ஸந்தம் மாம் தேவ ந விஜாநந்தி மோஹிதா:

பொருள் – எள்ளில் எண்ணெய் உள்ளது போன்று நான் அனைத்து ஜீவன்களுக்கும் உள்ளே இருக்கிறேன். அவர்களுக்குத் தாய் போன்று இருந்து அவர்களுடைய விருப்பங்களை நிறைவேற்றியபடி உள்ளேன். இப்படியாக நான் எனது அடியார்களிடம் உள்ளதை தேவர்கள் கூட அறிய இயலாதபடி அவர்களை மோகத்தில் ஆழ்த்துகிறேன்.

10. அநுக்ரஹாய லோகாநாம் ஆஸ்தித: அண்டமஹம் ப்ரபோ
க்ஷீரோத மண்டலம் பாநோரௌபேந்த்ரம் ச ததா திவி

பொருள் – நான் இந்த பிரம்மாண்டம் முழுவதும் எனது அனுக்ரஹத்தை அளிக்கும் பொருட்டு வ்யாபித்துள்ளேன். இது போன்று நான் திருப்பாற்கடலிலும் சூரிய மண்டலத்திலும் உள்ளேன். ஸ்வர்க்கத்திலும் நான் உபேந்த்ரன் என்னும் ரூபத்தில் வ்யாபித்துள்ளேன்.

11. த்ரீணி தாமாநி மே ஸந்தி த்ரிதாமாஹமத: ஸ்ம்ருத:
தத்ராபி துர்விபாவ்ய: அஹம் ராஜஸைரபி தாமஸை:

பொருள் – என்னுடைய இருப்பிடம் மூன்றாக உள்ளது. இவை ஸ்வேத த்வீபம், ஸ்ரீவைகுண்டம் போன்றவை ஆகும். இதனால்தான் நான் "த்ரிதாமன்" என்று வழங்கப்படுகிறேன். இந்த இடத்தில் வாசம் செய்யும் என்னை ராஜஸம் மற்றும் தாமஸம் சூழ்ந்த ஜீவன்களால் அறிய இயலாது.

12. அவதார ஸஹஸ்ராணி கல்பே கரோமி அஹம்
ஆவிர்ப்பவாமி குத்ராபி பக்த அநுக்ரஹ காம்யயா

பொருள் – ஒவ்வொரு கல்பத்திலும் நான் ஆயிரக்கணக்கான அவதாரங்கள் எடுக்கிறேன். என்னுடைய பக்தர்களுக்கு அனுக்ரஹம் செய்வதில் மிகுந்த விருப்பம் கொள்வதால் இவ்விதம் நான் பலவாக ஆவிர்பவிக்கிறேன்.

13. ஆவிசாமி க்வசித் ஜந்தூந் க்வசித் ச அவதாராம்யஹம்
பித்ரு புத்ர ஸுஹ்ருத் ஸ்நேஹாத் காமாத் க்ரோதாத் ச மத்ஸராத்
14. யதா ப்ரஜா பவிஷ்யந்தி இதி ஏவம் ஜந்ம பஜாம்யஹம்
குண கர்ம அபிவ்ருத்யர்த்தம் ஸதா கீர்த்தயதாம் ந்ருணாம்

பொருள் – ஒரு சில நேரங்களில் நான் ஜீவன்களுக்குள் ப்ரவேசம் செய்கிறேன். ஒரு சில நேரங்களில் நான் அவதாரங்கள் எடுக்கிறேன். தந்தை, புத்திரன், உறவினன், நண்பன் என்று பலவாக உள்ள ஜீவன்கள் ஒருவருக்கொருவர் நட்பு, க்ரோதம், அன்பு போன்ற

பலவிதமான நிலைகளில் உள்ளனர். நானும் அவதார காலங்களில் அது போன்றே உள்ளேன். இவை அனைத்தையும் நான் செய்வது ஏன் என்றால் – என்னைப் பற்றி மட்டுமே எண்ணியபடி, என்னைக் குறித்து பாடியபடி, எப்போதும் எனது மஹிமைகளைப் போற்றியபடி உள்ள ஜீவன்களைக் காப்பாற்றி அனுக்ரஹம் செய்யவே ஆகும்.

15. ஆவிஷ்ட இவ ராகாத்யைர் அநாவிஷ்ட: கரோமி ச
ப்ரஜாநாம் அநுகம்பார்த்தம் புந: அர்ச்சாத்மநா புவி

பொருள் – அவதாரங்களில் உள்ளபோது எனக்கு யாரிடமும் எந்தவிதமான வெறுப்போ, பிடிப்போ, வேறுபாடுகளோ கிடையாது. ஆனால் தீயவர்களை மயக்கும்விதமான, எனக்கு இது போன்ற வேறுபாடுகள் உள்ளதாகக் காண்பித்துக் கொள்கிறேன். எனது பிரஜைகளான ஜீவன்கள் மீது கொள்ளும் தயை காரணமாக நான் இந்த உலகில் அர்ச்சா விக்ரஹமாக பல இடங்களில் உள்ளேன்.

16. த்வீப வர்ஷ விபாகேஷு தீர்த்தேஷு ஆயதநேஷு ச
மாநுஷ அர்ச்சாத்மநா ச அஹம் க்ராமே க்ராமே க்ருஹே க்ருஹே

பொருள் – ஒவ்வொரு த்வீபங்களிலும், நாடுகளிலும், புண்ணிய தீர்த்தங்களிலும் நான் உள்ளேன். புண்ணிய க்ஷேத்ரங்களிலும், ஒவ்வொரு கிராமங்களிலும், ஒவ்வொரு வீடுகளிலும் உள்ள அர்ச்சா விக்ரஹங்களில் நான் உள்ளேன்.

17. பும்ஸி பும்ஸி பவிஷ்யாமி தாருலோஹ சிலாமய:
அஹம் பஞ்சோபநிஷத: பர வ்யூஹாதிஷு ஸ்தித:

பொருள் – மனிதர்களுக்கு உதவும்விதமாக மரம், இரும்பு, கல் போன்ற பலவிதமான அர்ச்சா விக்ரஹங்களில் நான் உள்ளேன். ஐந்து உபநிஷத்துக்களில் போற்றப்படும் தேவதை நானே ஆவேன். பரவாஸுதேவன், ஸங்கர்ஷணன் போன்ற வ்யூஹங்களிலும் நானே உள்ளேன்.

18. ஆவிர்ப்பாவேஷு திவ்யேஷு ஸ்வஸங்கல்ப சரீரவாந்
ஆவேசம்ச அவதாரேஷு பாஞ்சபௌதிக விக்ரஹ:

பொருள் – அந்தந்த நிலைகளில் எனது ஸங்கல்பத்திற்கு ஏற்ப, மிகவும் திவ்யமான சரீரங்களை நான் எடுத்துக் கொள்கிறேன். ஆவேச அவதாரங்களில் (பரசுராமன் போன்றவை), நான் பஞ்சபூதங்களால் ஆன சரீரத்தில் ப்ரவேசிக்கிறேன்.

19. தாருலோஹ சிலாம்ருத்ஸ்நா சரீர அர்ச்சாத்மக: ஸ்ம்ருத:
சேதந அசேதநை: தேஹை: பரமாத்மா பாவயாம்யஹம்

பொருள் – இது போன்று மரம், இரும்பு, கல், மண் போன்ற அர்ச்சாவதார சரீரங்களில் நான் உள்ளேன். இது போன்றே பரமாத்மாவாகிய நான் சேதந அசேதந சரீரங்களில் உள்ளேன்.

20. அர்ச்சாத்மந அவதீர்ணம் மாம் ந ஜாநந்தி விமோஹிதா:
க்ருத்வா தாருசிலா புத்திம் கச்சந்தி நரகாயுதம்

பொருள் – இப்படியாக உள்ள விக்ரஹங்களில் நான் அந்தராத்மாவாக உள்ளேன். ஆனால் ஒரு சிலர் தங்களுடைய மந்தபுத்தி காரணமாக நான் மரம், இரும்பு போன்றவற்றால் ஆனவன் என்று எண்ணக்கூடும். இந்தப் பாவம் காரணமாக அவர்கள் நரகத்திற்குச் செல்வர் (அதாவது அர்ச்சாவதாரத்தில் ஸர்வேச்வரன் உள்ளதாக எண்ணவேண்டும். அதனை வெறும் விக்ரஹம் என்றோ, அந்த விக்ரஹம் மட்டுமே ஸர்வேச்வரன் என்றோ எண்ணுதல் கூடாது).

21. அர்ச்சயந்த: ஸ்துவந்தச்ச கீர்த்தயந்த: பரஸ்பரம்
நமஸ்யந்தச்ச மாம் பக்த்யா கச்சந்தி பரமம் பதம்

பொருள் – என்னுடைய பக்தர்கள் அர்ச்சாவதார திருமேனியைக் கொண்டாடியபடி, அதில் உள்ள என்னை ஆராதனை செய்து, அதில் உள்ள என்னைக் குறித்து சங்கீர்த்தனம் செய்து, நமஸ்காரம் செய்து வருகின்றனர். இதனால் இறுதியில் அவர்கள் உயர்ந்த பரமபதத்தை அடைகின்றனர்.

22. அர்ச்சா சதுர்விதா ப்ரஹ்மந் ஆகமேஷு மமேரிதா:
விமாநாநி ச தாவந்தி ப்ரதிமாஸத்ருசாநி ச

பொருள் – நான்முக ப்ரம்மனே! என்னுடைய அர்ச்சை என்பது நான்குவிதமாக உள்ளதாகவும், விமானம் நான்குவிதமாக உள்ளதாகவும் ஆகமங்களில் நான்குவிதமாக உரைக்கப்பட்டுள்ளது.

23. திவ்யம் ஸைத்தம் வ்யக்தம் மாநுஷம் சோதி பித்யதே
க்ருத்ரிமம் த்ரிதயம் தத்ர ஸ்வயம் வ்யக்தம் அக்ருத்ரிதமம்

பொருள் – நான் எழுந்தருளியுள்ள விமானங்கள் திவ்யம் (தேவர்களால் ஸ்தாபிக்கப்பட்டவை), ஸைத்தம் (ஸித்தர்களுடன் தொடர்பு கொண்டவை), ஸ்வயம் வ்யக்தம் (தானாகவே வெளிப்பட்டவை) மற்றும் மாநுஷம் (மனிதர்களால் உருவாக்கப்பட்டவை) என்று நான்கு வகைப்படும். இது போன்றே அர்ச்சையும் நான்காகும். இவற்றில் ஸ்வயம் வ்யக்தம் என்பது யாராலும் செய்யப்படாதது, மற்ற மூன்றும் பிறரால் உருவாக்கப்படுவது ஆகும்.

24. மூர்த்தயோபி த்விதா பிந்நாஸ் த்ரைவஸ்துகீ ஏகவஸ்துகீ
ஏகவஸ்து த்விதா ப்ரோக்தமசலம் சலமேவ ச

பொருள் – அர்ச்சா மூர்த்திகள் இரண்டு வகைப்படும். அவையாவன த்ரைவஸ்துகீ மற்றும் ஏகவஸ்துகீ என்பதாகும். இவற்றில் ஏகவஸ்துகீ மூர்த்தி என்பது சலம் மற்றும் அசலம் என்று இருவகைப்படும்.

25. வ்யூஹ வ்யூஹாந்தர ஆதிநாம் பரஸ்ய விபவஸ்ய ச
ஆவேசம் ச அவதாரணாம் ஆவிர்பாவஸ்ய சாக்ருதி:

பொருள் – என்னுடைய ஆதி சரீரம், வாஸுதேவன் போன்ற வ்யூஹ சரீரங்கள், விபவ அவதாரங்கள், ஆவேச மற்றும் அம்ச சரீரங்கள் போன்றவை சல மூர்த்திகள் ஆகும்.

26. ஸுரூபா ப்ரதிமா சோபநா த்ருஷ்டிஹாரிணீ
மநோஹரா ப்ரஸந்நா ச மாமிகா சில்பி சோதிதா

பொருள் – என்னுடைய அர்ச்சா ப்ரதிமங்கள் சிற்பசாஸ்த்ர முறைப்படி அமைந்திருக்க வேண்டும். அவை அழகாகவும், வசீகரிக்கும்படியாகவும், அழகான கண்கள் கொண்டதாகவும், மனதைக் கவரக்கூடியதாகவும், புன்னகை வீசுவதாகவும் இருத்தல் வேண்டும்.

27. ஊர்த்வ த்ருஷ்டிமதோ த்ருஷ்டிம் திர்யக்த்ருஷ்டிம் ச வர்ஜயேத்
அந்யூநாநதிரிக்தாங்கீ மச்சித்ராம் சாபி கல்பயேத்

பொருள் – மேற்புறமாக நோக்கியபடியும், கீழ்ப்புறமாக (அல்லது பக்கவாட்டில்) நோக்கியபடியும், சரியான பார்வை இல்லாதபடியும் உள்ள அர்ச்சைகளை வணங்கக்கூடாது. அர்ச்சைகளில் எந்த ஒரு அவயவமும் இல்லாமல் இருத்தல் கூடாது. அங்கங்களில் குறைபாடோ அல்லது பின்னங்களோ (உடைதல்) இருத்தல் கூடாது. அது போன்ற விக்ரஹங்களை ஆராதிப்பது கூடாது.

28. ஆத்யம் ஸ்வயம்வ்யக்தம் இதம் விமாநம் ரங்கஸஜ்ஞகம்
ஸ்ரீமுஷ்ணம் வேங்கடாத்ரிச்ச சாளக்ராமம் ச நைமிஷம்

பொருள் – முதன்முதலில் வெளிப்பட்ட, தானாகவே ஏற்பட்ட விமானம் இந்த ஸ்ரீரங்கவிமானமே ஆகும். இது போன்று ஸ்ரீமுஷ்ணம், திருவேங்கடம், சாளக்ராமம் மற்றும் நைமிசாரண்யம் ஆகியவையும் தானாகவே வெளிப்பட்டவை ஆகும்.

29. தோதாத்ரி: புஷ்கரம் சைவ நாராயணாச்ரம:
அஷ்டௌ மே மூர்த்தயஸ்ஸாந்தி ஸ்வயம்வ்யக்தா மஹீதலே

பொருள் – தோதாத்ரி, புஷ்கரம், பத்ரிகாச்ரமம் போன்றதான அனைத்தும் தானாகவே வெளிப்பட்ட மூர்த்தங்கள் உள்ள க்ஷேத்ரங்கள் ஆகும்.

30. யஜமாநஸ்ய தே ப்ரஹ்மந் நத்வராக்நௌ து ஸஞ்சிதே
அஹம் ஆவிர்ப்பவிஷ்யாமி வரதஸ் ஸர்வதேஹிநாம்

பொருள் – நான்முகனே! நீ யஜமானனாக நின்று வளர்க்கின்ற யாக அக்னியில் நான் நின்றபடி அனைத்து ஜீவன்களுக்கு தேவையான வரங்களை அளிப்பேன். இப்படியாக அந்த யாகங்களில் நான் ஆவிர்ப்பவிக்கிறேன்.

31. ததாவிதாம் மத்ப்ரதிமாம் தத்ர த்வம் ஸ்தாபயிஷ்யஸி
ததாப்ரப்ருதி தத்ரூபம் ஸ்தாபயிஷ்யந்தி மாமிஹ

பொருள் – அந்த நேரத்தில் நீ என்னுடைய அர்ச்சா விக்ரஹத்தை ப்ரதிஷ்டை செய்வாய். அது தொடங்கி எனது பலவிதமான அர்ச்சா திருமேனிகளைப் பலரும் பல்வேறு இடங்களில் ப்ரதிஷ்டை செய்வர்.

32. ஸமுத்ரே தக்ஷிணே அநந்த: ஸ்ரீகண்ட: கண்டிகாபுரே
விச்வர்கர்மா ச நந்தயாம் தர்மோ வ்ருஷப பர்வதே
33. த்வாரவத்யாம் ஜாதவேதா: ஸ்ரீநிவாஸே ஸமீரண:
விஷ்ணிதீர்த்தே வியத்தத்வம் கும்பகோணே ஸுராஸுரா:
34. ஸாரக்ஷேத்ரே து காவேரீ தீர்த்தேநாக்யே அந்நதேவதா:
ஸ்வர்க்கத்வாரே தேவ்யதிதீ ருத்ராச்ச குசலாசலே
35. அச்விநாவச்வதீர்த்தே மாம் சக்ரதீர்த்தே சதக்ரது:
உத்பலா வர்த்தகே பூமிர்வர்ணே: க்ருஷ்ணமங்களே
36. நாராயணபுரே தேவீ இந்த்ராக்நீ வருணாசலே
ஏவமாதிஷு தேசேஷு ஸ்தாபயிஷ்யந்தி தேவதா:

பொருள் – என்னுடைய அர்ச்சா விக்ரஹங்களை பின்வருமாறு பலரும் ப்ரதிஷ்டை செய்வார்கள். தெற்கில் உள்ள ஸமுத்திரத்தில் ஆதிசேஷன், கண்டிகாபுரத்தில் சிவன், நந்தக்ஷேத்ரத்தில் விச்வகர்மன், வ்ருஷப மலையில் யமன், துவாரகையில் அக்னி, ஸ்ரீநிவாஸ க்ஷேத்ரத்தில் வாயு (இது திருமலை அல்லது குருவாயூரைக் குறிப்பதாகக் கொள்ளலாம். குருவாயூரப்பனை வாயு ப்ரதிஷ்டை செய்ததாகவே கருத்து),

Email:sridharan_book@yahoo.co.in

விஷ்ணுதீர்த்தத்தில் விநாயகன், கும்பகோணத்தில் தேவர்களும் அசுரர்களும், ஸார க்ஷேத்ரத்தில் காவேரி (இது திருச்சேறை ஆகும்), தீர்த்தநத்தில் அன்னதேவதை, ஸ்வர்க்கத்தில் அதிதிதேவி, குசலாசலத்தில் ருத்ரர்கள், அச்வதீர்த்தத்தில் அச்வினி தேவர்கள், சக்ரதீர்த்தத்தில் தேவேந்த்ரன், உத்பலாவர்த்தகத்தில் பூமாதேவி, க்ருஷ்ண மங்களத்தில் வருணன், நாராயணபுரத்தில் மஹாலக்ஷ்மி, வருணாசலத்தில் இந்த்ரன் மற்றும் அக்னி, மேலும் பல இடங்களில் பல தேவர்கள் என்னுடைய அர்ச்சா திருமேனியை ப்ரதிஷ்டை செய்வார்கள்.

37. திவ்யாஸ்தா மூர்த்தயோ ப்ரஹ்மந் விமாநாநி ச தாநி வை
மார்க்கண்டேயோ ப்ருகுச்சைவ ப்ருகுதீர்த்தே அர்ச்சயிஷ்யத:

பொருள் – நான்முகனே! இதுவரை நான் உனக்கு திவ்யமங்கள விக்ரஹங்களைக் குறித்து உரைத்தேன். அவைகள் அனைத்தும் அவற்றுடன் கூடிய விமானங்களுடன் திவ்யமாக உள்ளன. மார்க்கண்டேயர் மற்றும் ப்ருகு முனிவர் ஆகிய இருவரும் எனது விக்ரஹத்தை ப்ருகு தீர்த்தத்தில் நிறுவி அர்ச்சித்தபடி இருப்பர்.

38. மரீசிர் மந்த்ரக்ஷேத்ரே சித்ரகூடே பதஞ்ஜலி:
தாம்ரபர்ணீ நதிதீரே ஸ்தாபயிஷ்யதி கும்பஜ:

பொருள் – மந்த்ரக்ஷேத்ரத்தில் மரீசி, சித்ரகூடத்தில் பதஞ்ஜலி முனிவர், தாமிரபரணி நதியின் கரையில் அகஸ்தியர் ஆகியோர் என்னுடைய அர்ச்சையை ப்ரதிஷ்டை செய்வார்கள்.

39. இந்த்ரத்யும்நோ மஹாதேஜா: பர்வதே ஸத்யஸஞ்ஜிதே
கோகர்ணே பாண்டுசிகரே குபேர: ஸ்தாபயிஷ்யதி

பொருள் – மிகுந்த ஒளியுடன் கூடியவனாகிய இந்த்ரத்யும்நன் இந்த்ரத்யும்ந பர்வதத்திலும், பாண்டுக்ஷேத்ரத்தில் கோகர்ணரும், குபேரனும் எனது விக்ரஹத்தை அர்ச்சையை ப்ரதிஷ்டை செய்வார்கள்.

40. சிபிர்நந்தபுரே ராஜா கும்பத்வாரே மஹோதய:
க்ருஷ்ணத்வைபாயநோ வ்யாஸோ வ்யாஸதீர்த்தே அர்ச்சயிஷ்யதி

பொருள் – நந்தபுரத்தில் சிபிமஹாராஜா, கும்பத்வாரத்தில் மஹோதயர், வ்யாஸ தீர்த்தத்தில் க்ருஷ்ணத்வைபாயன வ்யாஸர் ஆகியோர் எனக்கு அர்ச்சனை செய்தபடி இருப்பர்.

41. மைத்ரேயோ தேவிகாதீரே சௌநக: சௌநகாச்ரமே
ஏவமாதிஷு தேசேஷு தத்ர ஸித்தா மஹர்ஷய:

பொருள் – தேவிகாதீரத்தில் மத்ரேயர், சௌநகாச்ரமத்தில் சௌநகரிஷி என்று இது போன்ற பல தேசங்களில் ஆங்காங்கு உள்ள சித்தர்களாலும் மஹரிஷிகளாலும் எனது அர்ச்சா விக்ரஹங்கள் ப்ரதிஷ்டை செய்யப்படும்.

42. மாநுஷை: ஸ்தாப்யதே யத்ர ச்ரத்தா பக்தி புரஸ்ஸரம்
ததிதம் மாநுஷம் ப்ரோக்தம் ஸர்வகாம பலப்ரதம்

பொருள் – எந்த இடத்தில் என்னை மனிதர்கள் மிகவும் பக்தியுடனும் ச்ரத்தையுடனும் ப்ரதிஷ்டை செய்கிறார்களோ, அங்கு அவர்களுக்கு அனைத்துவிதமான விருப்பங்களும் பலனாக அளிக்கப்படும்.

43. ஸ்தாபகஸ்ய தபோயோகாத் பூஜாயாத் அதிசாயநாத்
ஆபிரூப்யா பிம்பஸ்ய ஸதா ஸந்நிஹித: அஸ்மி அஹம்

பொருள் – தவங்களின் வலிமை காரணமாகவும், பூஜைகளின் வலிமை காரணமாகவும், சரியான முறைகளில் அமைந்துள்ள பிம்ப ரூபம் காரணமாகவும் நான் அந்த விக்ரஹங்களில் பரிபூர்ணமாக இருப்பேன்.

44. ஸ்வயம் வ்யக்த விமாநாநாம் அபிதோ யோஜந த்வயம்
க்ஷேத்ரம் பாபஹரம் ப்ராஹுர்ம்ருதாநாம் அபவர்க்கதம்

பொருள் – தானாகவே வெளிப்பட்ட விமானத்துடன் கூடிய க்ஷேத்ரங்களின் இரண்டு யோஜனை தூர சுற்றளவில் வசிப்பவர்களின் பாவங்கள் அகன்றுவிடும். யார் ஒருவர் இப்படிப்பட்ட சுற்றளவில் இறக்கிறார்களோ அவர்கள் நிச்சயமாக மோக்ஷம் அடைவார்கள்.

45. யோஜநம் திவ்யதேசாநாம் ஸைத்தாநாம் அதர்மேவ ச
மாநுஷாணாம் விமாநாநாம் அபித: க்ரோசமுத்தமம்

பொருள் – இது போன்று யார் ஒருவர் இப்படிப்பட்ட திவ்யதேசங்களின் ஒரு யோஜனை சுற்றளவில் வசிக்கிறார்களோ அவர்கள் தூய்மை அடைகிறார்கள். ஸைத்ய ப்ரதிமைகளுக்கு இது அரை யோஜனை தூரமும், மற்ற ப்ரதிமைகளுக்கு இது கால் யோஜனை தூரமும் ஆகும்.

46. க்ருஹமாத்ரம் ப்ரசஸ்தம் தத்க்ரஹார்ச்சா யத்ர வித்யதே
சாளக்ராமசிலா யத்ர தத் ஸ்வயம்வ்யக்த ஸம்மிதம்

பொருள் – எந்த ஒரு இல்லத்தில் எனது அர்ச்சா விக்ரஹம் வழிபடப்படுகிறதோ, அந்த இல்லம் மிகவும் தூய்மையானதும், அனைவராலும் அண்டப்பட வேண்டியதும் ஆகும். எங்கு சாளக்ராமம் ஆராதிக்கப்படுகிறதோ, அந்த இல்லம் தானாகவே வெளிப்பட்ட க்ஷேத்ரத்திற்கு சமம் ஆகும்.

47. யஸ்மிந் தேசே சதுர்ஷ்வேகம் ந அர்ச்சயதே தாம மாமகம்
சண்டாள வாஸ ஸத்ருச: ஸ வர்ஜ்ஜயோ ப்ரஹ்மவாதிபி:

பொருள் – எங்கு எனது நான்குவிதமான விக்ரஹங்களும் வழிபடப்படாமல் உள்ளனவோ அந்த இடம் சண்டாளர்கள் மட்டுமே வசிப்பதற்கான இடமாகும். அப்படிப்பட்ட இடத்தை ப்ரஹ்மமாகிய என்னை வரிப்பவர்கள் கைவிடவேண்டும் (நான்கு அர்ச்சைகள் = தானாகவே வெளிப்பட்ட க்ஷேத்ரம், தேவர்கள் ப்ரதிஷ்டை செய்தவை, சித்தர்களும் மஹரிஷிகளும் ப்ரதிஷ்டை செய்தவை, மனிதர்களால் ப்ரதிஷ்டை செய்தவை).

48. யத்ர த்வாதச வை ஸந்தி விமாநாநி முரத்விஷ:
க்ராமே வா நகரே வாபி தத் ஸ்வயம்வ்யக்தம் உச்யதே

பொருள் – எங்கு என்னுடைய பன்னிரண்டு விமானங்கள் காணப்பட்டாலும், அந்த இடமானது தானாகவே ஸ்வயம்வ்யக்த க்ஷேத்ரம் என்றாகிறது.

49. ஸ்வயம்வ்யக்தேஷு ஸர்வேஷு ஸ்ரீரங்கம் ஸம்ப்ரசஸ்யதே
அபவர்க்க: அத்ர நியத: பரிதோ யோஜந த்வயே

பொருள் – அனைத்து ஸ்வயம்வ்யக்த க்ஷேத்ரங்களிலும் ஸ்ரீரங்கமே மிகவும் உயர்ந்ததாகும். யார் ஒருவர் ஸ்ரீரங்கத்திலோ அல்லது ஸ்ரீரங்கத்தின் இரண்டு யோஜனை சுற்றளவுக்கு உட்பட்டோ வாழ்கிறார்களோ, அவர்களுக்கு மோக்ஷம் நிச்சயம் கிட்டும்.

50. திர்யங்கோபி விமுச்யந்தே க்ஷேத்ரே அஸ்மிந் நிவாஸந்தி யே
பாஷாண்டிநோ விகர்மஸ்தா: கிமுத ப்ரஹ்மவாதிந:

பொருள் – ஸ்ரீரங்கக்ஷேத்ரத்தில் உள்ள விலங்குகள், கபட வேஷதாரிகள், பாவிகள் போன்ற அனைவரும் பாவங்களில் இருந்து விடுதலை அடைகிறார்கள். ஸ்ரீரங்கநாதனாகிய நான் வாசம் செய்யும் இடத்தில் இப்படிப்பட்டவர்களின் நிலையே இப்படியென்றால், ப்ரஹ்மமாகிய என்னை முற்றிலுமாக அறிந்தவர்களின் நிலை குறித்து கூறவும் வேண்டுமோ?

51. பஞ்சகால வித்யாநேந பஞ்சராத்ர உக்தவர்த்தமநா
ஆராதநம் ஸமீஹஸ்வ த்ரிகாலம் மே சதுர்முகே

பொருள் – நான்முகனே! பாஞ்சராத்ர ஆகமத்தில் கூறப்பட்ட முறைகளின்படி, ஸ்ரீரங்கத்தில் உள்ள என்னை ஒருநாளைக்கு ஐந்து முறை அல்லது குறைந்தபட்சம் மூன்று முறையாவது ஆராதிப்பாயாக.

52. அபிகமநம் உபாதாநம் இஜ்யாம் ஸ்வாத்யாயம் அந்வஹம் யோகம்
அநுஸந்த ததச்சித்ரம் பகவத் பக்த: பரமம் பதம்

பொருள் – அபிகமநம், உபாதாநம், இஜ்யாம், ஸ்வாத்யாயம் மற்றும் யோகம் ஆகிய ஐந்துவிதமான கைங்கர்யங்களை அன்றாடம் செய்துவரும் எனது பக்தன் ஒருவன் பரமபதம் செல்வது உறுதியே ஆகும்.

குறிப்பு – ஐந்து காலங்களில் செய்யப்படும் ஐந்துவிதமான கைங்கர்யங்கள் பின்வருமாறு:

- அபிகமநம் – அன்று நடக்கவேண்டிய கைங்கர்யம் முழுவதும் தடையில்லாமல் நடக்கவேண்டும் என்று ஸர்வேச்வரனிடம் ப்ரார்த்தனை செய்தல்
- உபாதாநம் – பகவத் ஆராதனைக்கு வேண்டிய துளசி, மலர்கள் போன்றவற்றைச் சேகரித்தல்
- இஜ்யை – ஆகமங்களில் கூறப்பட்ட முறைப்படி ஆராதனம் செய்தல்
- ஸ்வாத்யாயம் – வேதாந்த பாகங்களை நன்றாக அறிதல்
- யோகம் – பகவானுடைய திருவடிகளை த்யானம் செய்தல்

ஸ்ரீமத்ப்ரஹ்மாண்ட புராணத்தில் உள்ள ஸ்ரீரங்கமாஹாத்ம்யத்தின் ஐந்தாம் அத்யாயம் ஸம்பூர்ணம்

Email:sridharan_book@yahoo.co.in

அத்யாயம் – 6 – த்வாதச மந்த்ர மஹிமை

1. கோ மந்த்ர: கச்ச தே கல்ப: பூஜநே புருஷோத்தம
   கிம் ச பூஜயதாம் பும்ஸாம் பலம் தத்ப்ருஹி மே அச்யுத

பொருள் – நான்முகன் ஸ்ரீரங்கநாதனிடம், “புருஷோத்தமா! எந்த கல்பத்தில் உன்னை எந்த மந்திரம் கொண்டு பூஜிக்கவேண்டும்? உனக்குப் பூஜை செய்பவர்கள் அடையும் பலன் என்ன? அடியார்களை நழுவவிடாத அரங்கனே! இவற்றை நீ உரைப்பாயாக”, என்றான்.

ஸ்ரீபகவான் உவாச –

2. ஸாத்வதம் பௌஷ்கரம் சோதி தந்த்ரே த்வே பாஞ்சராத்ரிகே
   ததுக்நேந க்ரமேணைவ த்வாதச அக்ஷர வித்யயா
3. தீக்ஷிதோ தீக்ஷிதைஸ்ஸார்த்தம் ஸாத்வதை: பஞ்சபி: ஸ்வகை:
   அஷ்டாங்கேந விதாநேந நித்யம் அர்ச்சய பங்கஜ

பொருள் – ஸ்ரீரங்கநாதன் நான்முகனிடம் கூறத் தொடங்கினான். பாஞ்சராத்ர ஆகமத்தில் ஸாத்வதம் மற்றும் பௌஷ்கரம் என்னும் இரண்டு தந்த்ரங்கள் உள்ளன (மேலும் பல தந்த்ரங்களும் அதில் உள்ளன). அவற்றில் கூறப்பட்ட முறைப்படி, த்வாதச அக்ஷர வித்யையின்படி தீக்ஷை அளிக்கப்படவேண்டும். ஐந்து ஸாத்வதையுடன் கூடிய அஷ்டாங்க விதானத்தின்படி அர்ச்சனை செய்யவேண்டும்.

4. அர்ச்சயந் ரங்கதாமாநம் சிந்தயேத் த்வாதசாக்ஷரம்
   ஸங்கப்ரயச்சந்தச்ச காமிப்ய: ஸித்திமேதி ந ஸம்சய:

பொருள் – ஸ்ரீரங்கவிமானம் பூஜிக்கப்படவேண்டும். பன்னிரண்டு அக்ஷரங்கள் கொண்டதான “ஓம் நமோ பகவதே வாஸுதேவாய” என்பது ஜபிக்கப்படவேண்டும்.

Email:sridharan_book@yahoo.co.in

இதனால் மகிழும் ஸ்ரீரங்கநாதனாகிய நான், பக்தர்களுக்கு வேண்டியவற்றை அளிக்கிறேன். இதில் எந்தவிதமான ஐயமும் வேண்டாம்.

5. ப்ரஹ்மணோ மநவச்சைவ சக்ராச்சித்ர சிகண்டிந:
ப்ராக்தநை: கர்மபி: ப்ராப்தா ஆதிபத்யம் யதாவிதி

பொருள் – முன்பிருந்த நான்முகன்கள், மநுக்கள், இந்த்ரர்கள், சித்ரசிகண்டிகள் போன்றோர் தங்களுடைய பூர்வகர்மங்கள் காரணமாகவே தங்களது உயர்ந்த பதவியை அடைந்தனர்.

6. புக்த்வா விக்நஸஹஸ்ரேண கர்மசேஷம் வ்ரஜந்தி தே
தத்தத் கர்மாநுஸாரணே ஸம்ப்ரார்த்தயா ப்ராப்ய தாநி ச
7. புக்த்வா ச விவிதாந் போகாந் ஜாயந்தே ஸ்வஸ்வ கர்மபி:

பொருள் – அவர்கள் பலவிதமான இடையூறுகளின் நடுவிலே தங்களுடைய பதவிகளை அனுபவிக்கிறார்கள். அப்படியே இருந்துவிட்டு, பதவிகளிலிருந்து அகன்றுவிடுகிறார்கள். தங்களது பூர்வகர்மங்களின் மீதம் காரணமாக அவர்கள் பலவற்றை விரும்புபவர்களாக இருந்து, அவற்றைப் பெறவும் செய்கிறார்கள். அவர்கள் பலவிதமான இன்பங்களை அனுபவிக்கிறார்கள். பின்னர் அவரவர் கர்மங்களுக்கு ஏற்ப மீண்டும் பிறக்கிறார்கள்.

8. யஸ்து மத்பரமோ நித்யம் மநுஷ்யோ தேவ ஏவ வா
புக்த்வாதிகாரம் நிர்விக்நம் கச்சேத் வைகுண்ட ஸம்பதம்

பொருள் – ஆனால் மனிதனோ தேவனோ என்று யாராக இருந்தாலும், பரமாத்மாவாகிய எனது பக்தனாக ஒருவன் இருந்தால், அவன் தன்னுடைய அனைத்து தடைகளும் நீங்கப் பெறுகிறான். அந்தப் பதவிகளை அனுபவித்து இறுதியாக ஸ்ரீவைகுண்டம் அடைகிறான்.

9. தஸ்மாத் த்வமபி நிர்விக்நம் ப்ரஜா: ஸ்ருஷ்ட்வா ப்ரஜாபதே
த்விபரார்த்த அவஸாநே மாம் ப்ராப்தஸ்யாப்ய விபச்சிதம்

பொருள் – ப்ரஜாபதியான நான்முகனே! நீ எந்தவிதமான இடையூறுகளும் இன்றி அனைத்தையும் படைப்பாயாக. த்விபரார்த்த கல்பத்தின் முடிவில் நீ என்னை வந்து அடைவாயாக.

10. ப்ரஜாபதிசதை: பூர்வம் பூஜிதம் தாம மாமகம்
 த்வாதச அக்ஷர நிஷ்ணாதோ நித்யமேவ ஸமர்ச்சய

பொருள் – இந்த ஸ்ரீரங்கவிமானம் இதற்கு முன்பு பல நூறு நான்முகன்களால் ஆராதிக்கப்பட்டு வந்ததாகும். நீ இந்த விமானத்தை "ஓம் நமோ பகவதே வாஸுதேவாய" என்னும் த்வாதசாக்ஷரம் கொண்டு அன்றாடம் ஜபித்தபடி இருப்பாயாக.

11. மந்த்ராந்தரேஷு நிஷ்ணாத: ஸப்த ஜந்மநி மாநவ:
12. ஸவித்ரீமாத்ரஸாரோ யத் ஸப்த ஜந்மநி மாநவ:
 அநுசாந: ச்ரோத்ரியோ வா க்ரதுஷ்வதிக்ருதோ பவேத்

பொருள் – எந்த ஒரு மனிதன் மேலே கூறப்பட்ட மந்திரத்தைத் தவிர்த்து வேறு ஏதேனும் ஒரு மந்திரத்தை ஏழு பிறவிகளிலும், எந்த ஒரு மனிதன் அடுத்த ஏழு பிறவிகளில் காயத்ரி மந்திரத்தையும் ஜபித்தபடி உள்ளானோ அவன் அதற்கான பலனை அடைகிறான். அவன் பல யாகங்களை நடத்தும் அதிகாரத்தையும் அடைகிறான்.

13. அதீதவேதோ யஜ்வா ச வர்ணாச்ரமபராயண:
 மத்பக்தோ ஜாயதே விப்ரோ மம மந்த்ரபராயண:

பொருள் – அதன் பின்னர் அந்த மனிதன் அந்தணனாகப் பிறந்து என்னுடைய பக்தனாக இருப்பான். அவன் வேத அத்யயனம் போன்ற தனது வர்ணாச்ரம தர்மங்களில் நிலைப்பான். என்னைக் குறித்த மந்திரமான "ஓம் நமோ பகவதே வாஸுதேவாய" என்பதில் விருப்பத்துடன் இருப்பான்.

14. அநந்ய மந்த்ரநிரதோ மத்பக்தோ மத் ஜநபிரிய:
 த்வாதச அக்ஷர நிஷ்ணாத: க்ரமேண ஸ பவிஷ்யதி

பொருள் – அதன் பின்னர் அவன் என்னைக் குறித்த பன்னிரண்டு அக்ஷரங்களுடன் கூடியதான மந்திரத்தில் மட்டுமே ஈடுபட்டவனாக, மற்ற மந்திரங்களில் ஈடுபாடு அற்றவனாக இருப்பான். இதனைத் தொடர்ந்து அவன் என்னுடைய ஆழ்ந்த பக்தனாகி, எனது பக்தர்களால் பெரிதும் நேசிக்கப்படுப்படியாக ஆவான்.

15. த்வாதச அக்ஷரநிஷ்டாநாம் மாம் ஆகாநாம் மஹாத்மநாம்
அஹமேவ கதி: தேஷாம் நாந்யம் தேவம் பஜந்தி தே

பொருள் – யார் ஒருவர் “ஓம் நமோ பகவதே வாஸுதேவாய” என்னும் மந்திரத்தை உச்சரித்தபடி உள்ளாரோ, அவருக்கு நான் மட்டுமே இலக்காவேன். அப்படிப்பட்டவர்கள், தங்களது ஒரே கதியாக என்னை மட்டுமே கைக்கொண்டு, வேறு எந்த தெய்வதையும் நாடாமலும் வணங்காமலும் இருப்பார்கள்.

16. அதிபாப ப்ரஸக்த: அபி நாதோ கச்சதி மத்பர:
ந சாபி ஜாயதே தஸ்ய மந: பாபேஷு கர்ஹிசித்

பொருள் – என்னுடைய தரிசனம் யார் ஒருவர்க்குக் கிட்டியதோ அவர்கள் எந்தப் பாவம் செய்தபோதிலும் நரகம் மற்றும் தாழ்ந்த உலகங்களுக்குச் செல்லமாட்டனர். எனது பக்தர்கள் எப்போதும் பாவங்கள் நிறைந்த செயல்களை எண்ணமாட்டார்கள் என்பது உறுதியாகும்.

17. வாஸுதேவாச்ரயோ மர்த்யோ வாஸுதேவ பராயண:
ஸர்வபாப விசுத்தாத்மா யாதி ப்ரஹ்ம ஸநாதநம்

பொருள் – வஸுதேவனாகிய என்னை அடைக்கலம் என்று புகுந்தவர்கள், வாஸுதேவன் என்று என்னை மட்டும் எண்ணியபடி உள்ளவர்கள் தங்களது அனைத்து பாவங்களும் நீங்கப் பெற்று தூய்மை அடைகிறார்கள். அதன் பின்னர் அவர்கள் எப்போதும் உள்ள ப்ரஹ்மமாகிய என்னையே அடைகிறார்கள்.

18. ந வாஸுதேவ பக்தாநாம் அசுபம் வித்யதே க்வசித்
ஜந்ம ம்ருத்யு ஜரா வ்யாதிபயம் வாப்யுபஜாயதே

பொருள் – வாஸுதேவனாகிய எனது அடியார்கள் மோக்ஷம் அடைந்த பின்னர் அவர்களுக்கு எந்தவிதமான அசுபமும் இல்லை. அவர்களுக்கு பிறப்பு, இறப்பு, வயோதிகம், நோய் முதலான விஷயங்களில் எந்தவிதமான பயமும் இருப்பதில்லை.

19. தஸ்மாத் ஸர்வாத்மநா ப்ரஹ்மந் மத்பக்தோ தீக்ஷிதோ பவ
மத்கர்மக்ருத் மத்பரமோ மாமேவைஷ்யஸி சாச்வதம்

பொருள் – நான்முகனே! நீ என்னுடைய பக்தனாக எப்போதும் இருப்பாயாக. உனது அனைத்து கர்மங்களையும் என்னை முன்னிட்டு இயற்றுவாயாக (அல்லது கர்மங்களின் அந்தர்யாமி நானே என்று எண்ணியபடி இயற்றுவாயாக). அனைத்து விஷயங்களிலும் நானே உயர்ந்தவன் என்று அறிவாயாக. அதன் பின்னர் எப்போதும் இருக்கின்ற முக்தியை அடைவாயாக.

20. அந்யகர்மபரோ மர்த்யோ ப்ரஷ்டோ கச்சத்யதோகதிம்
மத்கர்மநிரதோ மர்த்யோ நாத: பததி கர்ஹிசித்

பொருள் – மற்ற கர்மங்களில் ஈடுபடும் ஒருவன் தாழ்ந்த நிலைக்குச் சென்று விழக்கூடும். ஆனால் என்னை இலக்காக வைத்துக்கொண்டு கர்மங்களை இயற்றும் ஒருவன் எப்போதும் தாழ்வதில்லை.

21. போகேந புண்யம் மத்பக்த்யா பாதகம் ச விதூயதே
த்வாதச அக்ஷர நிஷ்ணாதா: ப்ரயாந்தி பரமம் பதம்

பொருள் – யார் ஒருவர் பன்னிரண்டு அக்ஷரம் கொண்ட எனது மந்திரத்தில் எப்போதும் புத்தியை வைத்து, எனது பக்தராக உள்ளாரோ அவர் ஞானியாகவே திகழ்கிறார். அதன் மூலம் தனது பாவங்கள் மற்றும் புண்ணியங்கள் ஆகிய இரண்டையுமே அவர் உதறுகிறார். பின்னர் எனது பரமபதத்தை அடைகிறார்.

22. யதி மத்பரமோ மர்த்ய: பாபகர்மஸு ரஜ்யதே
ஏகஜந்ம விளம்ப்யாபி யாதி மத்பக்திம் உத்தமம்

பொருள் – என்னுடைய பக்தனாக உள்ள ஒருவன் ஒரு சில பாவ கர்மங்களில் ஈடுபட்டாலும், அவன் உயர்ந்த கதியை இழப்பதில்லை. ஆனால் அத்தகைய கதியைக் கிட்டுவதற்கு மேலும் ஒரு பிறவியோ அல்லது இரண்டு பிறவியோ காலதாமதம் ஆகலாம்.

23. த்ராயதே கலு நாத்யர்த்தம் அந்யத்கர்ம ஸ்வநிஷ்டிதம்
அபி தத்கர்ம விகுணம் த்ராயதே மஹதோ பயாத்

பொருள் – மற்ற கர்மங்களை மிகவும் ச்ரத்தையாகச் செய்தபோதிலும், அவை மற்ற தேவதைகளை இலக்காகக் கொண்டதால், அவை அவற்றைக் கைக்கொண்டவனைக் காப்பாற்றாது. ஆனால் என்னை இலக்காக வைத்து இயற்றப்பட்ட கர்மம், தடை ஏற்பட்டு நின்றாலும், அந்தக் கர்மம் தன்னை இயற்றியவனுடைய ஸம்ஸார பயத்தை நீக்கிவிடும்.

24. பஹூநாம் ஜந்மாநாம் அந்தே ஜ்ஞாநவாந் மாம் ப்ரபத்யதே
வாஸுதேவ: ஸர்வம் இதி ஸ மாஹாத்மா ஸுதுர்லப:

பொருள் – (இந்த ச்லோகம் கீதை 7-19 ஆகும்) ஒருவன் பல பிறவிகள் கடந்த பின்னர், வாஸுதேவனே கதி என்னும் ஞானத்தை அடைகிறான். அவன் என்னையே சரணம் அடைகிறான். எங்கும், எதிலும் வாஸுதேவனாகிய என்னையே காண்கிறான். இப்படிப்பட்ட உயர்ந்த ஆத்மா கிட்டுவது மிகவும் அரிதாகும்.

25. கத்வா கத்வா நிவர்த்தந்தே சந்த்ர ஸூர்யோதயோ க்ரஹா:
அத்யாபி ந நிவர்த்தந்தே த்வாதச அக்ஷர சிந்தகா:

பொருள் – சந்த்ரன், சூரியன் போன்ற கிரஹங்கள் தோன்றுவதும் மறைவதுமாக உள்ளன. ஆனால் யார் ஒருவன் என்னைக் குறித்த பன்னிரண்டு அக்ஷரங்களுடன் கூடிய மந்திரத்தை எப்போது சிந்தையில் வைத்துள்ளானோ அவன் மோக்ஷம் அடைகிறான்; அவன் மீண்டும் திரும்புவதில்லை.

26. பாதகம் பாதநீயம் வா யதி வா கோவதாதிகம்
யதி குர்வந்தி மத்பக்தா: தேஷாம் தந்நாசயாம் அஹம்

பொருள் – என்னுடைய பக்தன் ஒருவன் மிகப் பெரிய பாவம் செய்தாலும், பசுக்களை அழித்தல் போன்ற கொடிய செயல்களைச் செய்ய நேரிட்டாலும், அந்தப் பாவங்களை நான் அழித்துவிடுகிறேன்.

27. அநாசாராந் துராசாராந் அஜ்ஞாத்ருந் ஹீநஜந்மந:
மத்பக்தாந் ச்ரோத்ரியாந் நிந்தந் ஸத்யச்சண்டாளதாம் வ்ரஜேத்

பொருள் – எனது பக்தர்கள் ஆசாரம் அற்றவர்களாக, செய்யக் கூடாதவற்றைச் செய்பவர்களாக, அறிவற்றவர்களாக, தாழ்ந்த பிறவிகளில் பிறந்தவர்களாக இருக்கக்கூடும். ஆயினும் அவர்களைப் பழித்தால், சண்டாள பிறவியில் பிறப்பது நிச்சயம் ஆகும்.

28. மத்பக்தாந் மம வித்யாம் ச ஸ்ரீரங்கம் தாம மாமகம்
மத்ப்ரணீதம் ச ஸச்சாஸ்த்ரம் யே த்விஷந்தி விமோஹிதா:
29. ஜிஹ்வா துராத்மநாம் தேஷாம் சேதநீயா மஹாத்மபி:
யதி நாம ஜகத் ஸர்வம் ஸ்ரீரங்கம் இதி கீர்த்தயேத்
லோகௌ தௌ ஸ்வர்க்கநரகௌ கிலபூதௌ பவிஷ்யத:

பொருள் – யார் ஒருவன் எனது பக்தர்கள், எனது வித்யைகள், ஸ்ரீரங்கக்ஷேத்ரம், என்னால் உரைக்கப்பட்ட சாஸ்த்ரம் (பாஞ்சராத்ரம்) போன்றவற்றை வெறுக்கிறானோ அவனுடைய நாக்கானது அறிவு நிறைந்தவர்களால் துண்டிக்கப்படவேண்டும். “ஸ்ரீரங்கம்” என்று உச்சரித்தபடி இருந்தால் ஸ்வர்க்கம் மற்றும் நரகம் ஆகிய இரண்டுமே ஒருவனுக்கு இல்லாமல் போய்விடும் (முக்தி பெறுகிறான் என்று கருத்து).

30. ஸ்ரீரங்கம் இதி யே மூடா ந வதந்த்யவிபச்சித:
தேஷாம் ப்ரதேயமந்நாத்யம் ச்வப்ய ஏவ ப்ரதீயதாம்

பொருள் – யார் ஒருவன் “ஸ்ரீரங்கம்” என்று உச்சரிக்காமல் உள்ளானோ, அந்த மூடனுக்கு அளிக்கப்படவேண்டிய உணவை நாய்க்கு இடவேண்டும்.

31. திவி புவி அந்தரிக்ஷே வா யத்ர ரங்கம் வ்யவஸ்திதம்
தஸ்யை திசே நமோ ப்ரஹ்மந் குரு நித்யமதந்த்ரித:

பொருள் – ஸ்வர்க்கம், பூமி, அந்தரிக்ஷம் என்று எந்த இடமாக இருந்தாலும் அங்கு “ரங்கம்” இருந்தால், அந்தத் திசையை நோக்கி எந்தவிதமான சோம்பலும் இன்றி நமஸ்காரம் செய்தல்வேண்டும்.

32. மந்த்ரைர் விம்சதிபி: பூர்வம் அபிகம்ய திநே திநே
ஔபசாரிக ஸம்ஸ்பர்சைர் போஜ்யை: போகை: ஸமர்ச்சய

பொருள் – ஒவ்வொரு நாளும் இருபது மந்த்ரங்கள் கொண்ட அபிகமன ஆராதனை நடைபெற வேண்டும். இதே போன்று ஔபசாரங்கள், போகங்கள், போஜ்யைகள் அளிக்கப்படவேண்டும்.

33. தூப தீபாத்ம ஆதர்சாதி போகஸ்ஸ்யாத் ஔபசாரிக:
வாஸோ பூஷாங்கராணாதி போகஸ் ஸம்ஸ்பர்ச உச்யதே
34. பாயஸா பூபபாகாதி போகோ போஜ்ய உதீர்யதே

பொருள் – தூபம், தீபம், (ஆலவட்டம்) விசிறி, கண்ணாடி போன்றவை ஔபசாரிகம் எனப்படும். வஸ்த்ரங்கள், ஆபரணங்கள், சந்தனம் போன்றவை ஸம்ஸ்பர்சம் எனப்படும். பாயஸம், அபூபம் போன்றவை போகங்கள் எனப்படுகின்ற போஜ்யங்கள் ஆகும் – என்று கூறி முடித்தான்.

35. இத்யுக்த்வா பகவாந்ரங்கீ ப்ரஹ்மாணம் பிதரம் மம
தூஷ்ணீம் ஸ்ம சேதே விச்வாத்மா தேவாநாமபி பச்யதாம்

பொருள் – மஹேச்வரன் நாரதரிடம், “இப்படியாக எனது தந்தையான நான்முகனிடம் ஸ்ரீரங்கநாதன் உரைத்தான். அதன் பின்னர் அவன் தேவர்கள் அனைவரும் பார்த்துக் கொண்டிருக்கும்போதே கண்வளர்ந்தான். பின்னர் அங்கிருந்து மறைந்தான்”, என்றான்.

36. ததோ விமாநமாதாய ஸத்த்யலோகஸ்ய ஸீமநி
ஸபாரே விரஜாக்யாயாஸ்ஸரிதோ தாம வைஷ்ணவம்

பொருள் – அதன் பின்னர் அந்த மஹாவிஷ்ணுவின் இருப்பிடமான அந்த ஸ்ரீரங்க விமானத்தை நான்முகன் அங்கிருந்து எடுத்துக் கொண்டு புறப்பட்டான். அவன் அந்த விமானத்தை ஸத்யலோகத்தின் எல்லையில் உள்ள விரஜா என்னும் நதியின் கரையில் வைத்தான்.

37. ப்ரதிஷ்டாப்ய யதா சாஸ்த்ரம் ஸஹிதோ விச்வகர்மணா
துலாயாம் து ரவௌ ப்ராப்தே ரோஹிண்யாம் சசிநி ஸ்திதே
38. பத்ராயாம் க்ருஷ்ணபக்ஷஸ்ய ஹரி: ஸந்நிததே விதே:
ததாப்ரப்ருதி தத்தாம் ஸத்யலோகே வ்யவஸ்திதம்

பொருள் – அதன் பின்னர் நான்முகன் விச்வகர்மனுடன் சேர்ந்து சாஸ்த்ரங்களில் விதிக்கப்பட்ட முறைப்படி ஸ்ரீரங்கவிமானத்தை ஸத்யலோகத்தில் ப்ரதிஷ்டை செய்தான். இதனைச் சூரியன் துலாராசியில் இருந்தபோதும், சந்த்ரன் ரோஹிணி நக்ஷத்ரத்தில் இருந்தபோதும், பத்ராய வருடத்தில், க்ருஷ்ண பக்ஷத்தில் செய்தான். அன்றிலிருந்து ஸ்ரீஹரியின் ஸந்நிதியான ஸ்ரீரங்கவிமானம் ஸத்யலோகத்தில் விளங்கியது.

39. ப்ராஹ்மணை: பஞ்சராத்ரஜ்ஞை: பஞ்சபிர் தீக்ஷிதைஸ்ஸஹ
நித்யை: நைமித்திகை: ச ஏவ ஹரிமாநர்ச்ச பத்மபூ:

பொருள் – அதன் பின்னர் நான்முகன் நித்ய நைமித்திக கர்மங்களுடன் கூடிய கைங்கர்யங்களைச் செய்தபடி இருந்தான். அவனுடன் ஐந்து அந்தணர்கள் பாஞ்சராத்ர தீக்ஷை பெற்று ஸ்ரீரங்கநாதனை ஆராதனை செய்து வந்தனர்.

40. தத்ரைவ விஷ்ணுநக்ஷத்ரே ப்ரஹ்மா ப்ரஹ்மர்ஷிபி: ஸஹ
உத்ஸவம் விதிவத் சக்ரே தத்ரைவ அவப்ருதக்ரியாம்

பொருள் – நான்முகன் ப்ரஹ்மரிஷிகளுடன் சேர்ந்து மஹாவிஷ்ணுவின் திருநக்ஷத்ரத்தில் சாஸ்த்ர முறைப்படி உற்சவங்கள் நடத்தினான். அவப்ருத ஸ்நாநமும் செய்யப்பட்டது.

41. ப்ரஜாபதீம்ச்ச தக்ஷாதீந் மநூந் ஸ்வாயம்பூவாதிகாந்
தேவாம்ச்ச அர்ச்சாபயாமாஸ ப்ரஹ்ம ஸ்ரீரங்கசாயிநம்

பொருள் – ஸ்ரீரங்கநாதனுக்கான பூஜையை தக்ஷப்ரஜாபதி உள்ளிட்ட ப்ரஜாபதிகள், ஸ்வாயம்பூ மனு உள்ளிட்ட மனுக்கள், மற்ற தேவர்கள் அனைவரும் செய்வதை நான்முகன் மேற்பார்வை இட்டபடி இருந்தான்.

42. யேஷு ப்ரீதிரபூத்தஸ்ய மாநஸேஷ்வௌரஸேஷு ச
தாம்ஸ்தாந் அர்ச்சாபயாமாஸ ப்ரஹ்மா ஸ்ரீரங்கசாயிநம்

பொருள் – மேலும் தன்னுடைய புத்திரர்கள், தனது மானஸீகமான புத்திரர்கள் போன்றவர்களால் பூஜை செய்யப்படுவதை நான்முகன் கண்டான். தான் யாரிடம் அதிகமான அன்புடன் இருக்கிறானோ அவர்கள் அனைவரும் ஸ்ரீரங்கசாயிக்கு அர்ச்சனை செய்தபடி உள்ளதை நான்முகன் கண்டான்.

43. விவஸ்வத வை ஸ்ரீரங்கமதர்சயத பங்கஜ: தஸ்மை
ப்ரோவாச பகவாந் பஞ்சராத்ரம் ஸ்வயம் ப்ரபு:

பொருள் – விவஸ்வான் என்னும் சூரியனுக்கு நான்முகன் ஸ்ரீரங்கவிமானத்தைக் காண்பித்தான். அந்த விவஸ்வான் என்னும் சூரியனுக்கு பாஞ்சராத்ர ஆகமத்தை நான்முகன் உபதேசித்தான்.

Email:sridharan_book@yahoo.co.in

44. தத்ர அர்ச்சயதி வை நித்யம் நித்யை: நைமித்திகை: அபி
விவஸ்வாந் மநவே ப்ராஹ தர்மம் பாகவதம் த்விஜ
ஸ ச அர்ச்சயாமாஸ ஹரிம் ஸ்ரீரங்கதாம்நி வை மநு:

பொருள் – அந்த விவஸ்வான் என்னும் சூரியன், ஸ்ரீரங்கநாதனுக்கு அன்றாடம் நித்ய நைமித்திக கர்மங்களுடனான ஆராதனைகளைச் செய்து வந்தான். அவன் தனது புத்திரனாகிய வைவஸ்வத மனுவிற்கு பாகவத தர்மம் குறித்து உபதேசம் செய்தான். அந்த வைவஸ்வத மனு ஸ்ரீரங்கநாதனை ஆராதித்து வந்தான்.

45. புத்ராய வைஷ்ணவாந் தர்மாந் மநு: இக்ஷ்வாகவே அப்ரவீத்
இக்ஷ்வாகுஸ்தபஸா லப்த்வா ஸ்ரீரங்கம் ப்ரஹ்மண: அந்திகாத்

பொருள் – வைவஸ்வத மனு தனது புத்திரனாகிய இக்ஷ்வாகு என்பவனுக்கு வைஷ்ணவ தர்மங்கள் குறித்து உபதேசம் செய்தான். தன்னுடைய கடுமையான தவம் மூலம் இக்ஷ்வாகு நான்முகனிடமிருந்து ஸ்ரீரங்கவிமானத்தைப் பெற்றான்.

46. அயோத்யாயாம் ப்ரதிஷ்டாப்ய யதா சாஸ்த்ரம் அபூஜயத்
ஏவம் பரம்பரா ப்ராப்தம் விமாநம் ரங்க ஸம்ஜ்ஞிகம்
விபீஷணாய ப்ரததௌ ராமோ ரங்கம் மஹாத்மநே

பொருள் – இக்ஷ்வாகு சக்ரவர்த்தி அந்த ஸ்ரீரங்கவிமானத்தைத் தனது நகரமான அயோத்தியில் ப்ரதிஷ்டை செய்து சாஸ்த்ர முறைப்படி ஆராதனை செய்துவந்தான். இப்படியாக அவனது பரம்பரை முழுவதுமாக ஸ்ரீரங்கவிமானத்தை ஆராதிக்கும் வாய்ப்பு ஏற்பட்டது. பின்னர் அந்த வம்சத்தில் அவதரித்த ஸ்ரீஇராமனால் ஸ்ரீரங்கவிமானம் விபீஷணனுக்கு அளிக்கப்பட்டது.

47. தேநாநீதம் ச காவேர்யாம் ஸ்தாபிதம் முநிஸத்தம
ததா ப்ரப்ருதி காவேர்யாம் ஸந்நிதத்தே ஸதா ஹரி:

Email:sridharan_book@yahoo.co.in

பொருள் – விபீஷணனால் கொண்டு வரப்பட்ட அந்த ஸ்ரீரங்கவிமானம், காவேரியின் கரையில் ப்ரதிஷ்டை செய்யப்பட்டது. அந்த நாள் முதலாக, ஸ்ரீஹரியானவன் காவேரியின் கரையில் தன்னுடைய ஸந்நிதியை அமைத்துக்கொண்டான்.

48. பால்குநே மாஸி தேவஸ்ய நக்ஷத்ரே பகதைவதே
பால்குநாமலபக்ஷஸ்ய ஸப்தம்யாம் மந்தவாஸரே
49. ரோஹிணீம் ரேவதீம் ச ஏவ கதயோ: இந்து ஜீவயோ:
மத்யாந்திநே அபிஜித்காலே ஸ்த்ரீபும்ஸே சோபயாத்மகே
விபீஷணேந காவேர்யாம் ஸ்ரீரங்கம் ஸுப்ரதிஷ்டிதம்

பொருள் – பங்குனி மாதம், சுக்லபக்ஷம், சனிக்கிழமை, ஸப்தமி திதி, ரோஹிணி நக்ஷத்ரம், குரு ரேவதி நக்ஷத்ரத்தில் உள்ளபோது, மத்யான நேரத்தில், அபிஜித் காலத்தில் ஸ்ரீரங்கவிமானம் விபீஷணனால் காவேரியின் கரையில் ப்ரதிஷ்டை செய்யப்பட்டது.

50. ததா ப்ரப்ருதி காவேர்யாம் ஸ்ரீரங்கம் தாம நாரத
கல்பாந்தஸ்தாயி ஸம்பூதம் த்ருச்யதே அத்யாபி பாவநை:

பொருள் – நாரதா! அந்த நாள் முதலாக ஸ்ரீரங்கவிமானம் காவேரியின் கரையில் இருந்து வருகிறது. இந்த கல்பம் முடியும்வரை அனைவரும் காணலாம்படி அந்த விமானம் அங்கேயே இருக்கும்.

51. இதி தே ஸர்வமாக்யாதம் தேவர்ஷே தேவசேஷ்டிதம்
ரஹஸ்யம் பரமம் போக்யம் யஜ்ஞாத்வா அம்ருதம் அச்நுதே

பொருள் – நாரதரே! இப்படியாக தேவர்களின் மிகவும் ரகசியமான செயல்பாடுகள் குறித்து உனக்கு நான் உரைத்தேன். இந்த ரஹஸ்யத்தை யார் அறிகிறார்களோ அவர்கள் உயர்ந்த ஞானம் அடைந்து, ஸ்ரீரங்கநாதனின் அமிர்தம் போன்ற ப்ரஸாதமான மோக்ஷம் பெறுகின்றனர்.

52. ய ஏவம் கீர்த்தயேந் நித்யம் ரங்க ஆவிர்ப்பாவம் உத்தமம்
ஸர்வபாப விநிர்முக்தஸ்ய யதி பரமம் பதம்

பொருள் – யார் ஒருவன் அன்றாடம் ஸ்ரீரங்கவிமானம் வெளிப்பட்ட இந்த மேன்மையான நிகழ்வை படிக்கிறானோ அவன் தனது பாவங்கள் அனைத்தும் நீங்கப்பெறுகிறான். மேலும் உயர்ந்த கதியை அடைகிறான்.

53. ந வாஸுதேவாத் பரம் அஸ்தி மங்களம் ந வாஸுதேவாத் பரம் அஸ்தி பாவநம்
ந வாஸுதேவாத் பரம் அஸ்தி தைவதம் ந வாஸுதேவம் ப்ரணிபத்ய ஸீததி

பொருள் – வாஸுதேவனைக் காட்டிலும் உயர்ந்த மங்களம் இல்லை, வாஸுதேவனைக் காட்டிலும் தூய்மையான வஸ்து ஏதும் இல்லை, வாஸுதேவனைக் காட்டிலும் மேலான தெய்வம் வேறு ஏதும் இல்லை, வாஸுதேவனின் திருவடிகளை பணிந்தவர்கள் துயரம் ஏதும் அடைவதில்லை.

ஸ்ரீமத்ப்ரஹ்மாண்ட புராணத்தில் உள்ள ஸ்ரீரங்கமாஹாத்ம்யத்தின் ஆறாம் அத்யாயம் ஸம்பூர்ணம்

அத்யாயம் – 7 – இக்ஷ்வாகு சக்ரவர்த்தியின் தவம்

1. கதம் ஸ்ரீரங்கமதுலம் ப்ரஹ்மலோகாதிஹாகதம்
இக்ஷ்வாகுணா தபஸ்தப்தம் கதம் ராஜ்ஞா மஹாத்மநா

பொருள் – நாரதர் மஹேச்வரனிடம், "ஸ்ரீரங்கம் என்பது ஈடு இணை ஏதும் அற்றது. அந்த விமானம் ப்ரஹ்மலோகத்திலிருந்து பூமிக்கு எப்படி வந்தது? இக்ஷ்வாகு என்னும் அந்த உயர்ந்தவன் எவ்விதம் தவம் இயற்றினான்?", என்று வினவினார்.

2. விபீஷணேந சாநீதம் விமாநம் ரங்கஸம்ஜ்ஞிதம்
விமாநம் வைஷ்ணவம் திவ்யம் கதமந்தே பவிஷ்யதி
ஏதத் ஸர்வம் மமாக்யாஹி நமஸ்தே சந்த்ரசேகர

பொருள் – மேலும் நாரதர் சிவபெருமானிடம், "சந்த்ரசேகரா! இந்த ஸ்ரீரங்கவிமானத்தை விபீஷணன் காவேரியின் கரைக்கு எவ்விதம் கொணர்ந்தான்? உயர்ந்த இந்த வைஷ்ணவ விமானம் எதிர்காலத்தில் எப்படி இருக்கும்? இவை அனைத்தையும் நீ எனக்கு அருள் கூர்ந்து உரைப்பாயாக. உன்னை நமஸ்கரித்துக் கேட்கிறேன்", என்றார்.

3. வராஹஸ்ய ச கல்பஸ்ய மநோர் வைவஸ்வதஸ்ய ஹி
சதுர்யுகே ச ப்ரதமே மநுபுத்ரோ மஹாயசா:
4. இக்ஷ்வாகுர்நாம ராஜாஸீத் அயோத்யா நகராதிப:
மஹாபாகவதோ ப்ரஹ்மந் பஞ்சகால பராயண:

பொருள் – சிவபெருமான் நாரதரிடம் கூறத் தொடங்கினார்: வராஹ கல்பத்தில் வைவஸ்வத மந்வந்தரத்தில் உள்ள நான்கு யுகங்களில் முதல் யுகம் க்ருதயுகம் ஆகும். அந்த க்ருதயுகத்தில் வைவஸ்வத மநுவின் புத்ரனாகிய இக்ஷ்வாகு என்னும் அரசன் இருந்தான். அவன் அயோத்தியின் அரசன் ஆவான். மேலும் அவன் சிறந்த பாகவதனாகவும்

Email:sridharan_book@yahoo.co.in

திகழ்ந்தான். அவன் ஐந்து வேளைகளிலும் விஷ்ணுபூஜை மற்றும் பாராயணம் செய்து வந்தான்.

5. வேதவேதாங்க தத்த்வஜ்ஞோ நீதிசாஸ்த்ர விசாரத:
பிதுராத்த தநுர்வித்யோ பகவத் தர்மகோவித:

பொருள் – அவன் வேதங்களை அதன் ஆறு அங்கங்களுடன் அறிந்தவன் ஆவான். நீதி சாஸ்த்ரங்களில் நிபுணனாகத் திகழ்ந்தான். தன்னுடைய தந்தையிடமிருந்து வில் வித்யையை அறிந்திருந்தான். அவன் பகவத் தர்மங்களிலும் தேர்ந்தவன் ஆவான்.

6. வசிஷ்டஸ்ய முநே: சிஷ்யோ யஜ்வாதண்டதர: ப்ரபு:
யுத்தேஷு ஜிதகாசீ ச தஸ்யேயம் அபவந்மதி:

பொருள் – அவன் வசிஷ்ட முனிவரின் சிஷ்யன் ஆவான். அவன் அனைத்துவிதமான யஜ்ஞங்களைச் செய்தபடி இருந்தான். அதே நேரத்தில் நாட்டில் தவறு செய்பவர்கள் யாராக இருந்தாலும் அவர்களைத் தண்டிப்பவனாகவும் விளங்கினான். அனைத்து யுத்தங்களிலும் வெற்றியே பெற்றான். இப்படிப்பட்ட அவனுடைய புத்தியானது ஒருமுறை பின்வருமாறு யோசித்தது.

7. விஷயாஸக்தசித்தாநாம் மோஹ வ்யாகுலிதாத்மாநாம்
ச்ரேய: அபிமுகமாயாதி ந கதாசந மாநஸம்

பொருள் – யார் ஒருவனின் மனம் உலகவிஷயங்களால் நிரப்பப்பட்டு மயக்கத்தில் ஆழ்கிறதோ, அவர்களின் மனம் அவர்களுடைய மேன்மைக்கு ஏற்றபடி இயங்குவதில்லை.

8. ச்ராத்ததேவ: பிதாஸ்மாகம் விவஸ்வாம்ச்ச பிதாமஹ:
ப்ரஹ்மலோகமிதோ கத்வா தத்ர ஆராத்ய ஜநார்த்தனம்

பொருள் – இக்ஷ்வாகு பின்வருமாறு சிந்தித்தான்: என்னுடைய தந்தையான வைவஸ்வத மனு, பாட்டனாராகிய சூரியன் போன்றவர்கள் எளிதாக ப்ரம்மலோகம் சென்று,

அங்குள்ள ஸ்ரீரங்கவிமானத்தையும், அந்த விமானத்தில் எழுந்தருளியுள்ள ஜனார்த்தனனாகிய ஸ்ரீரங்கநாதனையும் ஆராதித்து வந்தனர்.

9. அவாபதுர்யோக மோக்ஷாவந்யே ச ப்ரஹ்மவாதிந:
ந ததா கந்தும் அஸ்மாபி: சக்யோ லோகஸ்ஸநாதந:

பொருள் – ஆகவே அவர்களுக்கு மிகவும் உயர்ந்த இன்பமும் மோக்ஷமும் கிட்டுவது உறுதியே ஆகும். இது போன்றே பல ப்ரஹ்மஞானிகளும் ஸ்ரீரங்கநாதனை ஆராதித்து மோக்ஷம் பெற்றனர். ஆனால் என்னால் ப்ரஹ்மலோகம் வரை சென்று வர இயலாது.

10. கிம் உதாஸ்பதபத்யாத்யை: கிம் புந: ப்ராக்ருதைர் ஜநை:
மத்க்ருதே ஸகலோ லோகோ யதா முக்திம் ப்ரயாஸ்யதி

பொருள் – என்னால் இயலவில்லை என்னும்போது எனது புத்திரன், பேரன் போன்றவர்களாலும் இயலாது என்று கூறவும் வேண்டுமோ? இப்படி உள்ளபோது இந்த ப்ரக்ருதியுடன் அனைத்துவிதங்களிலும் பந்தப்பட்டுள்ள ஸம்ஸார ஜனங்கள் குறித்துக் கூறவே வேண்டாம். இவர்கள் அனைவரும் எவ்விதம் முக்தி அடைவது என்று இக்ஷ்வாகு பலவாறு சிந்தித்தான்.

11. ததா கதம் கரிஷ்யாமி பூஜயிஷ்யே கதம் ஹரிம்
அநயா சிந்தயா அப்ருச்சத் ஸ்வகுரும் ப்ரஹ்மணஸ்ஸுதம்

பொருள் – இதற்காக என்ன செய்யவேண்டும்? ஸ்ரீஹரிக்கு எவ்விதம் ஆராதனை செய்யவேண்டும்? இது போன்ற பல சிந்தனைகள் கொண்டவனாக, இவற்றைத் தெளிவாக்கும்படி தனது குலகுருவும், நான்முகனின் புத்திரரும் ஆகிய வசிஷ்டரை நாடினான். தனது சந்தேகங்களைக் கேட்டான்.

12. ஸ சோவாச ப்ரசஸ்யைநம் வசிஷ்ட: அருந்ததீபதி:
த்வயா ஸம்யக் வ்யவஸ்ஸிதம் இக்ஷ்வாகோ ச்ருணுமே வச:
தபஸைவ தவாபீஷ்டம் ஸித்திம் இத்யவதாரய

பொருள் – இதனைக் கேட்ட அருந்ததியின் கணவராகிய வசிஷ்ட முனிவர் பின்வருமாறு உரைக்கத் தொடங்கினார்: இக்ஷ்வாகுவே! நீ மிகவும் சரியாகச் சிந்தித்து இப்படிப்பட்ட சந்தேகங்களை எழுப்பியுள்ளாய். நான் கூறுவதைக் கவனமாகக் கேட்பாயாக. உன்னுடைய விருப்பமானது தவம் மூலம் மட்டுமே நிறைவேறும். இதனை நீ நன்கு உணர்ந்து கொள்வாயாக.

13. புரா கில மயா த்ருஷ்டம் சதகோடி ப்ரவிஸ்தரே
புராணே முநிபி: த்ருஷ்டம் அர்த்தமாகமிநம் ச்ருணு

பொருள் – இதனைப் பற்றி பல கோடி புராணங்கள் மூலமாக முன்பிருந்த முனிவர்கள் அறிந்திருந்தனர். நானும் அப்படியே அறிகிறேன். இனி நடக்கப்போவது குறித்து நான் கூறக் கேட்பாயாக.

14. பவந்தம் உதிச்யேஹ ஸத்யலோகாத் ஸ்வயம்புவ:
ஜகதாம் உபகாராய விஷ்ணோர்தர்ம கமிஷ்யதி

பொருள் – ஸ்ரீமந்நாராயணனின் இருப்பிடமான ஸ்ரீரங்கமானது நான்முகனின் இருப்பிடமான ஸத்யலோகத்திற்குச் சென்றது. இந்த உலகிற்கு உபகாரம் செய்யும்விதமாக இவ்விதம் ஸத்யலோகத்தை அடைந்தது.

15. தபஸா தோஷிதஸ்துப்யம் தத் ச தாஸ்யதி லோகக்ருத்

பொருள் – உனது தவம் மூலம் மகிழ்ச்சி அடையப்போகும் நான்முகன், அந்த ஸ்ரீரங்கவிமானத்தை உலகின் பொருட்டு உனக்கு அளிப்பான்.

16. அயோத்யாயாம் சிரம் காலம் ஸ்ரீமத்ரங்கம் பவிஷ்யதி
அவதீர்ய பவத்வம்சே ராமோ நாம ஜநார்த்தந:

Email:sridharan_book@yahoo.co.in

பொருள் – அந்த ஸ்ரீரங்கவிமானம் அயோத்தியில் நீண்டகாலம் நிலைத்து நிற்கும். அதன் பின்னர் உனது பரம்பரையில் ஸ்ரீமந்நாராயணன், ஸ்ரீஇராமன் என்னும் திருநாமத்துடன் அவதரிப்பான்.

17. நிஹநிஷ்யதி துர்வ்ருத்தம் ராவணம் லோகராவணம்
    விபீஷணாய தத்ப்ரார்த்ரே ப்ரியாய ப்ரியகாரணே

பொருள் – உலகில் அனைவருக்கும் கெடுதலைச் செய்தபடி உள்ள இராவணன் என்னும் அரக்கனை அந்த இராமன் அழிப்பான். இராவணனின் தம்பியாகிய விபீஷணனிம் இராமனுக்கு மிகுந்த ப்ரியம் இருக்கும்.

18. ப்ரியம் விமாநம் ஸ்ரீரங்கம் ராமதேவ: ப்ரதாஸ்யதி
    ஸ து நிஷ்யதி காவேர்யாம் சந்த்ரபுஷ்கரிணீதடே

பொருள் – அந்த ப்ரியத்தின் காரணமாக இராமன் விபீஷணனுக்கு ஸ்ரீரங்கவிமானத்தைப் பரிசாக அளிப்பான். விபீஷணன் ஸ்ரீரங்கவிமானத்தை காவேரியின் கரையில் உள்ள சந்த்ரபுஷ்கரிணீ என்னும் தடாகத்தின் அருகில் வைப்பான்.

19. தத்ர சோளைர் பவத்வம்ச்யைர் ஹ்ருஷீகேச: அர்ச்சயிஷ்யதி
    தத்ராகல்பம் அவஸ்தாய கல்பாந்தே ஸத்யமேஷ்யதி

பொருள் – இப்படியாக அங்கு வைக்கப்பட்ட ஹ்ருஷீகேசனாகிய ஸ்ரீரங்கநாதனை உனது வம்சத்தில் வரும் சோழர்கள் ஆராதிப்பார்கள். இப்படியாக அந்தக் கல்பகாலம் முடிய அங்கேயே இருந்துவரும் ஸ்ரீரங்கவிமானம், கல்பத்தின் முடிவில் ஸத்யலோகம் வந்து சேரும்.

20. கல்பே கல்பே திவோ பூமிம் ஆகமிஷ்யதி ரங்கராட்
    த்விபரார்த்தாவஸாநே ச ஸ்வதாம ப்ரதிபத்ஸ்யதே

பொருள் – இப்படியாக ஒவ்வொரு கல்பத்திலும் ஸ்ரீரங்கராஜன் பூமியில் எழுந்தருளி இருப்பான். அந்தந்த கல்பம் முடிந்த பின்னர் தனது இருப்பிடமான ஸத்யலோகத்திற்கு வந்துவிடுவான்.

21. ஜநாநாம் தக்ஷிணாத்யாநாம் காவேரீதீர வாஸிநாம்
தயிதஸ்ஸர்வதா தேவோ விஷ்ணு: ஸ்ரீரங்ககோசர:

பொருள் – காவேரியின் கரையின் தென்பகுதியில் உள்ள மக்களின் பொருட்டு ஸ்ரீரங்கநாதன் அங்கேயே வாசம் செய்வான். அவர்கள் அனைவராலும் அந்த விஷ்ணு மிகவும் நேசிக்கப்படுவான்.

22. அவித்வாம்ஸ: அபி அதர்மிஷ்டா ஹீநஜா க்ருபயஸ்ததா
தஸ்மிந் தேசே விமுச்யந்தே யத்ர ரங்கம் வ்யவஸ்திதம்

பொருள் – ஒருவன் வித்வான் அல்லாதவனாக (அறிவற்றவன்) இருக்கலாம், அதர்மங்களை மட்டுமே விருப்பத்துடன் செய்தபடி இருக்கலாம், தாழ்ந்த குலத்தில் பிறவி எடுத்திருக்கலாம். ஆனால் இப்படிப்பட்டவன் ஸ்ரீரங்கவிமானம் எங்கு உள்ளதோ, அந்த இடத்தில் வசித்தால், அந்த விமானத்தின் க்ருபையால் தனது தோஷங்களிலிருந்து விடுபடுகிறான்.

23. யதா து பஹவ: பாபா: க்ருதக்நா நாஸ்திகாச்சடா:
முச்யந்தே ரங்கம் ஆச்சித்ய ததா ப்ரஹ்மசிவாதய:

பொருள் – ஒருவன் மிகவும் கொடிய பாவங்கள் செய்திருக்கலாம், அவனுக்கு மற்றொருவன் உதவி செய்திருக்கலாம், ஸர்வேச்வரன் மீது நம்பிக்கை இல்லாமல் இருக்கலாம், அனைத்துவிதத்திலும் கொடூரமான உள்ளம் கொண்டவனாக இருக்கலாம் – இப்படிப்பட்டவர்கள் கூட ஸ்ரீரங்கத்தை அடைந்தால், தங்கள் பாவங்கள் நீங்கப்பெற்று ப்ரஹ்மலோகம் நீங்கப்பெற்று ப்ரஹ்மலோகம் செல்வர்.

24. விக்நம் சரந்தி தத்தேச நிவாஸே தத்ர தேஹிநாம்
யதா ப்ரஜாஸு தயதே பகவாந் பக்தவத்ஸல:
25. ததா ததாதி ஸர்வேஷாம் நிவாஸம் தத்ர தேஹிநாம்
யதா து வர்ணதர்மஸ்தைச்சதுராச்மம் ஆச்ரிதை:

பொருள் – அப்படிப்பட்ட பாவம் செய்தவர்கள் ஸ்ரீரங்கத்தில் வசிப்பதைத் தடுக்கும் விதமாக நான்முகன், ருத்ரன் போன்ற தேவர்கள் பலவிதமான இடையூறுகளைச் செய்வர். அப்போது அந்த மனிதர்கள் மீது ஸ்ரீரங்கநாதன் மிகுந்த வாத்ஸல்யம் கொள்வான். வர்ணாச்ரம தர்மங்களைப் பெரிதும் மதித்து வாழ்பவர்களுக்கு ஸ்ரீரங்கநாதன் ஸ்ரீரங்கத்தில் வாழ்வதற்கு உதவுகிறான்.

26. ஸாத்த்விகை: ப்ரசுரம் ரங்க ததா விக்நோந வித்யதே
தஸ்மாத் லோகஹிதார்த்தாய தபஸ்தீவ்ரம் ஸமாசர
மம ஆச்ரம ஸமீபே த்வம் அஷ்டாக்ஷர பராயண:

பொருள் – ஸாத்விகர்கள் ஸ்ரீரங்கத்தில் வசிக்கும்போது எந்த தேவர்களும் அவர்களுக்கு எந்தவிதமான இடையூறுகளையும் உண்டாக்குவதில்லை. இப்படியாக அந்த ஸ்ரீரங்கவிமானம் உலகின் நன்மைக்காகவே உள்ளது. அப்படிப்பட்ட ஸ்ரீரங்க விமானத்தை அடைய நீ தீவிரமான தவம் மேற்கொள்ளவேண்டும். அனது ஆச்ரமத்தின் அருகில் அமர்ந்து அஷ்டாக்ஷர மந்த்ரத்தை (ஓம் நமோ நாராயணாய) ஜபித்தபடி தவம் இயற்றுவாயாக – என்று கூறி வசிஷ்டர் முடித்தார்.

27. ஏவம் உக்தாஸ்து குருணா மஹிஷ்யா ஸஹ மாநவ:
ததாச்ரயே தபஸ்தேபே தந்மந அநந்யமாநஸ:

பொருள் – இப்படியாகத் தனது க்ருவான வசிஷ்டரால் இக்ஷ்வாகு உபதேசிக்கப்பட்டான். அதன் பின்னர் தனது பக்தியுடன் கூடியவனாக அவன், அவரது ஆச்ரமத்திற்கு அருகே உள்ள இடத்திற்குச் சென்றான். அங்கு தனது மனதை வேறு எதிலும் செலுத்தாமல் ஆழ்ந்த தவத்தில் அமர்ந்தான்.

28. க்ரீஷ்மே பஞ்சாக்நி மத்யஸ்தே: சிசிரே ஜலகோசரே:
ஆர்த்ரவஸ்த்ரஸ்து ஹேமந்தே வர்ஷா ஸ்வப்ராவகாசக:

பொருள் – க்ரீஷ்ம ருதுவின்போது அந்த அரசன் பஞ்சாக்னியின் நடுவே தவம் இருந்தான். சிசிர ருதுவின்போது நீரில் ஆழ்ந்து தவம் இருந்தான். ஹேமந்த ருதுவின்போது தன்னை ஈரமான துணியால் சுற்றியபடி தவம் இருந்தான். வர்ஷ ருதுவின்போது தன்னை மேகங்களுக்கு அர்ப்பணித்து தவம் இருந்தான்.

29. வாதா தபஸஹ: க்ஷாந்தோ நிர்த்வந்த்வோ நிஷ்பரிக்ரஹ:
தம் து பர்யசரத்தேவீ தபஸ்யந்தம் தபஸ்விநீ

பொருள் – அந்த இக்ஷ்வாகு மன்னன் கடுமையான காற்று, வெப்பம் போன்றவற்றைப் பொறுத்துக் கொண்டான். அவன் இரட்டையாக வரக்கூடிய (குளிர் – உஷ்ணம், துன்பம் – இன்பம்) அனைத்தையும் தள்ளினான். மிகுந்த தவத்தில் ஆழ்ந்தான். அவனது மனைவியும் சிறந்த தபஸ்வி என்பதால், அவள் தன்னுடைய கணவனுக்கு ஏற்ற பணிவிடைகளை செய்தபடி இருந்தாள்.

30. தஸ்ய த்ருஷ்ட்வா தபோநிஷ்டாம் சதக்ரதுமுகா: ஸுரா:
கஸ்யாயம் இச்சதி பதம் இத்யாஸந்ந ஆகுலேந்த்ரியா:

பொருள் – இப்படியாக இவன் செய்தபடி இருந்த தவத்தைக் கண்டு இந்த்ரன் உள்ளிட்ட தேவர்கள் அனைவரும் வியந்தனர். எப்படிப்பட்ட விருப்பம் நிறைவேறும் பொருட்டு இவன் இப்படிப்பட்ட கடும் தவத்தை இயற்றுகிறான் என்று எண்ணியபடி நின்றனர்.

31. தஸ்ய தர்ம விகாதார்த்தம் ஸர்வாஸ் ஸமந்த்ர்ய தேவதா:
மந்மதம் ப்ரேஷயாமாஸு: வஸந்தம் மலயாநிலௌ

பொருள் – அவனது இந்தத் தவத்தைக் கலைப்பதற்காக அனைத்து தேவர்களும் கூடி நின்று ஆலோசித்தனர். அவர்கள் மன்மதன், வஸந்தகாலம், மலயமாருதம் போன்றவற்றை இக்ஷ்வாகு மன்னனிடம் அனுப்பினர்.

Email:sridharan_book@yahoo.co.in

32. அப்ஸரோபி: பரிவ்ருதாஸ்தே கச்சந் ஸ்தஸ்ய சாச்ரமம்
தபஸ்யந்தம் மஹாராஜம் ஸ்தாணுபூதம் ஜிதேந்த்ரியம்
33. விக்நை: ஸம்யோஜயாமாஸுர் விவிதைர் அப்ஸரோகணா:

பொருள் – மன்மதன் அப்ஸரஸ் பெண்களுடன் இக்ஷ்வாகு தவம் செய்து கொண்டிருந்த ஆச்ரமத்திற்கு வந்தான். அங்கு அனைத்து இந்த்ரியங்களையும் தன்வயப்படுத்தி, ஒரு கல்தூண் போன்று நின்றபடி தவம் புரிந்து கொண்டிருந்த இக்ஷ்வாகு மன்னனைக் கண்டனர். அந்தப் பெண்கள் அவனுடைய தவத்திற்குப் பலவிதமான இடையூறுகளை உண்டாக்கினர்.

34. மந்மதேந அப்ஸரோபிச்ச பஹுதா விப்ரலோபித:
ந சசால மஹாராஜோ மீநைரிவ மஹாஹத:

பொருள் – அந்த மன்மதனும் அப்ஸரஸ் பெண்களும் செய்த பலவிதமான காம தூண்டுதல்களால் பாதிக்கப்படாமல் இக்ஷ்வாகு தனது தவத்தைத் தொடர்ந்தான். மிகப் பெரிய ஏரி ஒன்றில் ஒரு சிறிய மீன் எந்தவிதமான பாதிப்பையும் ஏற்படுத்த இயலாதது போன்று அவன் விளங்கினான்.

35. ஸமாதேர் விரதஸ்ஸ: அத த்ருஷ்ட்வா காமம் ஸமாகதம்
ஆதித்யம் கல்பயாமாஸ தஸ்ய ச அப்ஸரஸாம் அபி

பொருள் – தனது ஆழ்ந்த நிலையில் இருந்து கண்விழித்துப் பார்த்த இக்ஷ்வாகு தன் முன்பாக மன்மதன் உள்ளிட்ட அழகான அப்ஸரஸ் பெண்கள் நிற்பதைக் கண்டான். அவர்களை வரவேற்று, ஒரு விருந்தினருக்குச் செய்யவேண்டிய உபசாரங்கள் அனைத்தையும் செய்தான்.

36. பீதா: ப்ரீதா: ததோத்விக்நா விஸ்மிதா லஜ்ஜிதாஸ்ததா
விலக்ஷாச்சைவ தே அந்ய: அந்யமிதமூசு: பரஸ்பரம்

Email:sridharan_book@yahoo.co.in

பொருள் – அப்போது மன்மதன் உள்ளிட்ட அனைவரும் சற்றே அச்சம் கொண்டனர். அவர்கள் இக்ஷ்வாகுவிடம் அன்பும் கொண்டனர். மிகுந்த மகிழ்ச்சியும் வியப்பும் அடைந்தனர். தங்களது செயல்கள் அனைத்திற்காகவும் வெட்கம் அடைந்தனர். பின்னர் தங்களுக்குள் அவர்கள் பேசிக் கொண்டனர்.

37. அஹோ தார்ட்யம் அஹோ தார்ட்யம் அஹோ க்ஷாந்தி: அஹோ தம:
அஹோ விரக்திராதித்யம் அஹோ அஸ்ய மஹாத்மந:

பொருள் – அவர்கள், "எத்தனை ஆழமான தவம், எத்தனை ஈடுபாடு, எத்தனை பொறுமை, என்னே மன்னிக்கும் தன்மை, என்னே இவன் புலன் அடக்கம், உலகவிஷயங்களில் இருந்து இந்த அளவு விலகி உள்ளானே, இவன் மஹாத்மா ஆவான்", என்றனர்.

38. துர்ஜய: அயம் இஹ அஸ்மாபி: கிமந்யை: க்ரியதாம் இதி
இஷ்ட ஸித்திம் மஹாராஜோ லப்ஸ்யதே ந சிரேண வை

பொருள் – மேலும் அவர்கள், "இவனை நம்மால் வெல்ல இயலாது. நம்மாலேயே இவனை வெல்ல முடியாது என்று கூறிய பின்னர், மற்றவர்களாலும் வெல்ல இயலாது என்று கூறவும் வேண்டுமோ? இந்த அரசன் தன்னுடைய விருப்பத்தைக் கூடிய விரைவில் அடையக்கடவன்", என்றனர்.

39. இதி ஸாமந்த்ர்ய தே ஸர்வே ராஜாநாம் ப்ராஜ்ஞலிம் ஸ்திதம்
ஸ பத்நீகம் அவோசம்ஸ்தே முகேநாத்மமுகோ த்விஜ

பொருள் – இப்படியாக மன்மதன் உள்ளிட்ட அனைவரும் தங்களுக்குள் பேசிக் கொண்டனர். அவர்கள் தங்கள் முன்பாகக் கூப்பிய கரங்களுடன் இக்ஷ்வாகு தனது தர்மபத்னியுடன் நிற்பதைக் கண்டனர். அவனிடம் வந்தவர்களில் முக்கியமானவனாகிய மன்மதன் கூறத் தொடங்கினான்.

40. இக்ஷ்வாகோ தாபஸ: அஸி த்வம் இந்த்ரியாணி ஜிதாநிதே
யேஷாம் நிர்ஜயாத் ராஜந் பதந்தி நிரயே ஜநா:

Email:sridharan_book@yahoo.co.in

பொருள் – மன்மதன் இக்ஷ்வாகுவிடம் கூறத் தொடங்கினான்: இக்ஷ்வாகு! நீ மிகவும் சிறந்த தபஸ்வி ஆவாய். இந்த உலகில் உள்ள மனிதர்கள் இந்த்ரியங்களை வெல்ல இயலாத காரணத்தினால்தான் நரகில் விழுகின்றனர்.

41. அஹம் ந நிர்ஜித: பூர்வம் முநிபி: பாவிதாத்மபி:
மத் ஜயாய ப்ரவ்ருத்த: அபி ருத்ர: க்ரோதேந நிர்ஜித:

பொருள் – என்னை முனிவர்களாலும் எளிதில் வெல்ல இயலாது. ஆனால் ருத்ரன் என்னை வென்றான். ஆயினும் ருத்ரன் க்ரோதத்தால் வெல்லப்பட்டான்.

42. மயா நிர்ஜீயதே ஸர்வம் ஜகத் ஸ்தாவர ஜங்கமம்
ந ஜீயதே சேத்க்ரோதேந ஜீயதே நாத்ர ஸம்சய:

பொருள் – இந்த உலகில் உள்ள செடி, விலங்குகள் உட்பட அனைத்தையும் என்னால் எளிதில் வெல்ல இயலும். என்னால் வெல்லப்பட இயலாமல் இருக்கும் ஒருவன் தனது கோபத்தால் வெல்லப்படுவான் என்பதில் சந்தேகம் இல்லை.

43. மயாக்ரோத ஸஹாயேந ப்ரஹ்மா லோகபிதாமஹ:
பதி: பசூநாம் பகவாந் மஹேந்த்ரச்ச சதக்ருது:
44. வசீக்ருதா மஹாத்மந: கோ ந ஜாநாதி தா: கதா:
ஜிதஸ்ஸ: அஹம் த்வயா ராஜந் ஸ க்ரோதோ பத்ரமஸ்து தே

பொருள் – கோபத்தை வென்ற மன்மதனாகிய நான், உலகின் தந்தையான நான்முகன், சிவன், பகவான், இந்த்ரன் போன்ற அனைவரும் மஹாத்மாக்கள் ஆவோம். இவற்றை அறியாதவர்கள் யார்? அரசனே! இப்படிப்பட்ட கோபத்தையும் நீ இன்று வெற்றி கண்டாய்.

45. காம க்ரோத வசாஸ்ஸர்வே தேவர்ஷி பித்ரு தாநவ:
ஆவாமபி வசே விஷ்ணோர் தேவதேவஸ்ய சக்ரிண:

பொருள் – தேவர்கள், ரிஷிகள், மனிதர்கள் போன்ற அனைவரும் காமம் மற்றும் கோபம் ஆகியவற்றின் வசப்பட்டவர்களே ஆவர். நாம் இருவரும் கூட தேவர்களின் தேவனும், சக்ரத்தைக் கொண்டவனும் ஆகிய மஹாவிஷ்ணுவின் வசப்பட்டவர்கள் ஆவோம்.

46. ஸ த்வம் பகவதோ விஷ்ணோ: துல்ய: தத்பக்திபாவித:
அபீஷ்டஸித்திர்பவது தவ கச்சாமஹே வயம்

பொருள் - இக்ஷ்வாகுவாகிய நீ பகவான் விஷ்ணுவிடம் ஆழ்ந்த பக்தி கொண்டுள்ளாய். நீயும் அவன் போன்றே எங்களால் வசப்படுத்த இயலாதவனாக உள்ளாய். உன்னுடைய விருப்பங்கள் அனைத்தும் நிறைவேறட்டும். நாங்கள் இங்கிருந்து இப்போது புறப்படுகிறோம் – என்று மன்மதன் கூறி முடித்தான்.

47. இத்யுக்த்வா ப்ரயயுஸ்ஸர்வே தச்சாபய விஹ்வலா:
ஆசசக்ஷுரசேஷேண தேநாநாம் தஸ்ய சேஷ்டிதம்

பொருள் – மஹேச்வரன் நாரதரிடம் கூறத் தொடங்கினான்: மன்மதன் உள்ளிட்ட அனைவரும் அங்கிருந்து புறப்பட்டனர். அவர்கள் இக்ஷ்வாகு மன்னன் விஷயத்தில் எதனைச் செய்வதற்கும் பயம் கொண்டனர். அங்கு அவர்கள் மற்ற அனைத்து தேவர்களுக்கும் கூறினர்.

48. கதேஷு தேஷு ராஜர்ஷி: தபோபூய: ஸமாஸ்தித:
ஸ்ரீமத்ரங்கம் மஹத் தாமே இத்யுக்த்வா தூஷ்ணிம் அபூத்புந:

பொருள் – அவர்கள் அனைவரும் சென்ற பின்னர் ராஜரிஷி என்று கூறுவதற்குத் தகுதி அடைந்தவனாகிய இக்ஷ்வாகு மன்னன் மீண்டும் தவத்தில் ஆழ்ந்தான். இம்முறை அவன் "ஸ்ரீமத்ரங்கம் மஹத்தாம" என்று உச்சரித்தபடி தவத்தில் ஆழ்ந்தான்.

49. தஸ்ய தத் சரிதம் ச்ருத்வா சக்ர: ஸஹமருத்கணை:
ஐராவதம் ஸமாஸ்தாய தத் தபோவநம் ஆகதம்

Email:sridharan_book@yahoo.co.in

பொருள் – இவனுடைய சரிதம் முழுவதையும் இந்த்ரன் கேட்டறிந்தான். அவன் மருத்கணங்கள் புடை சூழ தனது யானையான ஐராவதத்தில் அமர்ந்து இக்ஷ்வாகு தவம் புரிகின்ற இடத்திற்கு வந்தான்.

50. ஸ த்ருஷ்ட்வா சக்ரம் ஆயந்தம் ஸமாதேர் விரதோ ந்ருப:
இந்த்ராய ஸ பரிவாராய ஆதித்யம் கர்த்துமுத்யத:

பொருள் – இந்த்ரன் வருவதை இக்ஷ்வாகு மன்னன் பார்த்தான். உடனே பரிவாரங்களுடன் வரும் இந்த்ரனை வரவேற்கத் தயாராக நின்றான்.

51. தஸ்ய த்ருஷ்ட்வா தபஸ்ஸித்தம் சக்ர: க்ரோத வசங்கத:
வஜ்ரம் ப்ராஸ்யந் நரேந்த்ராய வ்ருத்ராயேவ மஹாத்மந

பொருள் – அந்த மன்னனின் தவ ஸித்தியைக் கண்ட இந்த்ரன் மிகுந்த கோபம் கொண்டான். வ்ருத்தாஸுரன் மீது தனது வஜ்ராயுதத்தை எவ்விதம் எறிந்தானோ அது போன்று மஹாத்மாவான இக்ஷ்வாகு மீது தனது வஜ்ராயுதத்தை எறிந்தான்.

52. ஸ த்ருஷ்ட்வா வஜ்ரம் உத்க்ருஷ்டம் சதபர்வ சதக்ருதோ:
ஸ ஸ்மார சக்ரஹஸ்தஸ்ய சக்ரம் சத்ருவிதாரணம்

பொருள் – நூறு மலைகளையும் ஒரே நொடியில் நூறு துண்டுகளாக்கவல்ல வஜ்ராயுதம் தன்னை நோக்கி வருவதை இக்ஷ்வாகு மன்னன் பார்த்தான். உடனே அவன், எப்படிப்பட்ட விரோதிகளை கிழித்து எறியவல்லதான சக்கரம் ஏந்திய திருக்கரம் கொண்ட விஷ்ணுவின் சக்ராயுதத்தை எண்ணி த்யானித்தான்.

53. அந்தரா சக்ரம் ஆயாந்தம் தஸ்ய வஜ்ரம் அசீசமத்
தந்மோகம் ந்யவதத் பூமௌ ஸ வ்ரீட: அபூத் புரந்தர:

Email:sridharan_book@yahoo.co.in

பொருள் – உடனடியாக அந்தச் சக்கராயுதம் வருவதை உணர்ந்த வஜ்ராயுதம் மயக்கம் கொண்டது போன்று பயந்து தரையில் விழுந்தது. அது உபயோகம் அற்ற பொருளாகப் பூமியில் விழுந்ததைக் கண்ட இந்த்ரன் மிகுந்த வெட்கம் அடைந்தான்.

54. ஸ வஜ்ரம் விததீபூதம் த்ருஷ்ட்வா தேவை: ஸமந்வித:
ஸ தநம் ப்ரஹ்மணோ கத்வா தஸ்மை ஸர்வம் ந்யவேதயதி

பொருள் – இப்படியாகத் தனது வஜ்ராயுதம் பலனற்றுப் போனதைக் கண்ட இந்த்ரன், அங்கிருந்து புறப்பட்டு நான்முகன் உள்ள இடத்திற்குச் சென்றான். அவனிடம் அனைத்தையும் கூறினான்.

55. ச்ருத்வா அஜ: தஸ்ய சரிதம் தைவதைரநுவர்ணிதம்
தஸ்ய ப்ரபாவம் இஷ்டம் ச ஜ்ஞாதும் லோகபிதாமஹ:

பொருள் – இந்த்ரன் கூறிய அனைத்தையும் நான்முகன் பொறுமையாகக் கேட்டான். அவர்கள் அங்கு நடந்ததை வர்ணித்ததையும் கேட்டான். அந்த அரசனின் ப்ரபாவம் முழுவதையும் உலகின் பாட்டனான நான்முகன் கேட்டறிந்தான்.

56. நிமீலிதாஷ்டநயநோ யுயோஜாத்மானம் ஆத்மநி
ஸ்ரீரங்க நயநே சித்தம் உத்யுக்தம் தஸ்ய பூப்ருத:
ஜ்ஞாத்வா சதுர்முகோ ப்ரஹ்மா யோகயுக்தோ முமோஹ வை

பொருள் – உடனே நான்முகன் தனது எட்டு கண்களையும் மூடியபடி தனது மனதில் பரமாத்மாவான ஸ்ரீமந்நாராயணனை த்யானித்தான். உடனடியாக இக்ஷ்வாகு மன்னன் ஸ்ரீரங்கவிமானத்தைக் கொண்டு செல்வதற்காகவே தவம் இயற்றுவதை அறிந்தான். இப்படியாக அந்த மன்னனின் எண்ணத்தை அறிந்த நொடியிலேயே நான்முகன் மயக்கம் அடைந்தவன் போன்று ஆனான்.

57. க்ஷணேந ஆச்வாஸ்ய ஸ ஜ்ஞாநவாந் ஸஹதேவை:
பிதாமஹ: ஸ்ரீரங்கத்தாம யத்ர சேதே ச்ரிய:பதி:

Email:sridharan_book@yahoo.co.in

பொருள் – உடனே ஒரு நொடிப்பொழுதில் மீண்டும் தனது சுய நினைவை அடைந்தான். மிகுந்த ஞானம் கொண்ட அந்த நான்முகன் உடனே தேவர்கள் புடைசூழ, மஹாலக்ஷ்மியின் நாயகனாகிய ஸ்ரீரங்கநாதன் கண்வளர்கின்ற ஸ்ரீரங்கவிமானம் (ஸத்யலோகத்தில்) உள்ள இடத்திற்கு விரைந்தான்.

58. தேவோ தேவேந்த்ர ஸஹிதம் த்ருஷ்ட்வா தேவம்
பிதாமஹம் க்ருதாஞ்ஜலிபுடம் தீநமேவமாஹ ஜநார்த்தந:

பொருள் – தேவர்கள், இந்த்ரன் ஆகியோர் புடைசூழ தன்னிடம் வந்த நான்முகனை ஜநார்த்தனன் கண்டான். குவித்த கரங்களுடன் அவர்கள் நிற்பதையும் நோக்கினான். அவர்கள் முகத்தில் கலக்கத்தையும் கண்டான்.

59. ப்ரஹ்மந் அஹம் ப்ரஸந்ந: அஸ்மி தவ த்வம் மா விஷீததா:
மயா ஸங்கல்பிதம் பூர்வம் புராணார்த்தம் இமம் ச்ருணு

பொருள் – நான்முகனிடம் ஸ்ரீரங்கநாதன் உரைக்கத் தொடங்கினான்: நான்முகனே! உன்னைக் கண்டு நான் மகிழ்ந்தேன். நீ வருத்தம் கொள்ளாதே. என்னால் முன்பே ஸங்கல்பம் செய்யப்பட்ட விஷயங்களை நான் இப்போது கூறக் கேட்பாயாக.

60. த்வய அர்ச்சித: அஹம் அதுநா ஸ்ரீரங்கே தாம்நி பங்கஜ
அயோத்யாம் கந்தும் இச்சாமி ரகுபி: பரிபாலிதாம்

பொருள் – இந்த ஸத்யலோகத்தில் உள்ள ஸ்ரீரங்கத்தில் நான் உன்னால் ஆராதிக்கப்படுகிறேன். நான் அயோத்திக்குச் செல்ல விருப்பம் கொண்டுள்ளேன். அங்கு ரகுவம்சத்தைச் சேர்ந்த அரசர்கள் என்னை ஆராதிப்பார்கள்.

61. தே மாம் தத்ர அர்ச்சயிஷ்யந்தி சதுர்யுக சதுஷ்டயம்
தத: பரம் ப்ரயாஸ்யாமி காவேரீம் சோளபாலிதாம்

பொருள் – இப்படியாக அவர்களால் ஆராதிக்கப்பட்டபடி உள்ள நான், அங்கு பல யுகங்கள் இருப்பேன். பின்னர் நான் அங்கிருந்து புறப்பட்டு காவேரி நதியின் கரைக்கு வருவேன். அங்குள்ள சோழ மன்னர்களால் ஆராதிக்கப்படுவேன்.

62. சந்த்ரபுஷ்கரிணீதீரே சயிஷ்யே அஹம் சதுர்முக
ஸப்த மந்வந்தரம் ஸ்தித்வா தத்ராஹம் திவஸக்ஷயே
63. தவ அந்திகம் உபேஷ்யாமி ததா த்வம் ம அர்ச்சயிஷ்யஸி
விமாநே அஸ்மிந் அநேநைவ விக்ரஹேண சதுர்முக

பொருள் – நான்முகனே! நான் காவேரியின் கரையில் உள்ள சந்த்ரபுஷ்கரிணீ என்னும் தடாகத்தின் கரையில் கண்வளர்ந்தபடி இருப்பேன். இப்படியாக அங்கு ஏழு மந்வந்தரங்கள் இருப்பேன். பின்னர் நான்முகனின் காலம் முடியும்போது, அங்கிருந்து புறப்பட்டு உன்னிடம் வந்துவிடுவேன். அதன் பின்னர், அதே விமானம், அதே விக்ரஹம் என்றுள்ள என்னை, அடுத்த நான்முகன் அர்ச்சிதபடி இருப்பான்.

64. கதாகதம் கரிஷ்யாமி தவைததபி ரோசதாம் த்ரிலோகம்
அர்ச்சிதஸ்ஸ: அஹம் த்வய அஸ்மிந்நேவ விக்ரஹே

பொருள் – ஆக இப்போது நான் இங்கிருந்து புறப்படுவதற்கும், மீண்டும் திரும்புவதற்கும் என்ன செய்யவேண்டுமோ அந்தச் செயல்களைச் செய்யப்போகிறேன். இவை உனக்கு ஏற்புடையதாகவே இருக்கும். உன்னால் ஆராதிக்கப்பட்ட விக்ரஹமாகிய நான் இனி மூன்று உலகங்களாலும் ஆராதிக்கப்படுவேன்.

65. தவ முக்திம் ப்ரதாஸ்யாமி த்விபரார்த்தே கதி ஸதி
ஏகாஹம் அர்ச்சநம் யத்ர ப்ரதிமாயாம் ந வித்யதே
66. மஹாந்தோஷ: ஸம்பவித ப்ராயச்சித்தம் ததா பவேத்

பொருள் – உனது ஆயுட்காலம் என்று முடிகிறதோ அன்று, உனக்கு நான் முக்தி அளிப்பேன். எந்த ஒரு விக்ரஹத்துக்கும், ஏதேனும் ஒருநாள் ஆராதனைகள்

தடைப்பட்டாலும், அது மிகவும் பெரிய தோஷம் ஆகும். அதற்கான பிராயச்சித்தங்கள் நிச்சயம் செய்யப்படவேண்டும்.

67. ஷண்மாஸாப்யந்தரே லுப்த பூஜாஸு ப்ரதிமாஸு ச
புந: ப்ரதிஷ்டோ கர்த்தவ்யேத்யாஹு: ஸாத்வத வேதிந:

பொருள் – ஏதேனும் ஒரு விக்ரஹத்திற்கு ஆறுமாத காலம் பூஜைகள் தடைப்பட்டிருந்தால், அந்த விக்ரஹத்தை மீண்டும் ப்ரதிஷ்டை செய்யவேண்டும். அதன் பின்னர் பூஜைகள் செய்யவேண்டும். இப்படியாகவே ஸாத்வத ஸம்ஹிதை அறிந்தவர்கள் கூறுவர்.

68. த்வாதஸரப்ரமாணே த்ரைகால்ய அபி அர்ச்சநம் மம
க்ரியதே ஸர்வதா தஸ்மாத் லுப்த தோஷ ந வித்யதே
69. ப்ராயச்சித்தம் ந கர்த்தவ்யம் ந ப்ரதிஷ்டா ச பங்கஜ
ஸ்வயம்வ்யக்த: அஸ்மி பூஜா ச க்ரியதே பவதாந்வஹம்

பொருள் – இங்கு நான் இருந்த காலம் முடிய அன்றாடம் எனக்கு மூன்று காலங்களிலும் எந்தவிதமான தடையும் இன்றி பூஜைகள் செய்யப்பட்டன. ஆகவே எனது பூஜையில் எந்தவிதமான தோஷமும் இங்கு உண்டாகவில்லை. எனவே நீ எந்தவிதமான பிராயச்சித்தமோ அல்லது மறு ப்ரதிஷ்டையோ செய்யவேண்டிய அவசியம் இல்லை. தாமரையில் உள்ள நான்முகனே! நான் இந்த விக்ரஹத்தில் ஸ்வயம்வ்யக்தமாக (தானாகவே தோன்றிய) உள்ளேன். நீ எனக்கு அன்புடன் பூஜைகள் செய்துவந்தாய்.

70. திவ்யே ஸித்தே மாநுஷே ச மம பிம்பே சதுர்முகே
தத்ர ஸாங்கர்யதோஷேஷு ப்ராயச்சித்தம் விதீயதே

பொருள் – எனது விக்ரஹங்கள் தேவர்களாலும், ஸித்தர்களாலும், மனிதர்களாலும் செய்யப்பட்டு ப்ரதிஷ்டை செய்யப்படலாம். அந்த விக்ரஹங்களுக்குச் சரிவர பூஜைகள் செய்யவில்லை என்றால் ஸாங்கர்யதோஷம் ஏற்படும். அதற்கான பிராயச்சித்தம் செய்யவேண்டும்.

71. ந தத்ர ஸங்கரோ தோஷோ ந ந்யூநாப்யதிகேஷு ச
சுபமேவ மநுஷ்யாணாம் ஸ்ரீரங்கே விததாம்யஹம்

பொருள் – நான் ஸ்ரீரங்கவிமானத்தில் உள்ள இந்த நிலையில் அனைவருக்கும், அனைத்து மனிதர்களுக்கும் நல்லதையே செய்வேன். ஆகவே இதனைப் பொறுத்தவரை ஸாங்கர்ய தோஷம் போன்ற எதுவும் இல்லை.

72. தஸ்மாத் இக்ஷ்வாகவே ப்ரஹ்மந் தேஹி ரங்கமநுத்தமம் த்வயி
அர்ச்சித: அஹம் ராத்ரௌ ச ஸ்ரீரங்கம் த்வாம் உபைஷ்யதி

பொருள் – நான்முகனே! இப்படிப்பட்ட உயர்ந்த இந்த ஸ்ரீரங்கவிமானம் உன்னால் இக்ஷ்வாகு மன்னனுக்கு அளிக்கப்படட்டும். உன்னால் ஆராதிக்கப்பட்ட இந்த விக்ரஹத்தில் நான் முழுமையாக உள்ளேன்.

73. இத்யுக்தோ ஹரிணா ப்ரஹ்மா ஸ்ரீரங்கம் தாம வைஷ்ணவம்
தாக்ஷ்யமூர்த்நி ஸமாரோப்ய ஹம்ஸமாருஹ்ய ச ஸ்வயம்
யயௌ தபோவநம் தத்து யத்ர ராஜா வ்யவஸ்தித:

பொருள் – மஹேச்வரன் நாரதரிடம் கூறத் தொடங்கினார் – இப்படியாக ஸ்ரீஹரியால் கூறப்பட்ட நான்முகன் மஹாவிஷ்ணு வசிக்கின்ற அந்த ஸ்ரீரங்கவிமானத்தை கருடனின் மேல் வைத்தான். தான் தனது வாகனமான அம்சத்தின் மீது அமர்ந்தான். பின்னர் அங்கிருந்து அவனும், ஸ்ரீரங்கவிமானத்துடன் கருடனும் புறப்பட்டு இக்ஷ்வாகு தவம் செய்கின்ற வனத்திற்கு வந்தனர். அவர்களை இக்ஷ்வாகு வரவேற்றான்.

74. தேநாதி ப்ரீதமநஸா ஸத்க்ருத: ஸாரஸாஸந: தஸ்மை
ப்ராதாந் மஹத்தாம ஸ்ரீரங்கம் ப்ரணவாக்ருதிம்

பொருள் – அந்த அரசன் மிகவும் ப்ரியத்துடனும், மரியாதையுடனும், நட்புடனும் நான்முகனை வரவேற்றான். அப்போது நான்முகன் மிகவும் உயர்ந்ததான ப்ரணவாக்ருதி ஸ்ரீரங்கவிமானத்தை இக்ஷ்வாகு மன்னனுக்கு அளித்தான்.

ஸ்ரீமத்ப்ரஹ்மாண்ட புராணத்தில் உள்ள ஸ்ரீரங்கமாஹாத்ம்யத்தின் ஏழாம் அத்யாயம் ஸம்பூர்ணம்

அத்யாயம் – 8 – காவேரியின் கரையில் ஸ்ரீரங்கவிமானம்

1. லப்த்வா விமாநம் ஸ்ரீரங்கம் இக்ஷ்வாகுச்சிரஸா ததத்
அப்யுத்கத: பௌரஜநை: அயோத்யாம் ப்ரவிசத்புரீம்

பொருள் – இப்படியாக இக்ஷ்வாகு மன்னன் நன்முகனிடமிருந்து ஸ்ரீரங்கவிமானத்தைப் பெற்றான். அதனைத் தனது தலையின் மீது வைத்துக்கொண்டான். அப்படியே அயோத்திக்கு வந்தான். அங்கு அயோத்தியின் மக்கள் அனைவரும் சேர்ந்து நின்று அரசனையும் ஸ்ரீரங்கவிமானத்தையும் வரவேற்றான்.

2. உத்தரஸ்ய புரத்வாரஸ்ய உதக்ரோசார்த்த கோசரே
ஸரயு வா தமஸாயாச்ச மத்யதேசே ஸமே சுபே
3. அயோத்யாபிமுகம் ரங்கம் ப்ரதிஷ்டாப்ய யதாவிதி
அலஞ்சகார ப்ரகார ப்ரபாமண்டப கோபுரை:

பொருள் – அயோத்தியின் வடதிசையில், சுமார் அரை க்ரோச தூரத்தில் (3500 அடிகள்), ஸரயு மற்றும் தமஸா என்னும் இரு நதிகளின் நடுவில் இருக்கின்ற இடத்தில், சுபமான நேரத்தில், அயோத்தி நகரத்தை ஸ்ரீரங்கநாதன் பார்க்கும்விதமாக, சாஸ்த்ரங்களில்

Email:sridharan_book@yahoo.co.in

கூறப்பட்ட விதிகளின்படி ப்ரதிஷ்டை செய்தான். பின்னர் அந்த விமானத்தைச் சுற்றிலும் ப்ராகாரங்கள், மண்டபங்கள், கோபுரங்கள் என்று எழுப்பி அலங்காரம் செய்தான்.

4. ப்ராஹ்மணைரபி பூயிஷ்டை: அர்ச்சகை: பரிசாரகை:
அந்யைச்ச வேதத‌த்வஜ்ஞை: கரோதாக்ருதம் ந்ருப:

பொருள் – அந்த ஸ்ரீரங்கத்தைச் சுற்றி அந்தணர்கள், அர்ச்சகர்கள், உதவிக்கு ஆட்கள், வேத பண்டிதர்கள் என்று பலரையும் குடி அமர்த்தினான். இப்படியாக அந்த அரசன் செய்யவேண்டிய அனைத்தையும் செய்தான்.

5. குரோர் வசிஷ்டஸ்ய ததா ஜாபாலே: கச்யபஸ்ய ச
வாமதேவஸ்ய சாவாஸம் தத்ர சக்ரே மஹீபதி:

பொருள் – ஸ்ரீரங்கத்தின் அருகில் குருவாகிய வசிஷ்டர், ஜாபாலி, காச்யபர், வாமதேவர் போன்றவர்கள் வசிப்பதற்கான அனைத்து ஏற்பாடுகளையும் அந்த அரசன் செய்தான்.

6. நித்யை: நைமித்திகை: ச அந்யை: கர்மபி: சாஸ்த்ரசோதிதை:
வசிஷ்டஸ்ய மதே ஸ்தித்வா ராஜா தேவமுபாசரத்

பொருள் – நித்ய, நைமித்திக கர்மங்கள் உட்பட மற்ற கர்மங்கள் அனைத்தும் சாஸ்த்ர விதிகளின்படி சரிவர நடந்தன. வசிஷ்டரின் வழிகாட்டுதலின் மூலமாக இக்ஷ்வாகு மன்னன் ஸ்ரீரங்கநாதனுக்கு நேர்த்தியாக ஆராதனை செய்துவந்தான்.

7. பால்குநே மாஸு தேவஸ்ய நக்ஷத்ரே பகதைவதே
உத்ஸவ அவப்ருதம் சக்ரே புத்ர பௌத்ரை: ஸமந்வித:

பொருள் – பங்குனி மாதம், ரோஹிணி நக்ஷத்திரத்தில் ப்ரஹ்மோத்ஸவத்தை மிகவும் நேர்த்தியாக தனது புத்திரர்கள் மற்றும் பேரன்கள் புடைசூழ நடத்தி மகிழ்ந்தான்.

 Email:sridharan_book@yahoo.co.in

8. தத் வம்ச்யைரபி பூபாலைச்சதுர்யுக சதுஷ்டயம்
அர்ச்சிதோ பகவாந் ரங்கீ ச்ரத்தா பக்தி புரஸ்ஸரம்

பொருள் – இக்ஷ்வாகு மன்னனுக்குப் பிறகு அவன் வம்சத்தில் வந்த பல அரசர்களாலும் ஸ்ரீரங்கநாதன் மிகவும் ச்ரத்தையுடனும், பக்தியுடனும் ஆராதிக்கப்பட்டு வந்தான்.

9. த்ரேதாயுகே பஞ்சமே து ராஜா தசரதோ ந்ருப:
புத்ரார்த்தம் அச்வமேதேந யஷ்டும் ஸமுபசக்ரமே

பொருள் – அந்த இக்ஷ்வாகு குலத்தில் ஐந்தாவது த்ரேதா யுகத்தில், தசரதன் என்னும் மன்னன் தோன்றினான். அந்த தசரதச் சக்ரவர்த்தி பிள்ளைப்பேறு வேண்டி அச்வமேத யாகம் ஒன்றைச் செய்தான்.

10. தத்ர ஸர்வே ஸமாயாதா: ப்ருதிவ்யாம் யே மஹீக்ஷித:
சோளேஷு தர்மவர்மேதி விக்யாதோ தர்மவத்ஸல:

பொருள் – அந்த யாகத்திற்கு உலகில் உள்ள அனைத்து அரசர்களும் அழைக்கப்பட்டனர். அவர்களில் தர்மத்தின் மீது மிகவும் ஈடுபாடு கொண்டவனும், சோழ அரசனும் ஆகிய தர்மவர்மன் என்பவன் இருந்தான்.

11. ஐக்ஷ்வாகேண ஸமாஹூதோ யஜ்ஞார்த்தம் ராஜஸத்தம:
அயோத்யாம் ஆகத: அபச்யத்யத்ர ரங்கம் வ்யவஸ்திதம்

பொருள் – இக்ஷ்வாகு வம்சத்தில் வந்த தசரதன் இயற்றும் யாகத்தில் கலந்து கொள்ளும் பொருட்டு தர்மவர்மன் ஸ்ரீரங்கவிமானம் ப்ரதிஷ்டை செய்யப்படிருந்த அயோத்திக்கு வந்தான்.

12. தத்ர பூஜாவிதாநம் ச ஸர்வாச்வைவார்த்த ஸம்பத:
ராஜ்ஞோ யஜ்ஞ ஸம்ருத்திம் ச த்ருஷ்ட்வா புத்திமதாகரோத்

பொருள் – அங்கு அனைத்துவிதமான பூஜைகளும், அனைத்துவிதமான ஐச்வர்யங்களும் நிரப்பியுள்ளதைக் கண்டான். மேலும் தசரதன் யஜ்ஞத்தை மிகவும் ச்ரத்தையுடனும், புத்தியைத் திசை திருப்பாமலும் செய்வதைத் தர்மவர்மன் பார்த்தான்.

13. இக்ஷ்வாகுணா தபஸ்தப்த்வா லப்தம் ஸ்ரீரங்கம் உத்தமம்
தத் ப்ரபாவாதியம் தேஷாம் விபூதிர் விஸ்த்ருதா புவி

பொருள் – தர்மவர்மன் தனது மனதில் பின்வருமாறு எண்ணினான். இக்ஷ்வாகு மஹாராஜா மிகவும் கடுமையான தவம் இயற்றி இந்த ஸ்ரீரங்கவிமானத்தை அயோத்திக்குப் பெற்று வந்துள்ளார்; இந்த விமானம் இங்கே உள்ளதால் இவர்களின் குலத்திற்கும், அயோத்திக்கும் மிகுந்த செல்வம் நிலையாக உள்ளது.

14. அஹம் ததா தபஸ்தப்ஸ்யே யதா ஸ்ரீரங்கம் உத்தமம்
அஸாதாரணம் அஸ்மாகம் பவேத் போக அபவர்கதம்

பொருள் – நானும் அவரைப் போன்றே தவம் இயற்றுவேன். அப்போது மிகவும் உயர்ந்ததும், அஸாதாரணமானதும் ஆகிய ஸ்ரீரங்கம் எனக்கும் கிட்டும். அந்த விமானம் எங்களுக்கும் மோக்ஷம் மற்றும் பல செல்வங்களையும் அளிக்கும்.

15. இதி நிச்சித்ய யஜ்ஞாந்தே ஸ்வதேசம் புநராகத:
சந்த்ரபுஷ்கரிணீ தீரே தபஸ்தப்தும் உபாக்ரமாத்

பொருள் – இப்படியாக தர்மவர்மன் முடிவு செய்தான். தசரதனின் யஜ்ஞம் முடிந்தவுடன் அவன் தனது இருப்பிடத்திற்குத் திரும்பினான். அங்குள்ள சந்த்ரபுஷ்கரிணீ என்னும் தடாகத்தின் கரையில் அமர்ந்து தவம் இயற்றத் தயாரானான்.

16. தத்ரத்யா முநயோ த்ருஷ்ட்வா தம் ந்ருபம் முநிஸத்தம
இதமூசு ரநூசாநா: தபஸே க்ருத நிச்சயம்

பொருள் – அப்போது அங்கு பல முனிவர்கள் இருந்தனர். அவர்கள் மிகுந்த உறுதியுடன் வந்த தர்மவர்மனைக் கண்டனர். அவனிடம் அவர்கள் பின்வருமாறு உரைத்தனர்.

17. கிமர்த்தம் த்வம் மஹாராஜ தபஸ் தப்ஸ்யஸி ஸுவ்ரத
ந பச்யாமச்ச தே கிஞ்சித் அஸித்தம் அபிவாந்திதம்

பொருள் – அந்த முனிவர்கள் தர்மவர்மனிடம், "அரசனே! நீ எந்தக் காரணத்திற்காகத் தவம் இயற்றுகிறாய்? நீ தொடங்கிய எந்த ஒரு சிறு செயலையும் முடிக்காமல் விட்டு நாங்கள் பார்த்தது கிடையாது. உன்னுடைய செயல்கள் அனைத்தையுமே நீ முடித்துள்ளாய்", என்றனர்.

18. ஸ்ரீமத்ரங்கம் மஹத்தாம ஸ்வயம்வ்யக்தம் ச்ரிய:பதே:
ஆநேதும் அஹம் இச்சாமி புண்யேந ஸ்வேந கர்மணா

பொருள் – தர்மவர்மன் அந்த முனிவர்களிடம், "எனது தவம் மூலமாக மிகவும் புண்ணியமானதும், தானாகவே தோன்றியதும், மஹாலக்ஷ்மியின் நாயகனாகிய ஸ்ரீரங்கநாதனின் இருப்பிடமும் ஆகிய ஸ்ரீரங்கவிமானத்தை இங்கு கொண்டுவர விருப்பம் கொண்டுள்ளேன். எனது புன்னிய கர்மங்களின் விளைவால் இது கைகூடும்", என்றான்.

19. யதா ப்ரஹ்மா யத் இக்ஷ்வாகுஸ் ததா லோகஹிதாய வை
யதிஷ்யே அஹம் மஹாபாகா பகவத்பிச்ச அநுமந்யதாம்

பொருள் – மேலும் தர்மவர்மன் அந்த முனிவர்களிடம், "இந்த உலகின் நன்மைக்காக இக்ஷ்வாகு மன்னன் நான்முகனிடமிருந்து ஸ்ரீரங்கவிமானத்தைப் பெற்றான். அதே போன்று நானும் இந்த உலகின் நன்மைக்காக ஸ்ரீரங்கவிமானத்தைப் பெற தவம் இயற்றுகிறேன். இதற்கு நீங்கள் அனுமதி தரவேண்டும்", என்றான்.

20. அலம் தே தபஸா ராஜந் ஸித்தம் இஷ்டம் விசிந்தய
உஜ்ஜித்வா தாபஸம் தேஷம் புராணார்த்தம் இமம் ச்ருணு

பொருள் – அந்த முனிவர்கள் தர்மவர்மனிடம் கூறத் தொடங்கினார்கள். இந்த இடத்தில் நீ தவம் செய்யவேண்டிய அவசியம் இல்லை. உனது விருப்பம் நிறைவேறியது என்றே கொள்வாயாக. தவத்தின் பொருட்டு நீ அணிந்த இந்த ஆடைகளை அகற்றுவாயாக. நாங்கள் கூறப்போகும் புராணச் செய்தியைக் கேட்பாயாக – என்று கூறத் தொடங்கினர்.

21. இத உத்தரத: க்ரோசமாத்ரே சைவ மஹீபதே
யுஷ்மத் புராதநபுரீ வித்யதே ஸ்தாந சோஷிதா

பொருள் – இங்கிருந்து வடதிசையில் ஒரு க்ரோச தூரத்தில் ஒரு புராதான நகரம் இருந்தது (இது நிசுளாபுரி என்பதாகும்). அந்த நகரம் இப்போது அழிக்கப்பட்ட நிலையில் உள்ளது. ஒரு சிறிய இடம் மட்டுமே இப்போது எஞ்சியுள்ளது.

22. யத்ர பூர்வம் மஹாதேவ: க்ருத்தோ யுஷ்மத் புராதநம்
பஸ்மாவசேஷம் அகரோத் ப்ரத்யும்நமிவ சக்ஷுஷா

பொருள் – அந்த இடத்தில் உனது வம்சத்தவர்களுக்கு உரிய மூலபுருஷனை சிவன் கோபம் கொண்டு எரித்தான். மன்மதனை எவ்விதம் தன்னுடைய மூன்றாவது கண் கொண்டு எரித்தானோ அது போன்று எரித்தான்.

23. தாம் உத்தரேண விதித: ஸத்யதர்மேதி ஸம்ஜ்ஞயா
ஹிரண்யகேசிநோ தால்ப்யஸ்யாச்ரம: பாபநாசந:

பொருள் – அந்த இடத்திலிருந்து வடக்கே சிறிது தூரத்தில் ஸத்யதர்மம் என்னும் ஆச்ரமம் இருந்தது. அது ஹிரண்யகேசி என்பவரின் ஆச்ரமம் ஆகும். அவர் எப்படிப்பட்ட பாவத்தையும் நாசமாக்க வல்லவர் ஆவார்.

24. புலத்ஸ்ய சிஷ்யஸ்ய முநே: புண்யசீலஸ்ய பூபதே
தத்ராஸாமாஸிம வயம் கச்மிச்சித்காரணாந்தரே

பொருள் – அவர் புலத்ஸ்ய முனிவரின் சீடர் ஆவார். மிகவும் புண்ணியசீலரான அவர் ஒரு முனிவரின் பாவங்களைக் கூட எரித்துவிடும் தவவலிமை கொண்டவர் ஆவார். அந்த ஆச்ரமத்தில் நாங்கள் அனைவரும் ஏதோ ஒரு காரணத்திற்காகத் தங்க நேரிட்டது.

25. தத உத்தரத: பச்சாத் நீலிவநம் இதி ச்ருதம்
தத்ர வ்யாக்ராஸுரம் ஹத்வா பகவாந் பூதபாவந:

பொருள் – அங்கிருந்து மேலும் வடக்கு நோக்கிச் சென்றால், சற்று தொலைவில் நீலிவனம் என்னும் பக்தி உள்ளது. அங்குதான் ஸ்ரீமந்நாராயணன், வ்யாக்ராஸுரன் என்னும் அசுரனை வதம் செய்தான்.

26. தேவை: பரிவ்ருத: ஸர்வை: தால்ப்யஸ்ய ஆச்ரமம் ஆவிசத்
தால்ப்யேந அபி அர்ச்சித: தத்ர ஸம்யகர்க்க புரஸ்ஸரம்
அஸ்மாபிச்ச ஸ்துதோ தேவோ பக்த்யா ஸூக்தைச்ச வைஷ்ணவை:

பொருள் – அதன் பின்னர் ஸ்ரீமந்நாராயணன் தேவர்களுடன் சேர்ந்து அங்கிருந்த தால்ப்யர் என்பவரின் ஆச்ரமத்தை அடைந்தான். அந்த தால்ப்யர் என்பவர் பரமாத்மாவை அர்க்யம் போன்றவை அளித்து சிறப்பாக ஆராதித்தார். அங்கிருந்த முனிவர்களும், நாங்களும் பலவிதமான ஸூக்தங்கள் மூலம் ஸ்ரீமந்நாராயணனைத் துதித்தோம்.

27. அப்யர்த்தித: ததாஸ்மாபி: தால்ப்யேந ச மஹீபதே
நித்யவாஸம் குருஷ்வாத்ரே த்யாதரேண புந: புந:

பொருள் – நாங்கள் அனைவரும் தால்ப்ய முனிவருடன் சேர்ந்து ஸ்ரீமந்நாராயணனை அங்கேயே வசிக்கும்படி மீண்டும் மீண்டும் வேண்டியபடி நின்றோம்.

28. உவாச ப்ரீயமாணேந வசநேந ஜநார்த்தந:
29. அசிரேணைவ காலேந பவதாம் ஹிதகாம்யயா
ஆகமிஷ்யாமி காவேர்யாம் சந்த்ரபுஷ்கரிணீ தடே

பொருள் – நாங்கள் வேண்டி நின்றதைக் கண்ட ஸ்ரீமந்நாராயணன் எங்களிடம் அன்புடன் கூறத்தொடங்கினான் – உங்கள் அனைவரின் நன்மைக்காக நான் கூடிய விரைவில் காவேரியின் கரையில் உள்ள சந்த்ரபுஷ்கரிணீ என்னும் தாடகத்தினருகில் வருவேன்.

30. ராவணே நிஹதே பாபே மயா ராகவரூபிணா
விபீஷணாபதேசேந ஸ்ரீரங்கம் தாம மாமகம்

பொருள் – நான் இராமனாக அவதாரம் எடுப்பேன். அப்போது என்னால் இராவணன் என்னும் பாவம் செய்த அஸுரன் அழிக்கப்படுவான். அதன் பின்னர், விபீஷணன் என்பவனைக் காரணமாகக் கொண்டு, எனது இருப்பிடமான ஸ்ரீரங்கம் அந்த இடத்திற்கு வந்துவிடும்.

31. சந்த்ரபுஷ்கரிணீதீரே ஸஹஸ்ய ஜாயாஸ்து ஸைகதே
அநந்தபீடே ஸ்ரீரங்கம் யூயம் த்ரக்ஷ்யத மா சிரம்

பொருள் – காவேரி நதியின் கரையில் உள்ள சந்த்ரபுஷ்கரிணீ என்னும் தடாகத்தின் அருகில் உள்ள சேஷபீடத்தில் ஸ்ரீரங்கவிமானம் கூடிய விரைவில் வருவதை நீங்கள் காணப்போகிறீர்கள் – என்று உரைத்தான்.

32. இத்யுக்த்வா ப்ரயயௌ தேவோ தேவைரநுகதோ ஹரி:
அஸ்மாபி: அநுயாதச்ச யாவத் ஆதித்யமண்டலம்

பொருள் – தர்மவர்மனிடம் பேசிக் கொண்டிருந்த முனிவர்கள் அவனிடம், “பரமாத்மா இப்படியாகக் கூறினான். அதன் பின்னர் அந்த ஸ்ரீஹரி தேவர்களுடன் புறப்பட்டான். அவனுடன் முனிவர்களாகிய நாங்களும் சூரியமண்டலத்திற்குச் சென்றோம்”, என்று கூறத் தொடங்கினர்.

33. தத: ப்ரதி நிவ்ருத்தாம்ச்ச த்ருஷ்ட்வாஸ்மாந் பவதாம் குரு:
இதமாஹ மஹாதேஜா ஆதித்யோ பகவாந் ந்ருப

பொருள் – இப்படியாக முனிவர்களாகிய நாங்கள் சூரியமண்டலத்திற்குச் சென்றுவிட்டு பூமிக்குத் திரும்பினோம். அப்போது எங்கள் அனைவரையும் உன்னுடைய வம்சத்தின் குருவும், மிகுந்த ஒளியைக் கொண்டவனும் ஆகிய சூரியன் நோக்கினான். அவன் எங்களிடம் பின்வருமாறு உரைக்கத் தொடங்கினான்.

34. ஆராதிதோ மயா பூர்வம் ப்ரஹ்மலோகே ஜகத்பதி:
ஸ்ரீரங்கசாயநோ தேவோ மயா சாப்யர்த்திதஸ்ததா

பொருள் – எங்களிடம் ஆதித்யன் உரைக்கத் தொடங்கினான்: முன்பு ஒரு காலத்தில் ப்ரஹ்மலோகத்தில் இந்த உலகின் நாயகனாகிய ஸ்ரீரங்கநாதனை நான் ஆராதித்து வந்தேன். அப்போது அவனிடம் பின்வருமாறு விண்ணப்பித்தேன்.

35. மத் வம்சஜை: புத்ரபௌத்ரை: நித்யம் ஆராத்யதாம் பவாந்
ததாநீம் அப்ரவீத் தேவம் ப்ரஸந்நோ ரங்கராட் ஸ்வயம்

பொருள் – என்னுடைய வம்சத்தில் தோன்றும் எனது புத்திரர்கள், பேரன்கள் ஆகியவர்களால் நீ அன்றாடம் ஆராதிக்கப்படவேண்டும் என்று விண்ணப்பித்தேன். இதனைக் கேட்டு மகிழ்ந்த ஸ்ரீரங்கநாதன் பின்வருமாறு உரைக்கத் தொடங்கினான்.

36. அயோத்யாயாம் பவத்வம்ச்யை: காவேர்யாம் ச திவாநிசம்
அர்ச்சித: அஹம் பவிஷ்யாமி நரை: அந்யைச்ச மாமகை:

பொருள் – ஸ்ரீரங்கநாதன் சூரியனான என்னிடம் உரைக்கத் தொடங்கினான்: நான் அயோத்தியில் எழுந்தருளும்போது சூரியனாகிய உனது வம்சத்தில் தோன்றியவர்களாலும், காவேரி நதிக்கரையில் உள்ளபோது மற்றவர்களாலும் பகலும் இரவும் தொடர்ந்து ஆராதிக்கப்படுவேன்.

37. கலௌ து பாப பூயிஷ்டே கதிசூந்யேஷு தேஹேஷு
ஸுலப: அஹம் பவிஷ்யாமி ஸர்வேஷாம் ஹிதகாம்யயா

Email:sridharan_book@yahoo.co.in

பொருள் – கலியுகத்தில் பலரும் பாவங்கள் மற்றும் துன்பங்களின் எல்லையை அடைவர். அப்போது அவர்களது சரீரம் வேறு கதியற்று செய்வது அறியாமல் திகைக்கும். அந்த நேரத்தில் அவர்களுக்கு ஏற்ற நன்மையை அளிக்கவல்ல நான், அவர்களால் சுலபமாக அடையும்படியாக இருப்பேன்.

38. யதா து பஹுபி: பாபை: நாஸ்திகைச்சாபி ஸம்வ்ருத:
ததா து துர்லப: அஹம் ஸ்யாம் கலிகாலே து காச்யபே

பொருள் – காச்யபனே! என்னைச் சுற்றி நாஸ்திகர்களும், மிகுந்த பாவம் செய்தவர்களும் பெருகியபடி நிற்பார்கள். அந்தக் காலகட்டத்தில் நான் கிட்டுவதற்கு மிகவும் அரியவனாக ஆவேன்; அதன் பின்னர் என்னை யாராலும் எளிதில் அடைய இயலாது.

39. ஏவமாஹ ஹரி: ப்ரீத: புரா மாம் ரங்கேதந: தஸ்மாத்
ச்ரேயோர்திபி: விப்ரை: காவேரீ ஸேவ்யதாம் நதீ

பொருள் – ஆதித்யன் முனிவர்களான எங்களிடம் உரைக்கத் தொடங்கினான்: இப்படியாக என்னிடம் மிகுந்த ப்ரீதியுடன் ஸ்ரீஹரியான ஸ்ரீரங்கதனம் என்று போற்றப்படும் ஸ்ரீரங்கநாதன் உரைத்தான். ஆகவே மிகவும் உயர்ந்த புருஷார்த்தத்தை அடைய விரும்பும் அந்தணர்கள் காவேரி நதிக்குக் கைங்கர்யம் செய்யவேண்டும்.

40. ஐக்ஷ்வாகாச்சைவ சோளாச்ச மம ப்ரீதிகராச்ச தே
தர்மவர்மணாம் உத்திச்ய த்ருவமேஷ்யதி ரங்கராட்

பொருள் – இக்ஷ்வாகு குலத்தில் வந்தவர்களிடமும், சோழ மன்னர்கள் பரம்பரையில் வந்தவர்களிடமும் எனக்கு மிகுந்த அன்பு உண்டு. சோழ மன்னனாகப் பிறக்கப் போகும் தர்மவர்மன் என்பவனின் வேண்டுகோளை ஏற்று ஸ்ரீரங்கராஜன் காவேரிக்கரைக்கு வந்துவிடுவான் – என்று சூரியன் உரைத்தான்.

41. இதி ஆதித்ய வச: ச்ருத்வா நிவ்ருத்தா: ஸமோ வயம் ந்ருப
ததா ப்ரப்ருதி வாஸ: அத்ர க்ருஹீத: அஸ்மாபிரேவ ச

பொருள் – முனிவர்கள் தர்மவர்மனிடம் உரைக்கத் தொடங்கினான்: இப்படியாக ஆதித்யன் கூறியதை நாங்கள் கேட்டுக் கொண்டிருந்தேன். அதன் பின்னர் பூமிக்குத் திரும்பினோம். அரசனே! அன்று முதலாக நாங்கள் அனைவரும் இந்த காவேரி நதியின் கரையில்தான் வசித்து வருகிறோம்.

42. ஜாதோ தசரதாத் ராமோ ராவணம் ச ஹநிஷ்யதி
நிர்பயாத் ச பவிஷ்யாமோ வயம் ராஜந் ந ஸம்சய:

பொருள் – தசரதனின் புத்திரனாகப் பிறக்கப்போகும் இராமனால் இராவணன் அழிக்கப்படுவான். அப்போது முனிவர்களாகிய நாங்கள் எங்களது அச்சத்தைக் கைவிடுவோம். இதில் எந்த சந்தேகமும் இல்லை.

43. ரங்கம் விமாநம் ஆதாய ராக்ஷஸேந்த்ரோ விபீஷண:
ஆகமிஷ்யதி ராஜேந்த்ர ஸத்யம் அஸ்மாபிரீரிதம்

பொருள் – அதன் பின்னர் ராக்ஷஸர்களின் அசரனாகப் போகும் விபீஷணன் என்பவனால் ஸ்ரீரங்கவிமானம் இங்கு கொண்டு வரப்படும். அரசர்களின் தலைவனே! நாங்கள் கூறுவது அனைத்தும் உண்மையே ஆகும்.

44. ஸ த்வம் கச்ச மஹாபாக ராஜ்யம் தர்மேண பாலய
துப்யம் நிவேதயிஷ்யாமோ ராக்ஷஸேந்த்ரே ஸமாகதே

பொருள் – ஆகவே நீண்ட கரங்கள் கொண்ட அரசனே! நீ உன்னுடைய நாட்டில் தர்மம் செழிக்கும்படியாக ஆட்சி செய்து வருவாயாக. ராக்ஷஸர்களின் அரசனாகிய விபீஷணன் இங்கு வரும்போது நாங்கள் உனக்குத் தெரியப்படுத்துகிறோம் – இப்படியாக முனிவர்கள் தர்மவர்மனிடம் உரைத்தனர்.

45. இத்யுக்தோ முநிபி ராஜா தர்மவர்மா மஹாமுநே
காவேர்யா தக்ஷிணே தீரே ஸ்வாம்புரீம் நிசுளாம் யயௌ

 Email:sridharan_book@yahoo.co.in

பொருள் – மஹேச்வரன் நாரதரிடம் கூறத் தொடங்கினார்: இப்படியாக அந்த முனிவர்களால் தர்மவர்மன் என்ற அரசன் உபதேசிக்கப்பட்டான். அதன் பின்னர் அந்த அரசன் காவேரியின் தென்கரையில் உள்ள இடத்தை நிசுளாபுரி என்று மாற்றினான்.

46. அத காலேந தேவேந ராமரூபேண ராவணம் ஹத்வா
விபீஷணச்சைவ லங்காராஜ்யே அபிஷேசித:

பொருள் – பின்னர் தகுந்த காலத்தில் ஸர்வேச்வரன், இராமன் என்னும் ரூபத்தில் அவதாரம் செய்து இராவணனை வதம் செய்தான். அதன் பின்னர் இலங்கையில் விபீஷணன் அரசனாகப் பட்டாபிஷேகம் செய்யப்பட்டான்.

47. அயோத்யாதிபதி ராமோ யஜ்ஞசாம்ச ஸமுத்பவம்
ஆத்மாநம் யஷ்டுமாரேபே ஹயமேதேந கர்மணா

பொருள் – அயோத்தியின் சக்ரவர்த்தியான இராமன் ஒருமுறை அச்வமேத யாகம் செய்தான். அப்போது அனைத்தும் மிகவும் நேர்த்தியாக நடைபெற்றதால் அவன் ஆத்மார்த்தமாக மகிழ்ந்தான்.

48. தர்மவர்மா ஸமாஹூதோ யஜ்ஞார்த்தம் யஜ்ஞமூர்த்திநா
அயோத்யாம் ஆகமத்தஸ்ய நகரீம் கீர்த்திவர்த்திநீம்

பொருள் – அப்போது யஜ்ஞமூர்த்தியாகிய இராமனால் தர்மவர்மன் அயோத்திக்கு யாகத்தில் கலந்து கொள்ளும்படியாக அழைக்கப்பட்டான். தர்மவர்மன் மீண்டும் அயோத்திக்குச் சென்றான். அந்த அயோத்தியானது ரகுவம்சத்தின் மேன்மையை பலமடங்கு உயர்த்தியது.

49. நிவ்ருத்தமாத்ரே ஸத்ரே து ராமமாமந்த்ர்ய ஸத்வர:
யத் கிஞ்சித் உபவிச்ய ஸ்வம் ராஜ்யமேவாப்ய வர்த்ததே

Email:sridharan_book@yahoo.co.in

பொருள் – அந்த யஜ்ஞம் நிறைவுற்ற பின்னர் இராமன் தனது அரசவையில் வீற்றிருந்தான். அப்போது தர்மவர்மன் இராமனிடம் சென்று நமஸ்கரித்து, தான் தன்னுடைய இருப்பிடத்திற்குச் செல்ல உத்தரவு கேட்டான்.

50. ஸத்க்ருத: ஸர்வ ஸந்மாநை: விஸ்ருஷ்டச்ச மஹாத்மநா
நிசுளாமகமத்ரம்யாம் நகரீம் சோளபூபதி:

பொருள் – மஹாத்மாவாகிய இராமன் தர்மவர்மனுக்குப் பல ஸன்மானங்களை அளித்தான். இப்படியாகக் கௌரவிக்கப்பட்ட தர்மவர்மன் தன்னுடைய அழகான ஊராகிய நிசுளாபுரியை அடைந்தான்.

51. விபீஷணஸ்ய ஸந்மானம் கர்த்தும் ஸர்வகுணோத்தரம்
தேவஸ்ய உத்ஸவ ஸாமக்ரீ பூஜோபகரணாநி ச

பொருள் – அனைத்து குணங்களிலும் சிறந்தவனாகிய இராமன் அங்கு வந்திருந்த விபீஷணனுக்குத் தகுந்த வெகுமதிகளை வழங்கினான். அப்போது ஸ்ரீரங்கநாதனின் ஆராதனைக்குத் தேவையான பலவிதமான உபகரணங்களை முதலில் அளித்தான்.

52. சில்பிநச் சாஸ்த்ர நிபுணாந் ப்ராஹ்மணாம்ச்ச தபஸ்விநி:
ஸர்வம் ஸமுதிதம் க்ருத்வா லங்கேந்த்ர ப்ரத்யபாலயத்

பொருள் – இலங்கை அரசனாகிய விபீஷணனை அங்கு வைத்துக்கொண்டு சிற்ப சாஸ்த்ர நிபுணர்கள், அந்தணர்கள், தவம் இயற்றுபவர்கள், அனைத்திலும் சிறந்தவர்கள் போன்ற பலரையும் இராமன் அழைத்தான்.

53. அத மீநரவௌ மாஸே வஸந்தர்து குணாந்விதே
ப்ரஜாபத்யே ச நக்ஷத்ரே பத்ராயாம் மந்தவாஸரே
54. உஷ: காலே சுபே லக்நே ராமேணாக்லிஷ்ட கர்மணா
இக்ஷ்வாகூணாம் குலதனம் ஆத்மந: அப்யகீதம் ததா

55. ஸ்ரீமத்ரங்கம் மஹத்தாம ஸத்விஜம் ஸ பரிச்சதம்
தத்தம் ராக்ஷஸராஜாய ப்ரியாய ப்ரியகாரிணோ

பொருள் – அந்த நாள் மீனமாதம் (பங்குனி), சனிக்கிழமை, க்ருத்திகா நக்ஷத்ரம், வஸந்த ருது, விடியற்காலைப் பொழுது ஆகும். அந்த சுபயோக சுப லக்னத்தில் மற்றவராலும் பெரிதும் விரும்பப்படுவதான இக்ஷ்வாகு குலதனம் என்று போற்றப்படும் ஸ்ரீரங்க விமானத்தை இராமன் ராக்ஷஸர்களின் அரசனாகிய விபீஷணனுக்கு அளித்தான். அந்த உயர்ந்த ஸ்ரீரங்கவிமானத்தை அன்பு காரணமாக மிகவும் ப்ரியத்துடன் வழங்கினான். அத்துடன் கொடிப்படலம் போன்றவற்றையும் கொடுத்தான்.

56. விபீஷண: அபி ராமாய ப்ரணிபத்ய மாஹாத்மநே
சிரஸ்யாதாய தத்தாம ஸ சிவைஸ்ஸஹ ராக்ஷஸ:
57. ஸ லங்காபிமுகஸ்தூர்ணம் ப்ரயயௌ ப்ரீதமாநஸ:
நபோ மத்யகதே ஸூர்யே சந்த்ரபுஷ்கரிணீதடே
58. அநந்தபீடே ஸ்ரீரங்கம் ஸ்தாபயாமாஸ ராக்ஷஸ:
ஆஹூதோ தர்மவர்மா ச ப்ராஹ்மணை: தத்க்ஷணேந வை

பொருள் – விபீஷணன் இராமனை வணங்கினான். மிகவும் மரியாதையுடன் ஸ்ரீரங்கவிமானத்தைப் பெற்றுக் கொண்டு, தனது தலையில் அப்படியே வைத்துக் கொண்டான். பின்னர் தனது மந்திரிகள் புடை சூழ அங்கிருந்து புறப்பட்டு தனது இருப்பிடமான இலங்கையை நோக்கி மகிழ்வுடன் விரைந்தான். அப்படிச் செல்லும்போது சூரியன் உச்சி வானத்தில் வந்த மத்யான நேரத்தில், அவன் சந்த்ர புஷ்கரிணீ தடாகத்தின் கரையை அடைந்தான். அங்கிருந்த சேஷபீடத்தில் ஸ்ரீரங்கவிமானத்தை வைத்தான். இதனைக் கவனித்த முனிவர்கள், அந்த நொடியிலேயே சட்டென்று தர்மவர்மனுக்கு விஷயத்தைத் தெரிவித்தனர். அவனும் உடனே அங்கு விரைந்து வந்தான்.

59. ராஜ்ஞா ச முநிபிச்சைவ ஸத்க்ருதோ ராக்ஷஸேச்வர:
தேவச்ச பூஜிதோ விப்ரை: பூபுஜா ராக்ஷஸேந ச

Email:sridharan_book@yahoo.co.in

பொருள் – அந்த அரசனை அங்கிருந்த முனிவர்கள் வரவேற்றனர். அங்கிருந்த ஸ்ரீரங்கநாதனுக்கு தர்மவர்மன், அந்தணர்கள், ராக்ஷஸர்களின் தலைவனாகிய விபீஷணன் போன்ற பலரும் பூஜைகள் செய்தனர்.

60. ஸேதே குருகதே லக்நே ரோஹிண்யாம் மாஸி பல்குநே
ஸௌரிவாரே ச காவேர்யாம் ஸ்ரீரங்கம் ஸுப்ரதிஷ்டிதம்

பொருள் – பங்குனி மாதம், சுக்லபக்ஷம், ரோஹிணி நக்ஷத்ரம், ஞாயிற்றுக்கிழமை அன்று சுபமான லக்னத்தில் ஸ்ரீரங்கவிமானம் காவேரியின் கரையில் ப்ரதிஷ்டை செய்யப்பட்டது.

61. புவௌ பூத்யை பூபுஜாம் பூஸுராணாம் திவோ குப்த்யை ச்ரேயஸே தேவதாநம்
ச்ரேயை ராஜ்ஞாம் சோளவம்சோத்பவாநாம் ஸ்ரீமத்ரங்கம் ஸஹ்யஜாமாஜகாம

பொருள் – இப்படியாக பூமியின் நன்மைக்காகவும், அரசர்களின் நலனுக்காகவும், அந்தணர்களுக்காகவும், ஸ்வர்க்கத்தின் பாதுகாப்பிற்காகவும், தேவர்களின் செழுமைக்கும், சோழ அரசர்களின் பரம்பரை வ்ருத்திக்கும், காவேரியின் கரையில் இந்த ஸ்ரீரங்கவிமானம் ப்ரதிஷ்டை செய்யப்பட்டது.

ஸ்ரீமத்ப்ரஹ்மாண்ட புராணத்தில் உள்ள ஸ்ரீரங்கமாஹாத்ம்யத்தின் எட்டாம் அத்யாயம் ஸம்பூர்ணம்

Email:sridharan_book@yahoo.co.in

அத்யாயம் – 9 – விபீஷணன் புறப்படுதல்

1. ததோ விபீஷணோ ராஜா சந்த்ரபுஷ்கரிணீ ஜலே
   ஸ்நாத்வா து மூலமந்த்ரேண தேவாந் ஸந்தர்ப்ய வாரிணா

பொருள் – அந்த விபீஷணன் சந்த்ரபுஷ்கரிணீ நீரில் மூல மந்த்ரத்தை த்யானித்தபடியே நீராடினான். அதன் பின்னர் அனைத்து தேவர்களுக்கும் அங்கிருந்த நீர் மூலம் அர்க்யம் அளித்தான்.

2. காவேரீதோயம் அமலம் ஆதாய மணிஸந்நிபம்
   கல்ஹார உத்பல பத்மாநி புண்யாம் ச துளஸீம் அபி
3. புந்நாக சம்பக அசோக பாடலீ பகுளாநி ச
   உபாதாய யதா சாஸ்த்ரம் அர்ச்சயாமாஸ கேசவம்

பொருள் – அதன் பின்னர் மிகவும் தூய்மையான ஸ்படிக மணி போன்ற காவேரி நீரை எடுத்துக் கொண்டான். மேலும் கல்ஹாரம், உத்பலம், தாமரை, புண்ணியம் நிறைந்த துளஸி, புந்நாகம், செண்பகம், அசோகம், பாடலீ போன்ற பலவிதமான மலர்களைப் பறித்தான். இவை மூலம் ஸ்ரீரங்கநாதனுக்கு சாஸ்த்ர முறைப்படி விபீஷணன் அர்ச்சனை செய்தான்.

4. அஷ்டாங்கவிதி நிஷ்ட்வா தம் ததஸ்துஷ்டாவ ராக்ஷஸ:
   தேவசாஸ்த்ர புராணோக்தை: ஸ்தோத்ரை: ஸ்துத்யம் ஜகத்பதிம்

பொருள் – அஷ்டாங்க விதிப்படி அவன் அனைத்துவிதமான பூஜைகளையும் செய்தான். ஸ்ரீரங்கநாதனை வேதங்கள், மற்ற சாஸ்த்ரங்கள், புராணங்கள் ஆகியவற்றில் உள்ளபடி புகழ்ந்தான். இப்படியாக அவன் இந்த உலகின் நாதனான ஸ்ரீரங்கநாதனைத் துதித்தான்.

5. தர்மவர்மோபநீதைச்ச போகைருச்ச அவசைரபி
ஸ்தோத்ரபாடைச்ச விப்ராணாம் துதோஷ புருஷோத்தம:

பொருள் – தர்மவர்மன் ஸ்ரீரங்கநாதனுடைய பூஜைக்குத் தேவையான அனைத்துப் பொருட்களையும் கொணர்ந்தான். அந்த நேரத்தில் அந்தணர்கள் பலவிதமான ஸ்தோத்ரங்கள் மற்றும் மந்த்ரங்கள் மூலம் புருஷோத்தமனாகிய ஸ்ரீரங்கநாதனைத் துதித்தபடி நின்றனர்.

6. ததோ விபீஷணம் ராஜா தர்மவர்மா க்ருதாஞ்ஜலி:
யயாசே கதிசித்காலாநிஹைவாஸதாம் பவாநிதி

பொருள் – அதன் பின்னர் தர்மவர்மன் விபீஷணனைத் தனது இரு கரம் குவித்து வணங்கினான். அவனை மேலும் சில காலம் அங்கேயே தங்கியிருக்கும்படி விண்ணப்பித்தான்.

7. ச்வோ தேவஸ்யோத்ஸவோ பாவீ மஹாந் இக்ஷ்வாகுணா
ததர்த்தம் கம்யதே லங்கா க்ஷிப்ரம் இத்யாஹ ராக்ஷஸ:

பொருள் – இதனைக் கேட்ட விபீஷணன் தர்மவர்மனிடம், "அரசனே! நாளை இலங்கையில் ஒரு பெரிய உற்சவம் நடக்க உள்ளது. அது இக்ஷ்வாகு மன்னனால் முதலில் செய்யப்பட்டதாகும். அதற்காக நான் உடனடியாக இலங்கை செல்லவேண்டும்", என்றான்.

8. இஹ உத்ஸவ: அபி பவிதேத்யாஹ ராஜா விபீஷணம்
தத் இத்யுக்தஸ் ததா சக்ரே ஸர்வம் அப்யௌத்ஸவம் விதிம்

பொருள் – இதனைக் கேட்ட தர்மவர்மன் அந்த ஸ்ரீரங்கத்தில் மறுநாள் உற்சவம் ஒன்று நடக்க உள்ளதாகவும், அதற்கு விபீஷணனை இருந்துவிட்டுப் போகும்படியும் கூறினான். அந்த விண்ணப்பத்தை ஏற்ற விபீஷணன், அங்கு அன்று தங்கியிருக்கச் சம்மதித்தான்.

உடனே மறுநாள் நடைபெறவுள்ள ப்ரம்மாண்டமான உற்சவத்திற்கான ஏற்பாட்டை மிகவும் விரிவாக தர்மவர்மன் செய்யத் தொடங்கினான்.

9. விப்ரைர் விபீஷணோ ராஜா விதிசிஷ்யைச்ச பஞ்சபி:
 உத்ஸவம் விதிவத் சக்ரே ஸம்பதா தர்மவர்மண:

பொருள் – மறுநாள் நடைபெற்ற உற்சவத்தில் நான்முகனின் சீடர்களான ஐந்து அந்தணர்களை முன்னிறுத்தி விபீஷணன் சாஸ்த்ர முறைப்படி ஸ்ரீரங்கநாதனுக்குப் பூஜைகள் செய்தான். தர்மவர்மனின் சொத்துக்கள் மூலம் இந்த உற்சவம் கொண்டாடப்பட்டது.

10. அத்யந்த அபிநவை: த்ரவ்யை: ஹவிர்பி: ஸ்வாதுபிஸ்ததா
 அலங்காரைச்ச விவிதைர் அர்ச்சிதோ விபுரீச்வர:

பொருள் – புதியதான திரவியங்கள், நேர்த்தியான அவிர்பாகம், சிறந்த இனிப்புகள், பலவிதமான அலங்காரங்கள் என்பதன் மூலம் எங்கும் வ்யாபித்துள்ள ஸர்வேச்வரனாகிய ஸ்ரீரங்கநாதன் அர்ச்சித்து ஆராதிக்கப்பட்டான்.

11. விபீஷணச்ச ஸுப்ரதிஸ் ஸத்காரை: தர்மவர்மண:
 அந்நசாலாச்ச விவிதா: பாநசாலாச்ச பூபதி:
 உத்ஸவார்த்தம் ஸமேதாநாம் சக்ரே ராஜா ந்ருணாம் முநே

பொருள் – தர்மவர்மனின் துணையும் ஒத்துழைப்பும் விபீஷணனுக்கு மிகுந்த மகிழ்வை அளித்தது. அந்த உற்சவத்திற்குப் பல அரசர்கள், முனிவர்கள், பொதுமக்கள் வந்தனர். அவர்கள் அனைவரும் உணவு உண்பதற்கும், தண்ணீர் பருகுவதற்கும் பல சத்திரங்களை தர்மவர்மன் கட்டியிருந்தான்.

12. சந்த்ரபுஷ்கரிணீதீரே புந்நாக தரு சோபிதே
 மண்டபே சோளஸிம்ஹஸ்ய ப்ரவ்ருத்தோ தேவதோத்ஸவ:

பொருள் – சந்தபுஷ்கரிணியின் கரையில், புன்னாக மரத்திற்கு அருகில் மண்டபம் அமைக்கப்பட்டிருந்தது. அந்த பண்டபத்தில் சோழ அரசர்களில் சிங்கம் போன்ற தர்மவர்மனால் ஸ்ரீரங்கநாதனுக்கு உற்சவம் எடுக்கப்பட்டது.

13. நவாஹம் உத்ஸவம் க்ருத்வா ராஜாயாம் நவமேஹநி
சக்ரிரே அவப்ருத ஸ்நாநம் விஷ்ணுபக்தா விமத்ஸரா:

பொருள் – ஒன்பது நாட்கள் நடைபெற்ற அந்த விமரிசையான உற்சவத்தில் விஷ்ணுபக்தர்கள் அனைவரும் கலந்து கொண்டனர். அவர்கள் தங்களுடைய மனதில் எந்தப் பொறாமையும் இன்றி இருந்தனர். பின்னர் ஒன்பதாம் நால் இரவு திருமஞ்சனம் நடைபெற்றது.

14. தத்ரத்யா ப்ராஹ்மணா: ஸர்வம் தர்ப்பிதா தர்மவர்மணா
அந்நபாநைச்ச வாஸோபி: தக்ஷிணாபி: ததைவ ச

பொருள் – அங்கு வந்த அந்தணர்கள் அனைவருக்கும் உணவு, தண்ணீர், வஸ்த்ரங்கள், தக்ஷிணை என்று பலவிதமான உபசாரங்களை தர்மவர்மன் செய்தான். இபப்டியாக அவர்களை அவன் மகிழ்ச்சியில் ஆழ்த்தினான்.

15. அர்த்தமாஸோஷித: தத்ர ஸத்க்ருதோ தர்மவர்மணா
மைத்ரே மித்ரோதயாத் பூர்வம் ப்ரதஸ்தே ராக்ஷஸேச்வர:

பொருள் – தர்மவர்மனால் நன்றாக உபசரிக்கப்பட்டு கௌரவிக்கப்பட்ட விபீஷணன் அங்கு அரை மாதம் தங்கினான். பின்னர் ஒருநாள் சூரிய உதயத்திற்கு முன்பாக இலங்கைக்குப் புறப்படத் தயாரானான்.

16. தர்மவர்மணமாமந்த்ர்ய தத்ரத்யாம் ப்ராஹ்மணாநபி
விமாநமைச்சதாதாதும் சிரஸா ராக்ஷஸ: ஸ்வயம்

பொருள் – விபீஷணன் தனது தலையில் ஸ்ரீரங்கவிமானத்தைக் கொண்டு செல்ல விரும்பியவனாக, தர்மவர்மனிடமும் அவனது மந்த்ரிகளுடமும் உத்தரவு பெற்றான். அங்கிருந்த அந்தணர்களிடமும் அவன் உத்தரவு பெற்றான்.

17. நாசகத் ரங்கம் உத்தர்த்தும் அபி ஸர்வ ப்ரயத்நத:
 நிஷ்ப்ரயத்நத: தத: ராஜா நிஷ்ஸாத ஸுதுக்கித:

பொருள் – பின்னர் அவன் ஸ்ரீரங்கவிமானத்தைத் தரையில் இருந்து எடுக்க முனைந்தான். ஆனால் அவனால் அதனை எடுக்க முடியவில்லை. அந்த அரசன் எத்தனையோ முயன்றும் அவனால் ஸ்ரீரங்கவிமானத்தை உயர்த்தவில்லை என்பதால் மிகுந்த துக்கம் அடைந்தான். அப்படியே தரையில் அமர்ந்தான்.

18. தமச்ரு பூர்ணவதநம் பதிதம் பாதமூலயோ:
 உத்திதோத்திஷ்ட வத்ஸேதி விஷ்ணுராஹ விபீஷணம்

பொருள் – அதன் பின்னர் தனது திருவடிகளே கதி என்று தனது திருவடிகளில் விழுந்த விபீஷணனை ஸ்ரீரங்கநாதன் நோக்கினான். விபீஷணனின் கண்களில் நீர் பெருகி நின்றது. அப்போது அவனிடம் ஸ்ரீரங்கநாதன் அன்புடன், “எழுந்திருப்பாயாக”, என்றான்.

19. அயம் மநோஹரோ தேச: பரிதஸ்ஸஹ்யகந்யயா
 சந்த்ரபுஷ்கரிணீ சேயம் பாவநீ பாபநாசிநீ

பொருள் – ஸ்ரீரங்கநாதன் விபீஷணனிடம், “இந்த இடம் மிகவும் அழகான இடமாகும். இந்த இடம் காவேரியால் சூழப்பட்டுள்ளது. இந்த சந்த்ரபுஷ்கரிணீ தடாகம் அனைத்து பாவங்களையும் போக்கவல்லதும், தூய்மையானதும் ஆகும்”, என்று கூறத் தொடங்கினான்.

20. அயம் ச பக்திமாந் ராஜா தர்மவர்மா சதா மயி
 இமே ச முநய: புண்யா வஸந்த்யத்ர விகல்மஷா:
21. அத்ரைவ வஸ்தும் இச்சாமி கச்ச லங்காம் விபீஷண

பொருள் – இந்த தர்மவர்மனும் மிகவும் பக்திமான் ஆவான். என்னிடம் ஆழ்ந்த பக்தி கொண்டவன் ஆவான். இங்குள்ள முனிவர்கள் அனைவரும் மிகவும் புண்ணியம் நிறைந்தவர்கள் ஆவர். அவர்கள் எந்தவிதமான பாவமும் அற்றவர்கள் ஆவர்; ஆகவே இங்கு வசிக்கின்றனர். நான் இங்கு வசிக்கவே விரும்புகிறேன். நீ இலங்கைக்குப் புறப்படுவாயாக.

22. புரா வ்ருத்தமிதம் ச அத்ர ச்ரோதும் அர்ஹஸி ராக்ஷஸ
விந்த்யபாதே மஹாநத்ய: ஸர்வா: ஸமுதிதா: புரா

பொருள் – இது குறித்து நான் உகன்னுப் பழைய நிகழ்வு ஒன்றைக் கூறுகிறேன். விந்த்ய மலையின் அடிவாரத்தில் அனைத்து நதிகளும் சேர்கின்ற இடம் ஒன்று முன்பு இருந்தது.

23. தத்ர கந்தர்வ ஆகச்சதி விச்வாவஸுரிதி ச்ருத:
ஸ ப்ரணாம் அஞ்ஜலிம் க்ருத்வா தக்ஷிணாம் திசமாஸ்தித:

பொருள் – அங்கு விச்வாவஸு என்னும் கந்தர்வன் ஒருநாள் வந்தான். அங்கு வந்தவுடன் அவன் தென்திசையைப் பார்த்து தனது இரண்டு கைகளையும் குவித்தபடி, அந்தத் திசையை நோக்கிச் சென்றான்.

24. ததோ விவாத: ஸம்பூதோ நதீநாம் தத்ர ராக்ஷஸ
மம ப்ரணாமமகரோத் மமாயமிதி வை மித:

பொருள் – அப்போது அந்த நதிகளுக்கு இடையே விவாதம் உண்டானது. ஒவ்வொரு நதியும் தனக்கே அந்த கந்தர்வன் வந்தனம் செய்ததாக உரைத்தன. "அவன் என்னையே வணங்கினான்", என்று ஒவ்வொன்றும் போட்டியிட்டன.

25. ஸமுத்ரம் தக்ஷிணம் கத்வா ஸ கந்தர்வபதி: ப்ரபோ
ப்ராபோகயத் பத்மநாபம் நபஸ்யே மாஸி ஸம்யத:

Email:sridharan_book@yahoo.co.in

பொருள் – தெற்கு நோக்கிச் சென்ற அந்த கந்தர்வன் தெற்கில் இருந்த ஸமுத்திரம் வரை சென்றான். அங்கு பத்மநாபன் தனது உறக்கம் நீங்கி எழுந்ததைக் கண்டான்.

26. அயநே சோத்தரே ப்ராப்தே நிவ்ருத்தச்ச உத்தராம்
திசாம் புந: ப்ரணாமமகரோந்நதீநாம் தத்ர காயக:

பொருள் – அப்போது உத்தராயண காலம் தொடங்கியது. அந்த நேரத்தில் அந்த கந்தர்வன் வடக்கு நோக்கிச் சென்றான். அவன் சென்றபோது மீண்டும் அந்த நதிகளைக் கண்டு வணங்கினான்.

27. த்வயா நமஸ்க்ருதம் கஸ்யா இத்யுக்தே யாதிகா அத்ர வ:
தஸ்யை க்ருத ப்ரணாம: அஸாவித்யுக்த்வா ப்ரயயௌ ச ஸ:

பொருள் – அப்போது அந்த நதிகள் அவனிடம், "நீ யாரை நமஸ்காரம் செய்தாய்?", என்றன. அதற்கு அவன், "உங்களில் மிகவும் உயர்ந்தவர் யாரோ அவருக்கே நான் நமஸ்காரம் செய்தேன்", என்றான்.

28. ஆதிக்யம் ப்ரதி ஸர்வாஸாம் தாஸாம் வாதோ மஹாந் அபூத்
ந அஹம் இதி ஏவ வை நத்ய: தத்க்ஷணேந விசச்ரமு:

பொருள் – உடனே அந்த நதிகளுக்கு இடையே யார் உயர்ந்தவர் என்னும் விவாதம் உண்டானது. ஆனால் சில நொடிகளிலேயே அனைத்து நதிகளும், "நான் உயர்ந்தவன் அல்ல", என்று ஒவ்வொன்றாக அமைதியாக நின்றன.

29. கங்காயாச்சாபி காவேர்யா ந விச்ராந்தி: ததா பவத்
வாதச்ச ஸுமஹாநாஸீத் அந்யோந்ய ஆதிக்ய காரணாத்

பொருள் – ஆனால் கங்கை மற்றும் காவேரி ஆகிய நதிகளுக்கு இடையே உண்டான வாதம் மட்டும் ஓயவில்லை. அவை இரண்டும் "தானே உயர்ந்த நதி" என்று கூறுவதற்குப் பல காரணங்களை உரைத்தபடி இருந்தன.

30. ஸதநம் ப்ரஹ்மணோ கத்வா ப்ருச்சதாம் பரமேஷ்டிநம்
கங்காதிகா ந ஸந்தேஹ இதி உவாச ப்ரஜாபதி:

பொருள் – அந்த இரண்டு நதிகளும் நான்முகனின் சபைக்குச் சென்றன. அங்கு தங்கள் விவாதம் குறித்து உரைத்தன. இதனைக் கேட்ட நான்முகன், "கங்கை நதியே உயர்ந்தவள் என்பதில் எந்தவிதமான சந்தேகமும் இல்லை", என்றான்.

31. இத்யுக்தா துக்கிதா சைவ காவேரீ ஸஹ்யபர்வதே
தபஸா தோஷயாமாஸ ப்ரஹ்மணம் ராக்ஷஸாதிப

பொருள் – ஸ்ரீரங்கநாதன் விபீஷணனிடம், "விபீஷணா! இப்படியாக கூறப்பட்ட காவேரி மிகவும் துக்கம் அடைந்தாள். ஸஹ்ய மலையில் கடுமையான தவம் மேற்கொண்டு நான்முகனை மகிழச் செய்தாள்", என்று மேலே தொடர்ந்தான்.

32. கங்கா ஆதிக்யம் அபீப்யஸந்தீ சிரகாலம் ஸரித்வார
தஸ்யை வரம் ததௌ ப்ரஹ்மா கங்காஸாம்யம் மஹாமதே

பொருள் – காவேரியானவள் கங்கைக்குச் சமமாக ஆகவேண்டும் என்ற காரணத்தினால்தான் தவம் செய்தாள். ஆனால் அங்கு தோன்றிய நான்முகன், கங்கைக்கு நிகராக காவேரி இருப்பாள் என்றே வரம் அளித்தான்.

33. ஆதிக்யம் ந மயா தாதும் சக்யம் இதி ஏவ ஸ: அப்ரவீத்
ஸாரக்ஷேத்ரே து காவேரீ ஸம்ஸ்தாப்ய ப்ரதிமாம் மம

பொருள் – கங்கையைக் காட்டிலும் காவேரி உயர்ந்தவள் என்னும் நிலையை அளிக்க நான்முகன் அளிக்க மறுத்துவிட்டான். அப்போது வருந்திய காவேரி ஸாரக்ஷேத்ரத்தில் (திருச்சேறை) எனது அர்ச்சா விக்ஹரம் ஒன்றை ப்ரதிஷ்டை செய்தாள்.

34. சிரம் ஆராத்யாமாஸ வரோ தத்தஸ்ததா மயா
ஸா ஸ்துத்வா ப்ரணிபத்யாஹ காவேரீ மாம் ஸரித்வரா

பொருள் – என்னை நீண்டகாலம் காவேரி ஆராதனை செய்துவந்தாள். நான் அவளிடம், "உனக்கு என்ன வரம் வேண்டும்?" என்று கேட்டேன். அப்போது அவள் என்னை வெகுவாகத் துதித்து, நமஸ்கரித்தாள். பின்னர் என்னிடம் கூறத் தொடங்கினாள்.

35. தேவ த்வத் அங்க்ரிம் ஸம்பந்தா கங்காம் மத்த: அதிரிச்யதே
கங்கா ஸாம்யம் மயா லப்தம் ஆதிக்யம் ந கதஞ்சந

பொருள் – காவேரி ஸ்ரீரங்கநாதனிடம், "ஸ்ரீரங்கநாதா! உன்னுடைய திருவடிகளின் தொடர்பு கிட்டதன் காரணமாகவே கங்கையானவள் என்னைக் காட்டிலும் உயர்ந்தவள் என்றாகிவிட்டாள். நான் அவளுக்குச் சரிசமமான நிலையைப் பெற்றுள்ளபோதிலும், அவளைக் காட்டிலும் உயர்ந்தவள் என்னும் பெயர் பெற இயலவில்லை", என்றாள்.

36. தஸ்யை வரம் ஆதாத்தத்ர காவேர்யை கமலேக்ஷண:
மத் ஸம்பந்தோத்பவம் தஸ்யா மாஹாத்ம்யம் கேந ஸாத்யதே
ததாபி மத்ப்ரஸாதேந கங்காய அதிகா பவ

பொருள் – இதனைக் கேட்ட தாமரை போன்ற கண்கள் கொண்ட ஸர்வேச்வரனாகிய நான் காவேரியிடம், "எனது ஸம்பந்தம் காரணமாக கங்கை அடைந்த உயர்ந்த நிலை என்பதை யாராலும் அடைய இயலாது. ஆனால் எனது க்ருபை மூலம் நீ கங்கையைக் காட்டிலும் மேன்மை அடைவாய்", என்று உரைத்தேன்.

37. மத்ஸம்பந்தாய காவேரீ த்வந் மத்யே தாம மாமகம்
ஆகமிஷ்யதி ரங்காக்யம் யத்ர நித்யம் வஸாம்யஹம்

பொருள் – காவேரியே! உனக்கு என்னுடைய ஸம்பந்தம் எப்போதும் கிட்டும்விதமாக எனது ஸ்ரீரங்கவிமானம் உன் நடுவே வந்து அமையும். அங்கு நான் எப்போதும் வாசம் செய்வேன்.

38. நித்யவாஸம் கரிஷ்யாமி த்வந்மத்யே ஸரிதாம் வரே
கங்காய ஆதிகா பூயாநித்ய யோகாந் மயா ஸஹ

Email:sridharan_book@yahoo.co.in

பொருள் – அப்போது நான் உன் நடுவில் எப்போதும் வசித்து வருவேன். நீ எனது ஸம்பந்தத்தை எப்போதும் பெற்றபடி உள்ளதால், கங்கையைக் காட்டிலும் உயர்ந்தவள் ஆவாய் – என்று காவேரியிடம் நான் உரைத்தேன் (இதனைத் தொண்டரடிப்பொடி ஆழ்வார் திருமாலையில் – கங்கையில் புனிதமாய காவிரி – என்றது காண்க).

39. ப்ரதிஜ்ஞாதம் மயா பூர்வம் இத்தம் ராக்ஷஸபுங்கவ
தவாபிமுகமேவாத்ர சயிஷ்யே அஹம் விபீஷண

பொருள் – ஸ்ரீரங்கநாதன் விபீஷணனிடம், "ராக்ஷஸர்களில் உயர்ந்தவனே! இப்படியாக நான் காவேரியிடம் முன்பு ப்ரதிஜ்ஞை செய்துள்ளேன். ஆகவே நான் இங்கேயே இனி இருப்பேன். ஆனால் உன்னுடைய இருப்பிடத்தைப் பார்த்தபடியே எனது முகத்தை நான் வைத்துக் கொள்வேன்", என்றான்.

40. கச்ச லங்கா மயா தத்தாம் புங்க்ஷ்வ ராஜ்யம் அகண்டகம்

பொருள் – விபீஷணா! உனக்கு நான் அளித்த இலங்கையில் நீ வாழ்வாயாக! அந்த ராஜ்யத்தில் நிம்மதியாக நீ அட்சி செய்வாயாக – என்றான்.

41. இத்யுக்தோ தேவதேந ரங்கதாம்நா விபீஷண:
பாதயோ: ப்ரணிபத்யாஹ ப்ராஜ்ஞலி: ப்ரச்ரயாந்வித:

பொருள் – இப்படியாக தேவர்களின் தேவனாகிய ஸ்ரீரங்கராஜன் விபீஷணனிடம் உரைத்தான். அப்போது விபீஷணன் ஸ்ரீரங்கநாதனின் திருவடிகளில் பணிந்து, அஞ்ஜலி செய்து பணிவுடன் உரைக்கத் தொடங்கினான்.

42. யத்யயம் வ்யவஸாயஸ்தே தேவதேவ ஜகத்பதே அஹம் அபி
அத்ர வத்ஸ்யாமி ந த்வம் உத்ஸ்ரஷ்டும் உத்ஸஹே

Email:sridharan_book@yahoo.co.in

பொருள் – விபீஷணன் ஸ்ரீரங்கநாதனிடம், "தேவர்களின் தேவனே! இந்த உலகின் நாயகனே! ஸ்ரீரங்கநாதா! நீ இங்கேயே தங்கிவிட முன்பே முடிவு செய்துவிட்டாய். ஆகவே நானும் இங்கேயே உன்னுடன் இருந்துவிடுகிறேன். உன்னைப் பிரிந்து என்னால் இருக்க இயலாது", என்றான்.

43. கர்மபூமௌ மநுஷ்யாணாம் ஹிதாய அர்ச்சித்மநா மயா
ஆவிர்பூதம் அதஸ்தேஷாம் கரிஷ்யாமி ஹிதம் மயா

பொருள் – ஸ்ரீரங்கநாதன் விபீஷணனிடம், "இந்தக் கர்மபூமியில் உள்ள மனிதர்களின் நன்மைக்காக நான் இங்கே ஆவிர்ப்பவித்தேன்; இந்தத் திருவிக்ரஹத்தில் வந்தேன். இங்கு நான் எப்போதும் நன்மையைச் செய்தபடி இருப்பேன்", என்று கூறத் தொடங்கினான்.

44. ந த்வயா ஸஹ வஸ்தவ்யம் மநுஷ்யை ராக்ஷஸாதிப
தவ தத்தம் ச ராமேண லங்காராஜ்யம் விபீஷண

பொருள் – ராக்ஷஸர்களின் அதிபதியே! நீ மனிதர்களின் நடுவில் வசிக்கக்கூடாது. மேலும் உனக்கு இலங்கை ராஜ்யம் என்பது இராமனால் அளிக்கப்பட்டது.

45. ஆயுச்ச பரமம் தத்தம் ஐச்வர்யம் அதுலம் புவி
அவஸாநே அஸ்ய கல்பஸ்ய மயா ஸஹ விபீஷண
46. உபேஷ்யஸி ப்ரஹ்மலோகம் புநர்லங்காம் ஸமேஷ்யஸி
த்விபரார்த்த அவஸாநே த்வம் மயா ஸஹ விபீஷண
ப்ரயாஸ்யஸி பரம் லோகம் ஸர்வ ப்ரளய வர்ஜிதம்

பொருள் – விபீஷணா! உனக்கு நீண்ட ஆயுள், உயர்ந்த ஐச்வர்யம் போன்ற பலவும் இராமனால் அருளப்பட்டது. ஆகவே நீ அவற்றை அனுபவித்தபடி தினகல்பகாலம் முடிய இலங்கையில் ஆட்சி செய்து வருவாயாக. அதன் பின்னர் நீ என்னுடன் ப்ரஹ்மலோகத்திற்கு வந்துவிடுவாய். பின்னர் அடுத்த கல்பத்தில் மீண்டும் இலங்கைக்குத் திரும்புவாய். பின்னர் ப்ரஹ்மகல்பம் முடிந்தவுடன் மீண்டும் என்னுடன் வந்து

Email:sridharan_book@yahoo.co.in

ஸ்ரீவைகுண்டத்தில் புகுவாய். அதன் பின்னர் உனக்கு மீண்டும் எந்தவிதமான பிறவியும் இல்லை.

47. ஆயுர் ஆரோக்யம் ஐச்வர்யம் அந்யத் ஸர்வம் ச மே ப்ரபோ
தத்தம் ராமேண தேவேந முக்தி: ஸம்ப்ரார்த்திதா மயா

பொருள் – இதனைக் கேட்ட விபீஷணன் ஸ்ரீரங்கநாதனிடம், "ஸ்ரீரங்கப்ரபோ! நீண்ட ஆயுள், ஆரோக்யம், ஐச்வர்யம் போன்ற அனைத்தும் எனக்கு இராமனால் வழங்கப்பட்டது. அப்போது நான் அவனிடம் முக்தியை வேண்டினேன்", என்று கூறத் தொடங்கினான்.

48. ததர்த்தம் ரங்கதாமை தத்தத் தமேவ தயாளுநா
முச்யதே கதமே தஸ்மாத் ஸம்ஸாராத் தத்வதஸ்வ மே

பொருள் – அப்போது கருணையே வடிவான இராமன் இந்த ஸ்ரீரங்கவிமானத்தை எனக்கு அளித்தான். இப்படி உள்ளபோது, இப்போது நான் உன்னை விட்டுப் பிரிந்தால், ஸம்ஸாரம் நீங்கி, முக்தி பெறுவது எப்படிச் சாத்தியமாகும்? நான் எப்படி மோக்ஷம் பெறுவது என்று உரைப்பாயாக – என்றான்.

49. பாலயந்தோ மம ஏவ ஆஜ்ஞாம் விபீஷண முமுக்ஷவ
யோகார்த்தநச்ச புருஷா போகிநோ யே ஸுராஸுரா:

பொருள் – ஸ்ரீரங்கநாதன் விபீஷணனிடம் உரைக்கத் தொடங்கினான் – முக்தியில் விருப்பம் உள்ளவர்கள், இல்லத்தில் நாட்டம் உள்ளவர்கள், போகங்களை நாடும் அஸுரர்கள் மற்றும் தேவர்கள் போன்ற பலரும் எனது ஆணையையே பின்பற்றி நடக்கிறார்கள்.

50. யஜ்ஞேந தபஸா தாநைரந்யைச்ச சுபகர்மபி:
மமைவ க்ரியதே ப்ரீதிர் மத் ஆஜ்ஞாம் அநுபாலய

Email:sridharan_book@yahoo.co.in

பொருள் – என்னுடைய ஆணைப்படி, எனது அனுக்ரஹத்தைப் பெறுவதற்கு இவர்கள் யஜ்ஞம், தவம், தானம், சுபகர்மங்கள் போன்றவற்றை இயற்றுகிறார்கள். இதன் மூலம் எனது ப்ரீதியை அடைந்து, அனுக்ரஹம் பெறுகிறார்கள். நீயும் எனது ஆணையைப் பின்பற்றுவாயாக.

51. ராஜ்யம் குருஷ்வ தர்மேண மதர்த்தம் மாமநுஸ்பரந்
மா பவாத்மா த்வதீயாச்ச தேசமேதம் வ்ரஜம் து வை

பொருள் – நீ எப்போதும் என்னுடைய ஸ்மரணையாகவே இருப்பாயாக. உன்னுடைய ராஜ்யத்தை எனது மகிழ்ச்சிக்காகவும் திருப்திக்காகவும் தர்மவழியில் நடத்துவாயாக. நீயும் உனது மக்களும் அந்த இடத்தை விட்டு வேறு எங்கும் செல்லவேண்டாம்.

52. மாம் ஏவ அநுஸ்மர ஸதா த்வாம் அஹம் ஸம்ஸ்மராமி ச
உபாயம் அபவர்க்கஸ்ய ரஹஸ்யம் அபி மே ச்ருணு

பொருள் – ஸ்ரீரங்கநாதனான என்னை மட்டுமே நீ எப்போதும் எண்ணியபடி இருப்பாயாக. நானும் உன்னை எப்போதும் நினைத்தபடியே இருப்பேன். உனக்கு மோக்ஷம் கிட்டுவதற்கான ஒரு ரகசிய வழியை உரைக்கிறேன், கேட்பாயாக.

53. ஸர்வகர்மாணி ஸந்த்யஜ்ய ஸர்வகர்ம பலாநி ச
சரணம் மாம் ப்ரபத்யஸ்வ ஸர்வபந்த விமுக்தயே

பொருள் – அனைத்து கர்மங்களின் பிடியில் இருந்து உன்னை நீ விலக்கிக் கொள்ளவேண்டும். இதற்கு அந்தக் கர்மபலன்கள் அனைத்தையும் என்னிடம் சமர்ப்பணம் செய்வாயாக. எப்போதும் என்னையே சரணம் அடைவதன் மூலம் அனைத்து பந்தங்களிலிருந்தும் நீ விடுபடுவாய் – என்று உரைத்தான்.

54. இத்யுக்தோ ரங்கநாதேந லங்காநாத: அபி நாரத
ப்ரணம்ய தேவம் பஹுச: ப்ரயயௌ ஸ்வாம் புரீம் ப்ரதி

Email:sridharan_book@yahoo.co.in

பொருள் – சிவபெருமான் நாரதரிடம், "நாரதா! இப்படியாக ஸ்ரீரங்கநாதன் விபீஷணனுக்கு உபதேசம் செய்தான். இதனைக் கேட்ட பின்னர் அந்த பக்தன் ஸ்ரீரங்கநாதனைப் பலமுறை வனங்கிவிட்டு, தனது இருப்பிடம் நோக்கிச் சென்றான்", என்று கூறத் தொடங்கினார்.

55. கதே விபீஷணே ப்ரஹ்மந் தர்மவர்மா ஸயு த்விஜை:
ஸம்யக் விதாநம் கரோத் யத்யத் கர்த்தவ்யம் அத்ர வை

பொருள் – இப்படியாக விபீஷணன் அங்கிருந்து புறப்பட்ட பின்னர், தர்மவர்மன் அனதணர்களுடன் சேர்ந்து, எந்தெந்த கர்மங்களை ஸ்ரீரங்கநாதனுக்குச் செய்யவேண்டுமே, அவற்றை முறையுடன் செய்தபடி இருந்தான்.

56. ததா ப்ரப்ருதி காவேர்யாம் ஸ்ரீரங்கம் தாம நாரத
கல்பாந்தஸ்தாயி ஸம்பூதம் த்ருச்யதே அத்யாபி மாநவை:

பொருள் – நாரத! அந்த நாள் தொடங்கி இன்றளவும் ஸ்ரீரங்கவிமானம் காவேரியின் நடுவில் உள்ளது. தினகல்பத்தின் முடிவு வரை, அந்த விமானம் அங்கேயே நிலைத்து நிற்கும். இப்போதும் அதனை மனிதர்கள் கண்டு வணங்கியபடி உள்ளனர்.

ஸ்ரீமத்ப்ரஹ்மாண்ட புராணத்தில் உள்ள ஸ்ரீரங்கமாஹாத்ம்யத்தின்
ஒன்பதாம் அத்யாயம் ஸம்பூர்ணம்

அத்யாயம் – 10 – ஒன்பது தீர்த்தங்களின் ப்ரபாவம்

1. ஸ்ரீரங்கஸ்ய விமாநஸ்ய பரிதோ யோஜந த்வயே
   க்ஷேத்ரே நிவாஸநாம் பும்ஸாம் பாதகம் ந ஏவ வித்யதே

பொருள் – ஸ்ரீரங்கவிமானம் உள்ள இடத்திலிருந்து இரண்டு யோஜனை சுற்றளவில் யார் வசிக்கிறார்களோ அவர்களுக்கு எந்தவிதமான பாவங்களும் ஒட்டுவதில்லை.

2. ஸ்ரீரங்கயாத்ரா ஸ்ரீரங்கதீர்யாஸ சைவ நாரத
   உத்தாரயதி ஸம்ஸாராந் நித்யவாஸஸ்து கிம் புந:

பொருள் – ஸ்ரீரங்க யாத்திரையும், ஸ்ரீரங்கத்திற்கு யாத்திரை செல்லவேண்டும் என்ற எண்ணமுமே ஸம்ஸாரத்திலிருந்து உயர்த்திவிடும். இப்படி உள்ளபோது ஸ்ரீரங்கத்தில் எப்போதும் வசித்தால் மோக்ஷம் உறுதி என்பதை மீண்டும் கூற வேண்டுமா?

3. சந்த்ரபுஷ்கரிணீ யத்ர ஸரஸீ பாபாநாசிநீ
   தத்ர ஸ்நாநம் மநுஷ்யாணாம் ஸர்வோரிஷ்ட நிவாரணம்

பொருள் - சந்த்ரபுஷ்கரிணீ அனைத்து பாவங்களையும் நீக்கவல்லது. அந்தத் தடாகத்தில் புனித நீராடும் மனிதர்கள் தங்களுடைய அனைத்து துன்பங்களுக்கும் நிவாரணம் தேடிக் கொள்கின்றனர்

4. புரா காச்யபசாபேந நிஸ்தேஜஸ்க: க்ருதோ விது:
   தத்ஸேவயா மஹத்தேஜ: ப்ரத்யபத்யத நாரத

Email:sridharan_book@yahoo.co.in

பொருள் - முன்பு ஒரு காலத்தில், காச்யப முனிவரின் சாபம் காரணமாக சந்த்ரன் தனது தேஜஸ் அனைத்தையும் இழந்தான். பின்னர் சந்த்ரபுஷ்கரிணியில் நீராடிய அவன், இழந்த தனது தேஜஸ் போன்ற அனைத்தையும் மீண்டும் அடைந்தான்.

5. ப்ரச்சாயச்ச ஸகந்திச்ச புந்நாகஸ் தத்ர திஷ்டதி
புரா சந்த்ரமஸா ராஜ்ஞா ப்ரதிஷ்டாப்ய விவர்த்தித:

பொருள் - அப்படியாத் தனது துன்பம் தீர்ந்த சந்த்ரனால் ஊன்றப்பட்டதும், இன்றளவும் நிழல் அளிப்பதும் ஆகிய புன்னாகவ்ருக்ஷம் அந்தச் சந்த்ரபுஷ்கரிணியின் அருகில் உள்ளது.

6. தம் த்ருஷ்ட்வா முச்யதே பாபைஸ் ஸ்ப்ருஷ்ட்வா லக்ஷ்மீம் அவாப்நுயாத்
ஜ்ஞாநவாந் ஸ்யாத்தம் ஆச்லிஷ்ய தஸ்மாத் தம் அபிவாதயே

பொருள் - புன்னாக வ்ருக்ஷத்தி தரிசனம் என்பது அனைத்து பாவங்களையும் நீக்கவல்லதாகும். இந்த மரத்தைத் தொடுவதன் மூலம் அனைத்து செல்வங்களும் வந்து சேரும். அதனை அணைத்துக் கொள்வதால் மிகுந்த ஞானம் ஏற்படுகிறது. ஆகவே அந்த புன்னாக மரத்தை வணங்கவேண்டும்.

7. தச்சாயாயாம் க்ருதம் தாநம் ஜப ஹோம ஸுரார்ச்சநம்
பித்ருணாம் பிண்டதாநம் ச மஹதக்ஷய்யம் உச்யதே

பொருள் - அந்த மரத்தின் நிழலில் செய்யப்படும் தானம், ஜபம், ஹோமம், தேவர்களுக்கான பூஜை, பித்ருக்களுக்குப் பிண்டம் வைத்தல் போன்ற செயல்கள் மிகவும் உயர்ந்த பலனை அளிக்கும் என்பர்.

8. பாரசர்யோ மஹாதேஜா: தத்ர ஆஸ்தே முநிஸத்தம:
புஷ்கர: புஷ்கராக்ஷச்ச குமுத: காம ஏவ ச

பொருள் - அந்த மரத்தில் முனிவர்களில் சிறந்தவரும், மிகுந்த தேஜஸ் பொருந்தியவரும் ஆகிய வேதவ்யாஸர் எப்போதும் குடி கொண்டுள்ளார். புஷ்கர, புஷ்கராக்ஷ, குமுத, காம தேவர்கள் அவருக்கு நமஸ்காரம் செய்தபடி அந்த மரத்தில் உள்ளனர்.

9. விஷ்ணுபாரிஷதா ஹி ஏதே தீர்த்தம் ரக்ஷந்தி ஸர்வதா
வாஸுதேவேதி தேவஸ்ய தத்ர நாம ப்ரசஸ்யதே

பொருள் - இப்போது கூறப்பட்ட புஷ்கரர் போன்றவர்கள் மஹாவிஷ்ணுவின் பரிவாரங்கள் ஆவர். அவர்கள் சந்த்ரபுஷ்கரிணி தீர்த்தத்தை எப்போதும் பாதுகாத்தபடி உள்ளனர். இங்கு வாஸுதேவன் என்ற திருநாமம் மிகவும் ப்ரஸித்தி பெற்றதாகும் (இன்றும் சந்த்ரபுஷ்கரிணியின் எதிரில் "தீர்த்தக்கரை வாஸுதேவன்" என்னும் ஸந்நிதி உள்ளதைக் காணலாம்).

10. கணநாதம் நமஸ்க்ருத்ய ஸ்நாத்வாசம்ய யதாவிதி
கீர்த்தயித்வா வாஸுதேவம் மந்த்ரமேநமுதாஹரேத்

பொருள் - அங்கு உள்ள கணங்களின் தலைவரை வணங்கிய பின்னர், புனித நீராட வேண்டும். தொடர்ந்து ஆசமனம் செய்தல் வேண்டும். அதன் பின்னர் சாஸ்த்ர விதிகளின்படி வாஸுதேவ மந்திரத்தை உச்சரிக்கவேண்டும்.

11. அசேஷ ஜகத் ஆதார சங்க சக்ர கதாதர
அநுஜ்ஞாம் தேஹி மே தேவ யுஷ்மத் தீர்த்த நிஷேவணே
12. இத்யுக்த்வா மூலமந்த்ரேண ஸூக்தேந புருஷஸ்ய வா
ஸ்நாத்வா ஸந்தர்ப்பயேத் தேவம் வாஸுதேவேதி நாமத:
13. ரிஷிம் சந்த்ரமஸம் தேவம் கணநாம் தத்தைவ ச
தத்யாச்ச சக்திதோ தாநம் ஸர்வபாபாபநுத்யதே

பொருள் – அனைத்திற்கு ஆதாரமாக உள்ளவனே! சங்கு, சக்கரம், கதை ஏந்தியவனே! உன்னுடைய இந்தப் புண்ணிய தீர்த்தத்தில் சேவை செய்ய அனுமதிப்பாயாக. இப்படியாக மூலமந்த்ரத்தையோ அல்லது புருஷஸூக்தத்தையோ உச்சரிக்கவேண்டும். அதன் பின்னர்

ஸ்நானம் செய்யவேண்டும். பின்னர் வாஸுதேவனின் திருநாமத்தை உச்சரிக்கவேண்டும். அங்கு ரிஷிகளுக்கான ஸந்தர்ப்பணங்கள் செய்யவேண்டும். சந்த்ரனுக்கும், கணநாதனுக்கும் அது போன்று செய்யலாம். தங்களுடைய சக்திக்கு ஏற்ப தான தர்மங்களை, தங்களுடைய பாவம் நீங்குவதற்காகச் செய்யலாம்.

14. திலதாநம் விசேஷேண தஸ்மிந் தேசே ப்ரசஸ்யதே
தத்ர ஸ்நாநம் ச தாநம் ச ஸர்வபாபாபநோதநம்

பொருள் – அங்கு எள்ளைத் தானமாக அளிப்பது மிகவும் விசேஷமான பலனை அளிப்பதாகும். சந்த்ரபுஷ்கரிணியில் நீராடுதல், அங்கு தானம் செய்தல் ஆகியவை அனைத்து பாவங்களையும் அகற்றிவிடும்.

15. புரஸ்தாத் தஸ்ய தீர்த்தஸ்ய பில்வதீர்த்தம் மஹாமுநே
க்ருதாபசாரோ தேவஸ்ய புரா வைரோசநேர்மகே

பொருள் - சந்த்ரபுஷ்கரிணிக்கு எதிரில் பில்வ தீர்த்தம் என்பது உள்ளது (இது தற்போது குணசீலம் என்று வழங்கப்படும் க்ஷேத்ரமாகும்). மஹாமுனியான நாரதா! முன்னொரு காலகட்டத்தில் பலிச்சக்ரவர்த்தியும், சுக்ராச்சார்யரும் வாமனனின் விஷயத்தில் பெரும் அபசாரம் செய்தனர்.

16. உசநா கில தர்சாந்த்யை தத்ர தேபே மஹத்தப:
பில்வச்ச ஸ்தாபிதஸ்தத்ர ஸ்ரீகரஸ்ஸ ச தர்சநாந்

பொருள் - அந்த சுக்ராசார்யர், தனது அபசாரம் மூலம் ஏற்பட்ட பாவம் நீங்க இங்கு தவம் இயற்றினார். அவர் ஊன்றியதே இங்குள்ள பில்வ மரமாகும். இந்த மரத்தை ஒரு முறையாவது தரிசனம் செய்தால் அனைத்து செல்வங்களும் சேரும்.

17. தத்ரர்ஷி பார்க்கவோ ஜ்ஞேயோ தேவதாம் ச கவிஸ் ஸ்வயம்
ஸ்ரீநிவாஸேதி தேவஸ்ய தத்ர நாம ப்ரசஸ்யதே

Email:sridharan_book@yahoo.co.in

பொருள் – அந்த பில்வ தீர்த்தத்திற்கு பரசுராமர் ரிஷியாவார். சுக்ராச்சார்யர் தேவதை ஆவார். இங்கு ஸர்வேச்வரன் ஸ்ரீநிவாஸன் என்ற திருநாமத்தால் வணங்கப்படுகிறான்.

18. குமுதோ கணநாதச்ச தஸ்ய தீர்த்தஸ்ய ரக்ஷகௌ
    தத்ராபி ரஜதம் தேயம் ஹிரண்யம் ச விசேஷத:

பொருள் – அந்த பில்வதீர்த்தத்திற்குக் காவலாக குமுதன் மற்றும் கணநாதன் ஆகியோர் உள்ளனர். இந்த இடத்தில் தங்கம் மற்றும் வெள்ளியைத் தானமாக அளித்தால் விசேஷமாகும்.

19. அஸஹ்ய அநபசாராம்ச்ச க்ஷமதே தத்ர கேசவ:
    தத்ர ஸ்நாநம் ச தாநம் ச ப்ரஹ்மஹத்யாபதோஷம்

பொருள் - இந்த இடத்தில் வந்து வணங்கி நின்றால், எத்தகைய கொடிய பாவம் செய்திருந்தாலும் அதனைக் கேசவன் பொறுத்துக் கொள்கிறான். இங்கு ஸ்நாநமும் தானமும் செய்தால் ப்ரஹ்மஹத்தி (அந்தணர்கள், பசுக்கள் ஆகியவற்றைக் கொல்வதால் உண்டாகும் பாவம்) தோஷம் நீங்கிவிடும்.

20. ஆக்நேப்யாம் திசி தீர்தஸ்ய ஜம்பூஸ்திஷ்டதி மாமக:
    அஸச்சாஸ்த்ராண்யஹம் பூர்வம் ஆஜ்ஞாய பரமேஷ்டிந:

பொருள் – சந்த்ரபுஷ்கரிணிக்கு ஆக்நேய திசையில் ஜம்பு தீர்த்தம் உள்ளது (இது தற்போது திருவானைக்கோவில் ஆகும்). அங்கு நான் (சிவபொருமான்), நான்முகனின் ஆணைப்படி மனிதர்களை மயங்க வைக்கும் சாஸ்த்ரமான சைவ ஆகமங்களை இயற்றினேன்.

21. ப்ராணம்ய தத்ர தச்சாந்த்யை ப்ராதபம் தப உத்தமம்
    அஹிர்புத்நி: நிஷிஸ் தத்ர தேவதாஹம் மஹேச்வர:

Email:sridharan_book@yahoo.co.in

பொருள் - அப்படிப்பட்ட சாஸ்த்ரங்கலை இயற்றிய பாவத்தைப் போக்குவதற்காக நான் அங்கு தவம் இயற்றினேன். அந்தத் தீர்த்தத்தில் அஹிர்புத்நி என்பவர் ரிஷி ஆவார். நானே அங்கு தேவதையாக உள்ளேன்.

22. ஸுநந்தோ கணநாதச்ச நாமதேவஸ்ய சாச்யுத:
அந்நம் ப்ரதேயம் தத்ரைவ அச்யுத ப்ரீயதாம் இதி

பொருள் – அந்த தீர்த்தத்திற்கு ஸுநந்தர் மற்றும் கணநாநன் ஆகியோர் பாதுகாவலர்கள் ஆவர். அங்குள்ள ஸர்வேச்வரனின் திருநாமம் அச்சுதன் ஆகும். அங்கு அன்னதானம் செய்வதால் அச்சுதன் மிகவும் ப்ரீதி அடைகிறான்.

23. பக்த அபசாரம் அகிலம் ஸஹதே தத்ர வை ஹரி:
தத்ர ஸ்நாநம் ச தாநம் ச அபி அந்நதோஷ அபநோதநம்

பொருள் - அங்குள்ள அடியார்களின் பாவங்கள் அனைத்தையும் ஸ்ரீஹரி போக்குகிறான். இங்கு நீராடி, தானம் செய்வதன் மூலம் அன்னதோஷம் போன்ற அனைத்தும் நீங்கிவிடும்.

24. ததோ தக்ஷிணதோ வ்ருக்ஷ: திஷ்டதி அச்வத்த உச்சீரித:
கத்வா அஹல்யாம் தபஸ் தத்ர தேபே தேவ: சதக்ரது:

பொருள் - அங்கிருந்து தென் திசையில் சென்றால் அச்வத்த தீர்த்தம் என்பதைக் காணலாம் (இது தற்போது "தேவீ டாக்கிஸ்" என்று அழைக்கப்படும் பேருந்து நிலையத்தின் அருகில் உள்ளது). அஹல்யைக்கு இழைத்த பாவத்தைத் தொலைக்க இந்த்ரன் அங்கு தவம் இயற்றினான்.

25. ரிஷிஸ்து கௌதமோ நாம தேவதா பலஸூதந:
அநந்த நாம தேவஸ்ய தத்ர தீர்த்தே ப்ரசஸ்யதே

பொருள் - அந்த தீர்த்தத்தின் ரிஷி கௌதம முனிவர் ஆவார். பலஸூதன் தேவதையாக உள்ளான். இங்கு ஸர்வேச்வரன் அநந்தன் என்ற திருநாமத்துடன் உள்ளான்.

26. நந்தஸ்ய தஸ்ய தீர்த்தஸ்ய ரக்ஷகோ கணநாயக:
வஸ்த்ரதாநம் விசேஷண ஹி அநந்த: ப்ரீயதாம் இதி

பொருள் - அந்த தீர்த்தத்திற்கு நந்தன் மற்றும் கணநாயகன் ஆகிய இருவரும் காவலர்கள் ஆவர். இங்கு வஸ்த்ரதானம் செய்தால் அநந்தன் மிகவும் ப்ரீதி அடைகிறான்.

27. கந்யாதாநம் ப்ரசம்ஸந்தி பவேத் ப்ரீதயே அத்ர வை
ஆகம்ய கமநாத் பாபாத் தத்ர ஸ்நாத்வா விமுச்யதே

பொருள் - இங்கு கன்யாதானம் செய்தால் பகவத் ப்ரீதி பெறுவது உறுதியாகும். இந்தக் குளத்தில் நீராடுவதன் மூலம் மற்ற பெண்களைத் தீண்டிய பாவம் என்பது நீங்கிவிடும்.

28. ததோ தக்ஷிணத: பச்சாத் பலாச: திஷ்டதி த்ரும:
குஹோ மம ஸுதஸ்தத்ர தபஸா சக்திம் ஆப்தவாந்

பொருள் - அங்கிருந்து தென் திசையில் சென்றால் பலாச மரம் ஒன்றைக் காணலாம். இங்கு எனது புத்ரனாகிய குஹன் (ஸ்கந்தன்) தவம் இயற்றி மிகுந்த சக்தி பெற்றான்.

29. அஹிர்புத்நி: ரிஷி: தத்ர தேவதா ஷண்முகோ குஹ:
கோவிந்தேந ஹரேர்நாம பத்ரச்ச கணநாயக:

பொருள் - அங்கு உள்ள பலாச தீர்த்தத்திற்கு (இது இன்று ஜீயபுரம் என்பதாகும்) அஹிர்புத்நி முனிவரே ரிஷி ஆகிறார். எனது புத்ரனாகிய குஹன் என்ற ஆறுமுகன் தேவதை ஆவான். ஸ்ரீஹரி இங்கு கோவிந்தன் என்ற திருநாமத்துடன் வழிபடப்படுகிறான். இங்கு பத்ரனும் கணநாயகனும் காவலர்கள் ஆவர்.

30. கௌ: ப்ரதேயா விசேஷேண கோவிந்த: ப்ரீயதாம் இதி
தத்ர ஸ்நாநம் ச தாநம் ச ஸம்ஸர்க்க விநாசநம்

பொருள் - இங்கு கோதானம் (பசு தானம்) செய்தால், கோவிந்தன் மிகவும் ப்ரீதி அடைகிறான். இங்கு நீராடிவிட்டு தானம் செய்தால், கூடாத மனிதர்களுடைய நட்பின் மூலம் விளையும் பாவங்கள் நீங்குகின்றன.

31. ப்ரீதிச்யாம் திசி புந்நாகோ வித்யதே பாதபோத்தம:
கத்வா து க்ருத்திகா: பூர்வம் தத்ர தேவோ ஹிதாசந:

பொருள் - சந்த்ரபுஷ்கரிணியின் மேற்குத் திசையில் உத்தமமான புன்னாக வ்ருக்ஷம் ஒன்று உள்ளது (இது தற்போது மேலூரில் உள்ளது). முன்பு ஒருமுறை அக்னிதேவன் க்ருத்திகா தேவர்களைத் தீண்டினான்.

32. தத் தோஷ சாந்தயே தேபே தப: பரமதுச்சரம்
ரிஷிர்மரீசி: தத்ரோக்தோ தேவதா ஹவ்யவாஹந:

பொருள் - அதன் காரணமாக ஏற்பட்ட தோஷத்திற்குச் சாந்தி செய்வதற்காக அக்னிதேவன் அங்கு தவம் செய்தான். இந்த இடத்தின் ரிஷி மரீசி ஆவர். அக்னிதேவன் இங்கு தேவதையாக உள்ளான்.

33. ஸ்ரீபதிர்நாம தேவஸ்ய ஸுபத்ர: தீர்த்த ரக்ஷக:
க்ருதம் ப்ரதேயம் தத்ராபி ப்ரீணாதி ஸ்ரீபதி: ஸ்வயம்

பொருள் - இங்கு ஸர்வேச்வரன் ஸ்ரீபதி என்ற திருநாமத்தால் வணங்கப்படுகிறான். இங்கு ஸுபத்ரன் காவலுக்கு உள்ளான். இங்கு நெய் தானம் செய்வதன் மூலம் ஸ்ரீபதி மிகுந்த ப்ரீதி அடைகிறான்.

34. பரதார க்ருதாத் பாபாத் தத்ர ஸ்நாத்வா விசுத்யதி
தத உத்தரத: பச்சாத் பகுளத்ரும உச்ச்ரித:

பொருள் – மற்றவர் மனைவியைத் தீண்டிய பாவம் விலக இங்கு ஸ்நாநம் செய்யவேண்டும். இங்கிருந்து வடக்காகச் சென்றால் பகுள (வகுள) மரம் உள்ளது (இந்த

Email:sridharan_book@yahoo.co.in

இடம் தற்போது திருவானைக்கோவிலில் உள்ள இராணி மங்கம்மாள் மண்டபம் அருகில் உள்ளது).

35. ப்ருஹஸ்பதி: ரிஷி: தத்ர தேவதாநாம் புரோஹித:
தேவதா ச ஸஹஸ்ராக்ஷோ நாம விஷ்ணோச்ச மாதவ:

பொருள் - இங்கு ப்ருஹஸ்பதி என்பவர் ரிஷியாகவும், இந்த்ரன் தேவதையாகவும் உள்ளனர். இங்கு ஸர்வேச்வரனாகிய விஷ்ணு, மாதவன் என்ற திருநாமத்தால் வழங்கப்படுகிறான்.

36. சண்டகோ கணநாதச்ச த்ஸ்ய தீர்த்தஸ்ய ரக்ஷக:
தத்ர வாஸ: ப்ரதாத்தவ்யம் ஆயுஷ: அபிவிவ்ருத்தயே

பொருள் - இங்கு சண்டகன் மற்றும் கணநாதன் ஆகிய இருவரும் பாதுகாவலர்கள் ஆவர். தீர்க்கமான ஆயுள் பெறுவதற்கு இங்கு வஸ்த்ர தானம் செய்யவேண்டும்.

37. தத்ர ஸ்நாத்வா நர: சுத்யேத் கோவதாத் ஸ்த்ரீவதாத் அபி
கதம்ப உத்தரே வ்ருக்ஷ உத்தமோ நாம வை ஹரி:

பொருள் - இங்கு ஸ்நாநம் செய்வதன் மூலம் பசுக்களை வதைத்தல், பெண்களைக் கொல்லுதல் போன்ற பாவங்களில் இருந்து விடுபடலாம். இங்கிருந்து வடக்கே கதம்ப (கடம்ப) மரம் உள்ளது. இங்கு ஸர்வேச்வரன் உத்தமன் என்ற திருநாமத்துடன் உள்ளான் (இது உத்தமர்கோயில் எனப்படும் க்ஷேத்ரமாகும்).

38. ஈஜேஹி ஜநகஸ்தத்ர ஸ தஸ்மாத் ரிஷி உச்யதே
தேவதா பத்மயோநிச்ச கருடஸ்தீர்த்த ரக்ஷக:

பொருள் - இங்கு ஒருமுறை ஜனக மஹாராஜா தவம் இயற்றினார். ஆகவே இங்குள்ள தீர்த்தத்திற்கு ஜனகரே ரிஷியாகிறார். தாமரையில் தோன்றிய நான்முகன் தேவதையாகவும், கருடன் காவல் காப்பவனாகவும் உள்ளனர்.

39. தத்ர ம்ருஷ்டம் ப்ரதாத்தவ்யம் அந்நம் ஆரோக்ய வ்ருத்தயே
ப்ரதி க்ருஹ க்ருதாத் பாபாத் தத்ர ஸ்நாநவா விசுத்யதி

பொருள் - இங்கு அன்னதானம் செய்வதன் மூலம் ஆரோக்யம் நன்கு வளர்வது உறுதி ஆகும். க்ருஹஸ்தன் ஒருவன் அன்றாடம் செய்யும் பாவங்கள் அனைத்தும் இங்கு நீராடுவதன் மூலம் தொலைந்து, அவன் சுத்தி அடைகிறான்.

40. தத உத்தரத: பூர்வம் ஆம்ரஸ்திஷ்டதி பாதப:
ரிஷி: வஸிஷ்ட: தத்ரோக்தோ தேவதா ச திவாகர:

பொருள் - அங்கிருந்து வடக்கே சென்றால் மாமரம் ஒன்று உள்ளதைக் காணலாம் (இது லால்குடி பாதையில் உள்ள தாளக்குடி என்னும் இடமாகும்). இங்குள்ள தீர்த்தத்தின் ரிஷி வசிஷ்டர் ஆவார். இதன் தேவதை சூரியன் ஆவான்.

41. ஹ்ருஷீகேசேதி தேவஸ்ய தத்ர நாம ப்ரசஸ்யதே
விஷ்வக்ஸேநோ மஹாதேஜாஸ் தஸ்ய தீர்த்தஸ்ய ரக்ஷக:

பொருள் - இங்கு ஸர்வேச்வரன், ஹ்ருஷிகேசன் என்ற திருநாமத்தால் வணங்கப்படுகிறான். இங்கு மிகவும் தேஜஸ் பொருந்திய விஷ்வக்ஸேநர் காவலுக்கு உள்ளார்.

42. பூமிதாநம் ப்ரசம்ஸந்தி தத்ர ஸாம்ராஜ்ய ஸித்தயே
மாதாபித்ரு க்ருதாத் பாபாத் தத்ர ஸ்நாத்வா விசுத்யதி

பொருள் - இந்த இடத்தில் பூமிதானம் செய்வதன் மூலம் மிகப் பெரிய ஸாம்ராஜ்யம் போன்றவை கிட்டும். இங்கு ஸ்நாநம் செய்வதன் மூலம் தாய், தந்தைக்குச் செய்த பாவங்கள் அனைத்தும் நீங்கப் பெற்று தூய்மை அடையலாம்.

43. ஸர்வத்ரைவம்ருஷிம் தேவம் அதிதைவம் கணாதிபம்
ப்ரஹ்மாணம் ஸௌர்யம் இக்ஷ்வாகும் ராகவம் ச விபீஷணம்

44. உதகாஞ்ஜலிபி: ஸம்யக் த்வாம் ச மாம் சைவ தர்ப்பயேத்
ஜபஹோம அர்ச்சநம் தாநம் ததா ப்ராஹ்மண தர்ப்பணம்

45. தத் தந்நாம்நா ஹரே: குர்யாத் தத்ப்ரீதிம் காசிஷம் வதேந்
வாசயேத் ப்ராஹ்மணாம்ஸ் தத்ர தத் தத் ப்ரீத்யாசிஷம் புத:

பொருள் - இப்படியாக அனைத்து தீர்த்தங்களிலும் உள்ள பல ரிஷிகள், தேவர்கள், கணங்களின் அதிபதி, நான்முகன், சூரியன், இக்ஷ்வாகு, இராமன், விபீஷணன், நாரதனாகிய நீ, சிவனாகிய நான் ஆகிய அனைவருக்கும் ஏற்ற அர்க்யம் மற்றும் தர்ப்பணம், ஹோமம், அர்ச்சனை, தானம், ப்ராம்மண தர்ப்பணம் போன்ற பலவும் அங்கு செய்யப்படலாம். அப்போது அங்கு குறிப்பிட்ட ஸ்ரீஹரியின் திருநாமத்தை உச்சரிக்க வேண்டும். அவனது ப்ரீதியை அடையும் பொருட்டு அவற்றைச் செய்யவேண்டும். அங்குள்ள அந்தணர்களின் நல்லாசியையும், மகிழ்வையும் பெறவேண்டும்.

46. ஸர்வத்ரைவ காவேர்யாம் ஸ்ரீரங்கேசம் விசேஷத:
ஸ்நாநகாலே ஜபேந் மந்த்ரம் ஸாமசாகாஸு சோதிதம்

பொருள் - மற்ற இடங்களில் உள்ள காவேரி நதியைக் காட்டிலும் ஸ்ரீரங்கத்தில் உள்ள காவேரி நதி மிகவும் விசேஷமானதாகும். காவேரியில் ஸ்நாநம் செய்யும்போது ஸாமவேதத்தில் உள்ள மந்த்ரத்தை உச்சரித்தபடி ஸ்நாநம் செய்யவேண்டும் (இது அடுத்த ச்லோகத்தில் உள்ளது).

47. யத்யத் தீவ்ரம் துஷ்க்ருதம் யத் ச கிஞ்சித் சாரீரம் யந் மாநஸம் வாசிகம் வா
ஸத்ய: புநீஹி பயஸாம்ருதேந கவரேகந்யே மம கர்ம யச்ச

பொருள் – காவேரி கன்னியே! நான் எனது சரீரம், மனம், சொல் ஆகியவற்றின் மூலம் செய்த சிறு பாவங்களையும் நீ அருள் கூர்ந்து நீக்கி, என்னைத் தூய்மைப்படுத்தவாயாக. அவற்றை முற்றிலுமாக நீக்கி, எனக்கு மகிழ்ச்சி அளிப்பாயாக.

48. நாராயணீய சாகாயாம் த்ருஷ்டேயம் வேதஸா ஸ்வயம்
ப்ரசம்ஸா ஸஹ்ய கந்யாயா: பும்ஸாம் பாபாபநுத்தயே

பொருள் - இந்த மந்த்ரமானது ஸாமவேத நாராயணீய ஸாகையில் உள்ளதை நான்முகன் பார்த்தான். இது மனிதர்களின் பாவங்களை விலக்கி, தூய்மை அளிக்கவல்ல ஸஹ்ய மலையில் உதிக்கின்ற காவேரியைப் போற்றுவதாக உள்ளது. இதன் ரிஷி நான்முகனே ஆவான்.

49. அஷ்டதீர்த்த ஸமீபே தாம் அஷ்டவ்ருக்ஷோப சோபிதாம்
ஜுஷ்டாம் ச விஷ்ணுநா புண்யாம் சந்த்ரபுஷ்கரிணீம் சுபாம்

பொருள் - சந்த்ரபுஷ்கரிணியானது எட்டு தீர்த்தங்கள் மற்றும் எட்டு உயர்ந்த வ்ருக்ஷங்களால் சூழப்பட்டுள்ளது. அந்த இடத்தில் மஹாவிஷ்ணுவின் இருப்பு என்பது புண்ணியத்தை அளிப்பதாக உள்ளது.

50. த்ருஷ்ட்வா ஸ்ப்ருஷ்ட்வா ததா ஸ்நாத்வா பீத்வா ஸம்ப்ரோக்ஷ்ய புந:
கீர்த்தயித்வா ததா ச்ருத்வா முச்யதே ஸர்வ கில்பிஷை:

பொருள் – சந்த்ரபுஷ்கரிணியைப் பார்த்தல் (தரிசித்தல்), தொடுதல், நீராடுதல், அந்த நீரைப் பருகுதல், அந்த நீரை மேலே ப்ரோக்ஷித்துக் கொள்ளுதல், அதனைப் பற்றிப் பெருமையாக உரைத்தல் ஆகிய அனைத்தையும் செய்பவன் பாவங்கள் நீங்கி மோக்ஷம் பெறுகிறான் என்றே கூறப்படுகிறது.

51. அந்யத்ராபி ப்ரதேஷு யத்ர ருத்ர ஜலாசயே
சந்த்ரபுஷ்கரிணீத்யுக்த்வா ஸ்நாத்வா தஸ்யார்த்த் பாக்பவேத்

பொருள் - எந்த ஒரு நீர் நிலையில் நீராடும்போதும் சந்த்ரபுஷ்கரிணியை எண்ணியபடியோ அல்லது "சந்த்ரபுஷ்கரிணி" என்று உச்சரித்தபடியோ நீராடினால், அவன் சந்த்ரபுஷ்கரிணியில் நீராடும் பாதி பலனை அடைகிறான்.

52. ஏதேஷ் ஸர்வதீர்த்தேஷு ஏகாஹ்நோவ ப்ரதக்ஷிணாம்
ஸ்நாத்வா ப்ரணம்ய ரங்கேசம் புநாநி தசாபூருணாந்

Email:sridharan_book@yahoo.co.in

பொருள் - யார் ஒருவன் ஒரே நாளில் எட்டு புண்ணிய தீர்த்தங்களையும் வலம் வந்து, அவற்றில் நீராடி, அதனைத் தொடர்ந்து ஸ்ரீரங்கநாதனைத் தரிசிக்கிறானோ அவன் தனது பத்து மூதாதையார்களைப் பாவத்திருந்து விடுவிக்கிறான்.

53. ஏகாதச்யாம் உபோஷ்யைவ த்வாதச்யாம் ஸ்நாநம் ஆசரேத்
தாரயேதாத்மநோ வம்ச்யாந் ஸப்தஸப்தஜ ஸப்த ச

பொருள் - ஏகாதசி உபவாசம் இருந்து, த்வாதசி அன்று இந்த எட்டு தீர்த்தங்களிலும் நீராடினால், அவன் தனது 21 மூதாதையர்களைக் கரையேற்றுகிறான்.

54. ஏதேஷு பிண்டதாநம் ச சயா ச்ராத்தாதிகம் பவேத்
அயி கோக்ராஸ மாத்ரேண மாதந்தே பிதரோ திவி

பொருள் – இந்த தீர்த்தங்களில் அளிக்கப்படும் பிண்டங்கள், கயா ச்ரார்த்தத்தைக் காட்டிலும் மேலானவை ஆகும். இந்த இடங்களில் பசுக்களுக்கு சிறிதளவு உணவு அளித்தாலும், பித்ருக்கள் மிகவும் மகிழ்வர்.

55. ஏதத் ஸ்ரீரங்கமாஹாத்ம்யம் மயோக்தம் தவ நாரத
ஏதாவதேவ வக்த்வயம் ச்ரோதவ்யம் ச மஹாமுனே

பொருள் - மஹாமுனியான நாரதா! இப்படியாக என்னால் உனக்கு ஸ்ரீரங்கமாஹாத்ம்யம் உரைக்கப்பட்டது. இந்த அளவு மட்டுமே இது கேட்கப்பட வேண்டும். இந்த அளவு மட்டுமே இது உரைக்கப்படவேண்டும்.

56. ஆவிர்பாவ ப்ரப்ருத்யே ததா கல்பாந்தம் விசேஷத:
ஏதத் ஸ்ரீரங்கவ்ருத்தாந்த: கச்சித் ஸம்யக் ச்ருதஸ் த்வயா

பொருள் - தொடக்கம் முதலாக இந்தக் கல்பத்தின் முடிவில் நடப்பது வரையிலாக நிகழ்வுகளுடன் கூடியதான ஸ்ரீரங்கமாஹாத்ம்யத்தை நான் உனக்கு உரைத்தேன். நீ இதனை நன்றாகக் கேட்டாயா?

57. கச்சித் வ்யவஸிதச்சார்த்த ஸந்தேஹோ விகதஸ்தவ
கச்சித் ஜ்ஞாதா பகவதோ வ்யாப்திர் விஷ்ணோர் மஹாத்மந:

பொருள் - இப்போது கூறப்பட்டவை அனைத்தும் சந்தேகம் ஏதும் இன்றி உன்னால் அறியப்பட்டதா? அனைத்து ஐயங்களும் உனக்கு நீங்கியதா? மஹாவிஷ்ணுவின் எங்கும் நிறைந்த தன்மை உன்னால் அறியப்பட்டதா?

58. நமோஸ்து தே மஹாதேவ க்ருதக்ருத்ய: அஸ்மி ஸாம்ப்ரதம்
ஸர்வஜ்ஞஸ் த்வம் தயாளுஸ் த்வம் தஸ்மாத் ஏதத்வயோதிதம்

பொருள் - நாரதர் சிவனிடம், "மஹாதேவா! உனக்கு எனது நமஸ்காரங்கள் உரித்தாகுக. அறியவேண்டியதை நான் தெளிவாக அறிந்து கொண்டேன். நீ அனைத்தும் அறிந்தவன், கருணையே வடிவானவன், இதன் காரணமாகவே எனக்கு இதனை முழுமையாக உரைத்தாய்", என்று தொடங்கினார்.

59. ச்ருதம் ஏதத் சேஷேண மமைகாக்ரேண சேதஸா
ச்ரோதவ்யம் நாந்யதஸ்தீஹ நமஸ்துப்யம் நமோ நம:

பொருள் - நீ கூறிய அனைத்தையும் நான் முழுமையாக நன்றாகக் கேட்டறிந்தேன். நான் மேலும் கேட்க வேண்டிய மீதம் ஏதும் இல்லை. உனக்கு எனது நமஸ்காரம் - என்றார்.

60. ய ஏதத் ரங்கமாஹாத்ம்யம் வைஷ்ணவேஷ்வபி தாஸ்யதி
ஸ விஷ்ணு ப்ரீணயத்யாசு ஸர்வகாம பலப்ரதம்

பொருள் - சிவபெருமான் கூறத் தொடங்கினார்: இந்த ஸ்ரீரங்கமாஹாத்ம்யத்தை யார் ஒருவன் ஸ்ரீவைஷ்ணவர்களுக்கு உரைக்கிறானோ, அவன் மஹாவிஷ்ணுவான ஸ்ரீரங்கநாதனைக் குளிர வைக்கிறான். அவனுடைய விருப்பக்கள் அனைத்தும் ஸ்ரீரங்கநாதனால் நிறைவேற்றி வைக்கப்படுகின்றன.

61. ய ஏதத் கீர்த்தயேந் நித்யம் நர: பர்வணி பர்வணி
ஆப்தோர்யா மஸ்ய யஜ்ஞஸ்ய பலம் ப்ராப்நோதி புஷ்கலம்

பொருள் - யார் இதனை ஒவ்வொரு பர்வகாலத்திலும் படிக்கிறார்களோ, அவர்கள் ஆப்தோர்யாம யஜ்ஞம் செய்யும் பலனை முழுவதுமாகப் பெறுகிறார்கள்.

62. தஸ்மிந் நிதௌ விசேஷேண ஸந்திதௌ வா முரத்விஷ:
வைஷ்ணவாநாம் ஸமாஜே வா கீர்த்தயித்வா ஸுகீ பவேத்

பொருள் - என் முன்பாகவோ, மஹாவிஷ்ணு முன்பாகவோ அல்லது ஸ்ரீவைஷ்ணவர்கள் கூடியுள்ள இடத்திலோ இந்த ஸ்ரீரங்கமாஹாத்ம்யம் படிக்கப்பட்டு, விவரிக்கப்பட்டால் அந்த மனிதன் உயர்ந்த சுகம் பெறுகிறான்.

63. நாஸ்திகாய ந வக்தவ்யம் ந அபாகவத ஸந்நிதௌ
ந சாச்ரூஷவே வாக்யம் ந விஷ்ணும் ய: அப்யஸீயதி

பொருள் - பாகவதர்கள் அல்லாத இடங்களிலும், நாஸ்திகர்களுக்கும், குருவிற்கு எந்தப் பணிவிடையும் செய்யாதவனுக்கும், விஷ்ணுவை வெறுப்பவனுக்கும் இந்த ஸ்ரீரங்க மாஹாத்ம்யத்தை உரைத்தல் கூடாது.

64. ந ச சூத்ராய வக்த்வ்யம் த்வேவ தநகாங்க்ஷயா
நைவாலஸாய (நாலஸாய) ப்ரதம்பாய நாஸூயாய விசேஷத:

பொருள் – இதனை சூத்திரர்கள், சோம்பேறிகள், வஞ்சத்துடன் கூடியவர்கள், செல்வத்தின் பின்னே மட்டும் செல்பவர்கள், பொறாமை கொண்டவர்கள் போன்றவர்களுக்கு உரைத்தல் கூடாது.

65. ந வக்தவ்யம் ந வக்தவ்யம் ந வக்தவ்யம் மஹாமுநே
ச்ரோதவ்யம் ச த்விஜ ச்ரேஷ்டாத் விஷ்ணுபக்தாத் விபச்சித:

பொருள் - மேலே கூறப்பட்டவர்களுக்கு இதனைக் கூறக்கூடாது, இதனைக் கூறக்கூடாது, இதனை கூறக்கூடாது. இரண்டு முறை பிறவி கொண்ட அந்தணர்களில் உயர்ந்த விஷ்ணுபக்தனுக்கு இதனை உரைக்கலாம்.

66. ஜிதேந்த்ரியாத் ஜித க்ரோதாத் நிஸ்ப்ருஹாந் நிருபத்ரவாத்
ச்ருத்வைதம் ரங்கமாஹாத்ம்யம் விஷ்ணுபக்தோ விமத்ஸர:

பொருள் - புலன்களை வென்றவன், கோபத்தை அடக்கியவன், உலகியல் இன்பங்களை நாடாதவன், எந்தத் தடைகளும் அற்றவன் போன்றுள்ளவனே இந்த ஸ்ரீரங்க மாஹாத்ம்யத்தை உரைப்பதற்கு ஏற்றவன் ஆவான். அதன் பின்னர் அவன் விஷ்ணு பக்தனாகி, தற்பெருமை போன்றவற்றை விலக்குகிறான்.

67. ஜித்வா க்ரோதம் ச காமம் ச விஷ்ணுமாப்நோதி சாச்வதம்
படந் ச்ருண்வந் ததா விப்ரோ விதுநாம் அக்ரணீர்பவேத்

பொருள் – அதன் பின்னர் அவன் கோபத்தை வெல்கிறான், காமத்தை அடக்குகிறான், விஷ்ணுவின் உயர்ந்த எப்போதும் உள்ள பரமபதத்தை அடைகிறான். இந்த ஸ்ரீரங்க மாஹாத்ம்யத்தைப் படிப்பவர்கள், கேட்பவர்கள் என்றுள்ள அந்தணர்கள் மிகவும் உயர்ந்த வித்வான்கள் ஆகின்றனர்.

68. க்ஷத்ரியோ லபதே ராஜ்யம் வைச்யச்ச தநஸம்பத:
சூத்ரோபி பகவத் பக்திம் யோதகோ விஜயீ பவேத்

பொருள் - இதனைப் படிப்பவர்களும், கேட்பவர்களும் க்ஷத்ரியனாக இருந்தால் ராஜ்யத்தையும், வைசியர்களாக இருந்தால் செல்வத்தையும், சூத்திரர்களாக இருந்தால் விஷ்ணு பக்தியையும் பெறுவர். அவர்கள் யுத்தத்திற்குச் செல்பவர்களாக இருந்தால் வெற்றியுடன் திரும்புவர்.

69. கர்ப்பிணி ஜநயேத்புத்ரம் கந்யா விந்ததி ஸத்பதிம்
ச்ருண்வந் படந் லிகந் பிப்ரத் ரங்கமாஹாத்ம்யம் உத்தமம்

70. முக்த்வா சுபாசுபே யாதி தத் விஷ்ணோ: பரமம் பதம்

பொருள் – இதனைக் கேட்கும் (படிக்கும்) கர்ப்பிணிகள் சிறந்த குழந்தையைப் பெறுவர். இதனைக் கேட்கும் கன்னிப்பெண்கள் சிறந்த கணவனைப் பெறுவர். யார் ஒருவர் இந்த உயர்ந்த ஸ்ரீரங்கமாஹாத்ம்யத்தைக் கேட்கிறார்களோ, படிக்கிறார்களோ அல்லது எழுதுகிறார்களோ அவர்கள் அனைத்து பாவபுண்ணியங்களில் இருந்து விடுபட்டு, மிகவும் உயர்ந்த இடமான விஷ்ணுவின் பரமபதத்தை அடைவது உறுதியாகும்.

ஸ்ரீமத்ப்ரஹ்மாண்ட புராணத்தில் உள்ள ஸ்ரீரங்கமாஹாத்ம்யத்தின் பத்தாம் அத்யாயம் ஸம்பூர்ணம்

ஸ்ரீமத்ப்ரஹ்மாண்ட புராணத்தில் உள்ள ஸ்ரீரங்கமாஹாத்ம்யம் ஸம்பூர்ணம்

அழகிய மணவாளன் திருவடிகளே சரணம்
தஞ்சமடைந்த நம் இராமாநுசன் திருவடிகளே தஞ்சம்

Email:sridharan_book@yahoo.co.in